# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



ஸ்ரீ மீனாட்சியம்மை, மதுரை.

மாலை 13] விரோதிகிருது - வைகாசி - மே - 1971 [மணி 8

48/71

155

தமிழ் நாடு அரசின் அறநிலைய



கோடம்பாக்கம், புலியூர் ஸ்ரீ வேங்கீசுவரர் கோயிலில், சென்னை நகரத் தந்தை மேதகு திரு. சா. கணேசன், B.A. அவர்களும், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம். கண்ணப்பன் அவர்களும், வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல் (8—4—71).

## பொருளடக்கம்


1. திருவிசைப்பா-சாத்திரநோக்கு
2. அனந்தாழ்வான்
3. மகாபாரதம்
4. ஸ்ரீ பசவேசுவரரும் திருவள்ளுவரும்
5. திருவரங்கம் கோயில்
6. திருவையாற்றில் திருக்குட முழுக்கு விழா
7. ஆதிச்செல்வன்
8. இராம காவியம்
9. ஸ்ரீ வைஷ்ணவம்
10. இராமாயண நுண்பொருள்
11. எட்டு நாண்மலர்
12. பதிமுதுநிலை
13. இன்னும்பன் நூற்றுண்டிரும்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்



ஆண்டுச் சந்தா ரூ. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்





| மாலை 13 | விரோதிகிருது — வைகாசி — மே, 1971 | மணி 6 |
|---|---|---|


# திருவிசைப்பா—சாத்திரநோக்கு *


ந.ரா.முருகவேள், M. A., M. O. L..


## முன்னுரை :

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாவதாகத் தொகுக்கப்பட்டுத் திகழ்வது, **திருவிசைப்பா** எனப்பெறும். சேந்தனர் இயற்றிய **திருப்பல்லாண்டு** என்பதும், இதனைச் சேர்ந்த ஒரு தனித் திருப்பதிகம் ஆகும். திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டிருப்பதற்கு ஏற்ப, அதனைப் பாடிய ஆசிரியர்களும் ஒன்பதின்மராக உள்ளனர். அவர்கள் முறையே திருமாளிகைத்தேவர், சேந்தனர், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனர், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்போராவர். இவர்கள் ஒன்பதின்மரும் பாடியுள்ள திருப்பதிகங்கள் 29; பாடல்கள் 301 ஆகும். இசைநலம் செறிந்த எழிலுடையனவாதல் பற்றியும், இறைவனது 'பொருள்சேர் புகழ்' ஆகிய இசையினை எடுத்து விளக்குவனவாதல் பற்றியும், கவிதை நலம்சான்ற இத்திருப்பதிகங்களுக்குத் **திருவிசைப்பா** என்னும் சிறப்பியற் பெயர் வழங்குவதாயிற்று.

---

* திருவாவடுதுறை ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாணையின் வண்ணம் திருவிடைமருதூரில் நிகழ்ந்த திருமுறைக் கருத்தரங்க விழாவிற் கலந்துகொண்டு நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (13—3—71).

—**ஆசிரியர்.**

148685
Q2m24, N59TK N71·13·6



## கவிதையும் தத்துவமும் :

கவிதைக்கும் தத்துவத்திற்கும், மிகமிக நெருங்கிய தொடர்பு உண்டு. ''கவிதையானது, வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்து தோன்றுகின்றது; வாழ்க்கைக்கு உரியதாக விளங்குகின்றது; வாழ்க்கையை வளப்படுத்தும் குறிக்கோள் கொண்டது; வாழ்க்கையின் குறை நிறைகளை ஆராய்ந்துஉணர்த்தித் திருத்திச் செம்மைப் படுத்துகின்றது''[1].

தத்துவம் என்பதும் இத்தகைய ஒன்றேயாகும். தத்துவமும் வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்தே உருவாகித் தோன்றுகின்றது; வாழ்க்கையைப் பற்றியதாக, வாழ்க்கை உணர்வுகளின் பிழிவாக, வாழ்க்கையை வளப்படுத்தும் குறிக்கோள் உடையதாக, விளங்குகின்றது. வாழ்வின் குறை நிறைகளை உணர்ந்து திருந்தி உய்யமுயலும் சீரிய நல்லுணர்வே, சிறப்பாகத் தத்துவஞானம் என்று திறந்தெரிந்து பாராட்டப்பெறுகின்றது. இவ்வாற்றால் தெய்விகநலம் சான்ற கவிதைக்கும், மெய்யுணர்வாகிய தத்துவஞானத்திற்கும் இடையேயுள்ள, இயைபு ஒற்றுமைகளை யாவரும் இனிது உணரலாம்.

''சிறந்த தத்துவஞானியல்லாத எவரும், ஒருபெரும் சீர்த்தி மிக்க கவிஞராக விளங்கியதில்லை''[2]. என்று, கோல்ரிட்ஜ் என்னும் அறிஞர் கூறுவர். ''ஓர் உயர்ந்த உண்மைத் தத்துவத்தினை, எவ்வாற்றாலேனும் விளக்காத கவிதையினை இயற்றும் ஆசிரியர் எவரையும், யான் மதிப்பதில்லை''[3]. என்று ஜேம்ஸ்லோவல் என்னும் அறிஞர் இயம்புவர். ''தத்துவத்திற்கே முதலிடம், அதனை அடுத்தே அதன் உயர்ந்த விளைவாகிய கவிதைக்கு இடம்''[4]. என்று இராபர்ட் ப்ரவுனிங் என்னும் கவிஞர் குறிப்பிடுவர். ''தமது கவிதைகளைக் கற்பவர்பால் தத்துவ மனப்பான்மையைத் தூண்டித் தோற்றுவிக்கும் அளவைப் பொறுத்தே, கவிஞர்களின் சிறப்பும் பெருமையும் அமைகின்றன''[5]. என்று எமர்சன் என்னும் பேரறிஞர் மொழிவர். இங்ஙனம் கவிதைக்கலைக்கும் தத்துவக்கலைக்கும் இடையே உள்ள மிக நெருங்கிய தொடர்பினை, அறிஞர்கள் பலரும் வலியுறுத்திக் கூறுதல் காணலாம்.

## உபநிடதக் கதை :

இவ்வாறு கவிதைக்கும் தத்துவத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு எனினும், அவைகளுள் ஒன்றினின்று மற்றொன்றைத் தனியே பிரித்தெடுத்துக் காட்டுதல் அரிது. ஆதலின் திருவிசைப்பாப் பாடற்றொகுதியினின்று, 'இதோ! தத்துவக்கருத்துக்களைக் காண்மின்கள்' என்று தனியே பிரித்தெடுத்துக் காட்டுதல் என்பது, எளிதின் இயலாத கடினமான செயலேயாகும்.

---

*(1)* "Poetry is made out of life, belongs to life, exists for life. It is important, therefore, to hold fast to this that poetry is at bottom a criticism of life; that the greatness of a poet lies in his powerful and beautiful application of ideas to life-to the question: How to live?"

—Matthew Arnold.

(2) ''No man was ever yet a great poet without being at the same time a profound philosopher''

—S. T. Coleridge.

*(3)* ''No poem ever makes me respect its author which does not in someway convey a truth of philosophy"

—James Lowell.

*(4)* ''Philosophy first, and Poetry which is its highest outcome afterwards.''

—Robert Browning

*(5)* "The great poets are judged by the frame of mind they induce''.

—Ralph Waldo Emerson

தத்துவம் என்பது, தனி ஒரு பொருளாய், உருவொடுகூடி ஒளிர்வதொன்றன்று. ''குடத்துள் விளக்கும், தடற்றுள் வாளும்போல, ஈது காண்மின்'! என்று காட்டலாகாத பொருள், தத்துவம்! எல்லாம்வல்ல இறைனைப்போல, அது கருதுவார் கருதும் உருவமும் இயல்பும் பெற்றுத் திகழ்வது. ஆதலின் திருவிசைப்பாப் பாடல்களில், தத்துவ நுட்பங்களைத் தனி ஒரு தொகுப்பாக அல்லாமல், அவரவர் தத்தம் மனப்பான்மைக்கும், சிந்தனைப் போக்கிற்கும் ஏற்பக் காண்டல் கூடும்.

இவ்வுண்மையினைக் குறிப்பிடுங்கால், உபநிடதத்திற் கூறப்படும் கதை ஒன்று, நினைவுக்கு வருகின்றது. ஒரு சமயம் தேவரும் அசுரரும் மனிதரும், பிரமனிடம் அறிவுரைபெறச் சென்றனர். பிரமன் எல்லோருக்கும் பொதுப்படத் 'த' என்ற ஒரே எழுத்தைக் கூறினர். அதனைக் கேட்ட தேவர்கள், ''நாம் காமம் மிக்கவர்கள். நமக்குச் சுகபோகங்களில் ஆசை மிகுதி. ஆதலின் நமக்குத் **தமம்** (புலனடக்கம்) தேவை என்று அறிவுறுத்துகின்றார்'' எனக் கருதிக் கொண்டனர். அசுரர்களோ, ''நாம் கோபமும் கொடுமையும் உடையவர்கள். ஆதலின் நமக்குத் **தயை** (இரக்கம்) என்னும் பண்பு வேண்டும் என்று போதிக்கின்றார்'' எனச் சிந்தித்துக் கொண்டனர். மனிதர்கள் ''நாம் உலோபிகள். பணப்பித்து மிகுந்தவர்கள். ஆதலின் **தானம்** (அறச்செயல்) புரியுங்கள் என்று நமக்குப் பணித்தருள்கின்றார்'' என்று உன்னித்து உணர்ந்துகொண்டனர் என்பது, அந்த உபநிடதக் கதை. 'த' என்னும் ஒரே எழுத்தொலிக்கு, அவரவர்கள் தத்தம் இயல்புக்கும் மனநிலைக்கும் ஏற்றபடி பொருள் செய்து கொண்டனர். அதுபோலவே நாமும் நம்முடைய இயல்பிற்கும் மனநிலைகளுக்கும் ஏற்றபடி, திருவிசைப்பாப் பாடல்களில் தத்துவ நோக்குக்கொண்டு ஆராய்ந்து, பல நுட்பங்களை உணர்தல் கூடும். அம்முறையில், இங்கு ஒருசில கருத்துக்களை மட்டும், இயன்ற அளவு முயன்று காண்போம்.

## சோபான நெறி :

(1) இறைவன் உயிர்களைப் படிப்படியாக, முறைமுறையே ஆட்கொண்டருளி முன்னேற்றுகின்றான். ஒரு தாய்க்குத் தன் குழந்தையின் மீது, எவ்வளவுதான் அன்பும் பரிவும் இருந்தாலும், அவள் அதற்குச் சிறிது சிறிதாகவே பாலூட்டியும், பொருந்தும் உணவு அருத்தியும், முறை அறிந்து அதனை வளர்த்து வருவாள். ஒரு சிறிய குழந்தையின் வாயில் ஒரு பெரிய இலட்டுருண்டையைத் திணிக்க முற்படாள். இருளிலேயே நெடுங்காலம் அழுந்திக்கிடந்த ஒருவனது கண்கள், திடும் எனச் சூரியனது பேரொளியைக் காணநேரின், மிகக் கூசி இடர்ப்பட்டுப் பழுதடைந்துபோகும். ஆதலின் அவற்றிற்குச் சிறிது சிறிதாகவும், படிப்படியாகவுமே ஒளியைக்காட்டி யுணர்த்தி, நலப்படுத்துதல் வேண்டும். இம்முறைமை பற்றியே, இறைவனும் உயிர்களை அவற்றின் தகுதி நோக்கிப் படிப்படியாக ஆட்கொண்டருளுகின்றான்.

இவ் உண்மையினையே ''தையலார் மையலிலே தாழ்ந்து விழக்கடவேனைப், பையவே கொடுபோந்து பாசம் எனும் தாழ்உருவி உய்யும் நெறி காட்டுவித்திட்டு, ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே'' என மணிவாசகரும் அருளிச் செய்தார்.

இறைவன் இங்ஙனம் தன் அடியார்களைப் பையப்பைய, மெல்லமெல்லப் படிமுறையின் ஆட்கொள்ளும் தன்மையினைச் '**சோபான நெறி**' எனத் தத்துவ நூல்கள் சாற்றும். கண்ணப்பர் காளத்தி மலையின்மீதுஏறிக் குடுமித்தேவரை அடைந்தமையினை,

''நாணனும் அன்பும் முன்பு
நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்கள் என்னும்
பெருகு சோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல ஐயர்
நீள்நிலை மலையை ஏறி
நேர்படச் செல்ல லுற்றார்''

எனச் சேக்கிழார் கூறியிருக்கும் திறனும், இங்கு நாம் சிந்திக்கற்பாலது. திருநாவுக்கரசர் பெருமானும் ''பேணித் தொழுமவர் பொன்னுலகு ஆளப் பிறங்கு அருளால் ஏணிப்படிநெறி இட்டுக் கொடுக்கும் ஐயாறன் அடித்தலமே'' எனத் திருவாய் மலர்ந்திருத்தல் காணலாம்.

இவ்வடிப்படையிலேயே, 'குணம் என்னும் குன்றேறி நின்றார்' என்பதுபோலச், சித்தாந்த சைவம் என்னும் தத்துவச் சிகரத்தின் உச்சியிற் சென்று நிற்க விழைவோர், ''புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம்புக்கும், புகல்மிருதி வழி உழன்றும், புகலும் ஆச்சிரம அறத்துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும், அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத சிரப்பொருளை மிகத் தெரிந்தும் சென்றால், சைவத் திறத்தடைவர்; இதிற் சரியை கிரியா யோகம் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்'' என்று, சிவஞான சித்தியார் என்னும் சைவச் சாத்திர நூல் சாற்றுகின்றது.

நமது திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த முனிபுங்கவராகிய ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள், ''மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்து, நன்னெறி யாகிய ஞானத்தைக் காட்டி அல்லது மோட்சத்தைக் கொடா'' எனவரும் சிவஞானபோத ஏதுவினை விளக்கியருளுங்கால்,

''முதல்வன் வியாபகமாய் நின்றவாறே விளக்கினும், ஆன்மாக்களின் அறிவு தூல அறிவாதலின் அவ்வாறு விளங்கமாட்டாது, தத்தமக்கு ஏற்ற சோபான முறையே, சிறிது சிறிதாக ஏகதேசமாய் விளங்கிவிளங்கி மேம்பட்டு வந்தே, பின்னர் வியாபகமாய் விளங்கும்'' என்றும்;

''செம்பொன் மேருமால் வரையைத் தலைப்படலுறுவார், தென்றிசையினின்றும் வழி வினவிக் கொண்டுசென்று, நாவலந் தீவிற் பாரதவருடம் எய்தி, அங்கிருந்து கிம்புருடவருடம் சென்று, அதன்பின் அரிவருடம் அடைந்து, அங்கிருந்து இளாவிருதம் சென்று, அதன்பின் இடையீடின்றி மேருமால் வரைக்கே சென்று சேர்தல்போல, வீடு பேறு விழைவோர் அனைவரும் அவ்வச் சமயந்தோறும் உள்ளன ஆகிய நூல்களைக் கற்றுணர்ந்தும், அவ்வந் நெறிகளில் நின்றொழுகியுமே, இறுதியில் ஞானம் கைவரப் பெற்று வீடுபேறு எய்துவர்'' என்றும், தமது சிவஞானப் போதப் பேருரையில் விளக்குவர். அப்பகுதிக்குச் சான்றாக அவர்,

''பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென்று ஏறிச்
சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி
தெரியினும் தெரிவுரு வண்ணம்,
எந்தையும் தாயும் யானுமென் றிருப்பன்
எண்ணில்பல் லூழிகள் உடனாய்,
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே''

என்னும் கருவூர்த் தேவரின் திருவிசைப்பாச் செய்யுளையே, மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்.

## திருவேடச்சிறப்பு :

(2) சிவபிரானது திருவருளைப் பெற விரும்புபவர் அனைவரும், சிவனடியார்களையும் சிவாலயத்தையும் சிவன்எனவே கொண்டு வழிபடுதல்வேண்டும் என்று, சிவஞானபோதம் சிவ

ஞானசித்தியார் முதலிய நூல்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. சிவனடியார்களை வழிபடுவது மட்டும் அன்றி, அவர்களின் திருவேடத்தையும் கூடச் சிவன்எனவே கண்டு வழிபடுதல் இன்றி யமையாததென்று, அந்நூல்கள் வற்புறுத்தி அறிவுறுத்துகின்றன.

ஆனால், இந்நாளில் ஒருசிலர் ''யாம் உண்மை அடியவர்களையே வணங்குவோம், போலிவேடம் பூண்ட பொய்யர்களை வணங் கோம்'' என்று கூறுவர். ஒருவரைப் பொய்யரா மெய்யரா என்று எங்ஙனம் ஆராய்வது? மெய் யரைப் பொய்யராகவும், பொய்யரை மெய்ய ராகவும், நாம் நம் அறியாமையால் மயங்கிப் பிறழ உணர்ந்துகொண்டால், என் செய்வது? மெய்யரா பொய்யரா என்று ஆராய்ந்து அறிதலிலேயே காலத்தைக் கழித்துவிட்டால், நாம் வழிபாடு செய்வது எப்போது? எப்படி? இனி, பிறரைப் பொய்யரா மெய்யரா என ஆராய்தற்கு நாம் யார்? நமக்கு என்ன தகுதி உள்ளது? நம்மை நாமே மெய்யரா பொய்யரா என்று அறிந்துகொள்ள வாய்ப்பில்லையே, பிறரை ஆராய்ந்து அறிவது எங்ஙனம்?

எனவே, ''அடியர் என வருவோர், மெய்யரே ஆயினும் ஆகுக! பொய்யரே ஆயி னும் ஆகுக! நாம் நீதிபதிகள் அல்லோம். எனவே அவ் ஆராய்ச்சியில் நாம் தலைப்படுதல் வேண்டா. அவர்தம் நிலையினை இறைவன் அறிந்துகொள்வான். அதற்கு ஏற்ற பயனை அவர்களுக்கு அவன் தருவான். அவர்கள் அணிந்துள்ள கல்லாடையும், உருத்திராக்கமும், திருநீறும் சிவ சின்னங்கள். ஆதலின் அவ் வேடத்தை நாம் வணங்கி வழிபடக் கட வோம்'' என்று திருநாவுக்கரசர் நமக்குத் தெளிவுறுத்தி அருள்கின்றார்.

''எவரேனும்தாம் ஆக; இலாடத்து இட்ட திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி, உவராதே அவர்அவரைக் கண்டபோதே உகந்து அடிமைத்திறன் நினைந்து, அங்கு உவந்து நோக்கி, இவர்தேவர் அவர்தேவர் என்று இரண்டு ஆட்டாது ஒழிந்து, ஈசன் திறமே பேணிக் கவராதே தொழுமின்; நும் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியப்பரைக் காணலாம்'' என்பது நாவுக்கரசர் நமக்குச் செய்யும் நல்லுபதேசம். (தொழுதல் வேறு, பழகுதல் வேறு. அன்பினாற் செய்யும் வெறும் தொழுகைக்கு, ஆராய்ச்சி வேண்டா! நெருங் கிப் பழகுதற்காயின், ஆராய்ச்சி தேவைப் படலாம்.)

## சமயச் சின்னங்கள் :

இதனால், திருவேடம் என்னும் சிவ சின்னங் களின் சிறப்பையும், இன்றியமையாமையையும் யாவரும் உணரலாம். 'நனிநாகரிகம்' பெருகி வரும் இந்நாளில், நம்மிற் பலர் சமயச் சின்னங் கள் அணிவதற்கு அஞ்சுகின்றனர்; அருவருக் கின்றனர். அவைகளை அணியச் சோம்பற்பட்டு எள்ளிப் புறக்கணிக்கின்றனர். சிவவேடம் பூண் டும் தீயராய் ஒழுகும் சிலரைக்கண்டு அரு வருத்தே, அவர்கள் இங்ஙனம் செய்கின்றனர். வேடம் பூண்டோரது செயலின் புன்மையை, வேடத்தின்மீது ஏற்றி, அதனை வெறுத்தல் முறையன்று. கற்றவர்கள் ஏதேனும் ஒரு குற் றம் புரியின், அதுபற்றிக் கல்வியையே இழித் துப் பழித்தல் ஒல்லுமோ? அதுபோல்வதே இதுவும்!

மெய்ப்பொருள்நாயனார், மைபொதி விளக்கேயென்ன மனத்தினுட் கறுப்புவைத்துப் பொய்தவ வேடம்கொண்டு புகுந்த முத்த நாதன், வஞ்சகமாகத் தம்மை வாளாற் குத்திக் கொன்றபோதும், ''மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள்'' எனத்தொழுது வெனறார். இவ் வாற்றான் அவர் சிவவேடத்தின் சிறப்புடைமை உணர்ந்து போற்றியமை தெளியலாம்.

சமய வாழ்வில் மட்டுமேயன்றி, உலகியல் வாழ்விலும், வேடம் மிகமிக இன்றியமையாத தொன்றாக உள்ளது. 'ஒருவன் அணியும் ஆடை அவனை அறிவிக்கும்' (Apparel often proclaims the man) என்பர் ஷேக்ஸ்பியர். உடையணியாத (mufty) காவலருக்கும், உடை அணிந்துள்ள (In the uniform) காவலருக்கும் இடையே, உணர் வும் மதிப்பும் வேறுபடுதலை, நாம் எளிதிற் கண்டுணரலாம்.

## இராவணன் கதை :

வேடத்தின் முதன்மையினையும் இன்றி யமையாமையினையும் வலியுறுத்தும் இராமா யண நிகழ்ச்சி ஒன்றினை, இங்குக் குறிப்பிடுதல் தகும். சீதையின்மீது பொருந்தாக் காமம் கொண்ட இராவணன், அப்பிராட்டியைத்தான் அடைவதற்கு ஏதேனும் வழிகளைக் கூறுமாறு, தனது துணைவர்களை வேண்டினான். பலர் பலவகையான யோசனைகளைக் கூறினர். எதுவும் அவனுக்குப் பொருத்தமானதாகத் தோன்ற வில்லை. இறுதியில் ஒருவன் எழுந்தான். ''இரா மனைப் போலவே வடிவம் எடுத்துக்கொண்டு சென்றால், சீதையை அடையலாம்'' என்றான். அதுகேட்ட இராவணன், 'இதனையா நீ பெரிய தொரு யோசனையாக எனக்குக் கூறினாய்? வேறு ஏதோ புதியதாகச் சொல்லப்போகின்றனை என் றன்றோ? யான் பெரிதும் எதிர்பார்த்தேன். நீ கூறிய இச்சூழ்ச்சி எனக்குத் தெரியாதோ? இச்சூழ்ச்சியினை இதுகாறும் யான் செய்யாமலும் இருப்பேனோ? சீதையை அடைய எண்ணி, யான் இராமனின் வடிவத்தைப் பலமுறை எடுத்துப் பார்த்திருக்கின்றேன். அவ்வடிவம் எடுத்த அளவிலேயே, இராமனுக்குத் தனிச் சிறப்பாக உரிய பிறன்மனைவிழையாமை என்னும் இயல்பு எனக்கும் அமைந்து விடுகின்றதே? அதன் பின்னர் யான் எங்ஙனம் சீதையைத் தேடிச் சென்று அடைதல் கூடும்?'' என்று கூறிச் சலித் துக்கொண்டான் இராவணன் என்பது கதை.

இவ்வாறே இராபர்ட் ப்ரவுனிங் என்னும் கவி ஞர், தாம் இயற்றிய கவிதை ஒன்றில் ஒருசெய்தி யைக் குறிப்பிடுகின்றார் ; ஒரு மனிதன் போப் பாண்டவரிடம் சென்று ''தாங்கள் ஏன் இவ் வளவு அலங்காரம் செய்துகொள்ளுகின்றீர்கள்? தங்களுக்கு இத்தனை ஆடை அணிகலன்கள் எற்றுக்கு? தாங்கள் இக்கோலம் பலவும் புனை வது ஏன்? தங்களுக்காகச் செய்யப்படும் இந்த ஆரவார ஆடம்பரங்கள் எல்லாம் எதன் பொருட்டு?'' என்று வினவினான். அதற்கு அவர், ''நான் இதை எல்லாம் செய்து கொள் வதற்குக் காரணம் சொல்லுகின்றேன், கேள்! இவ்வேடத்தை அல்லது நாடகத்தின் நடிப்பைச் செய்துகொண்டே வருகையில், என்றேனும் ஒருநாள் எனக்குத் தெரியாமலேயே என்னுள் இறைவன்பால் உண்மைப் பக்தி உதித்துவிடக் கூடுமன்றோ?'' என்று விடையிறுத்தார், என அக்கவிதை கூறுகின்றது. இவற்றால் என்ன தெரிகின்றது? வேடத்திற்கும் பண்பிற்கும் மிக்க தொடர்பு உண்டு என்பதன்றோ?

ஆசிரியர் மாதவச் சிவஞானயோகிகள், தமது சிவஞானபோதப் பேருரையில், திருவேடத்தின் இயல்பினையும் சிறப்பினையும் பின்வருமாறு விளக்கி அருள்கின்றார் : ''காமக் கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து அணிகலன் முதலியன, காமுகரை வசீகரித்து இன்பம் செய்யுமாறுபோல, திருநீறும் தாழ்வடமும் கல்லாடையும் ஆகிய திருவேடம், மெய்யுணர் வுடையாரைக் காட்சி மாத்திரையானே வசீ கரித்து இன்பம் செய்யும்.'' இதனை வலியுறுத்த அவர் எடுத்துக்காட்டும் மேற்கோள், பின்வரும் திருப்பல்லாண்டுச் செய்யுளாகும்.

''சேலும்கயலும் திளைக்கும் கண்ணார் இளம்
கொங்கையிற் செங் குங்குமம்
போலும் பொடியணி மார்பு இலங்கும் என்று
புண்ணியர் போற்றிசைப்ப,
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்து நின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே''

## அறமும் மறமும் :

(5) திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், உலக இலக்கியங்களுள் தலைசிறந்த ஒன்றாக மதிக்கப்பெறுகின்றது. அறநூல்களுள் தனிப் பெரும் சிறப்பிடம் பெற்று அத்திருக்குறள் திகழ் கின்றது. ''ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இன்றென அறம் பாடிற்றே ஆயிழை கணவ'' என்னும் புறநானூற்றுப் பாடல் வரி களில், திருக்குறளை ''அறம்'' என்றே போற்றிச் சிறப்பித்துள்ளார் ஆலத்தூர்கிழார் என்னும் சங்ககாலப் புலவர்! அத்தகைய சிறப்புமிக்க திருக்குறள் '' மனத்துக்கண் மாசிலனாதல்

அனைத்து அறன், ஆகுல நீரபிற'' என்றும்; ''அழுக்காறு அவா வெகுளி இன்னச்சொல் நான்கும், இழுக்கா இயன்றது அறம்'' என்றும், அறத்திற்கு இலக்கணம் வகுக்கின்றது.

'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' என்பது, நம்முடைய முயற்சியினல் மட்டுமே நமக்கு எளிதில் கைகூடுவது அன்று. அழுக்காறு அவா வெகுளி இன்னச்சொல் என்னும் நான்கு தீய குணங்களைப் போக்கிக் கொள்ளுவதும், நம்மால் இயலுவ தன்று. இவற்றிற்கு இறையருளின் துணையும் இன்றியமையாததாக உள்ளது. இறையருளின் துணை இருந்தாலன்றி, நாம் நம் மனத்தை அடக்கி ஆளவோ, தூய்மை செய்துகொள்ளவோ, ஒருபோதும் இயலாது என்பது திண்ணம்.

ஆதலின், நமது சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்கள், அறத்திற்குச் சிறப்பிலக்கணம் ஆராய்ந்து அருளிச் செய்திருக்கின்றனர். ''இறைவனுடைய கட்டளையை நிறைவேற்றுதலே அறம் ஆகும். இறைவனது திருவருளின் வயப்பட்டு, அன்பு மேலிட்டுச் செய்யப்படுகின்ற செயல்கள் யாவும் அறச்செயல்கள்; இறைவனை மறந்து அல்லது புறக்கணித்துச் செய்யப்படுகின்ற செயல்கள் அனைத்தும் மறச்செயல்கள், அல்லது வீணன பயனில் செயலாகும்'' என்பது, நமது சமயச் சான்றோர்களின் கருத்து.

''காண்பவன் சிவனே ஆனல்,
அவனடிக்கு அன்பு செய்கை
மாண்பு அறம்; அரன்றன் பாதம்
மறந்துசெய் அறங்கள் எல்லாம்
வீண்செயல்: இறைவன் சொன்ன
விதி அறம்; விருப்பொன்றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும்
பூசனை புரிந்து கொள்ளே''

என்று சிவஞான சித்தியார் கூறுதல் காணலாம்.

இதுமட்டுமன்று. அறம் அல்லது மறம் என்பதனை, இதுதான் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுதல் இயலாது. சில சமயங்களில் அறமே மறமாகவும், மறமே அறமாகவும் மாறுபட்டு முடிவதும் உண்டு. அரனடிக்கு அன்பு இல்லாதவர் செய்யும் புண்ணியமும் பாவமாக முடியும். அரனடிக்கண் அன்புடையவர்கள் செய்கின்ற பாவமும் புண்ணியமாகிவிடும். தக்கன் வேத வேள்வி செய்தும் பாவியானன். சேய்ஞலூரர் விசாரசருமர் தாதையைத் தாள்தடிந்த பெருங்குற்றம் புரிந்தார் ஆயினும், தொண்டர்க்கு நாயகமாம் சண்டேசப் பெரும்பதம் அளிக்கப்பெற்றர்.

ஆதலின் ''அரனடிக்கு அன்பு இலாதார் புண்ணியம் பாவமாகும்; பரன் அடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்; வரமுடைத் தக்கன் செய்ய மாவேள்வி தீமையாகி, நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மையாயிற்று'' என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது. இன்னேரனைய தத்துவ சாத்திர முடிவுகளுக்கெல்லாம், அடிப்படையும் சான்றுமாகப் பின்வரும் திருவிசைப்பாத் திருப்பல்லாண்டுப்பாடல் விளங்குதல் காணலாம்.

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கு
இவ்வண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## முத்திவகைகள் :

(4) வீடுபேற்றின் இயல்பு பற்றி வெவ்வேறு சமய நூல் வெவ்வேறு வகையாகக்கூறும். நமது சமய தத்துவ நூல்களுள் சிவஞான தீபம் என்பது ஒன்று. சீவன் முத்தர்கள் மூன்று வகைகளில் வீடுபேறு

அடைவர் என அந்நூல் கூறுகின்றது. பாசத்தில் அழுந்திய ஏனைய மக்களைப்போல, உடம்பினைப் பிணமாகும்படி இங்கே விட்டுச் செல்லாமலும், தங்கள் உடம்பினைச் சிவலோகத்திற்கு உடன்கொண்டு செல்லாமலும், தம் உடம்பு கற்பூரம்போற் கரைந்துவிட, இருந்த இடத்திற்றனே சிவநிறைவிற் கலந்துவிடுவது ஒரு வகை. இவ்வாறன்றி உடலுடனேயே சிவலோகத்திற்குச் சென்று சேருவது மற்றொருவகை. இவ்விரு திறமும் இன்றி இம்மண்ணுலகத்திற்றனே உடம்பினைவிட்டு நீங்கி, இறைவனின் திருவருளில் கலப்பது பிறிதொருவகை.

இம்மூவகைகளுள் முதலதற்குத் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும்; இரண்டாவதற்கு நம்பியாரூரரும் சேரமான்பெருமாளும்; மூன்றுவதற்கு மெய்ப்பொருள்நாயனர் ஏனதி நாயனர் முதலியவர்களும், முறையே உரிய எடுத்துக்காட்டுகள் ஆவர் என்று, சிவஞான தீபம் (172) என்னும் சிறந்த சாத்திரநூல் சாற்றுகின்றது. அந்நூலின் கூற்றுக்கு அரண் செய்யும் வகையில்,

"களையா உடலோடு
சேரமான் ஆரூரன்
விளையா மதம்மாரு
வெள்ளானை மேற்கொள்ள,
முளையா மதிசூடி
மூவா யிரவரொடும்
அளையா விளையாடும்
அம்பலம்நின் ஆடரங்கே"

என்னும் திருவிசைப்பாப் பாடல், அமைந்திருத்தல் அறிந்து இன்புறுதற்குரியது.

## காணும் உதவியும், காட்டும் உதவியும்:

உயிர்களுக்கும் கடவுளுக்குமுள்ள உறவைக் குறித்து, வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு வகைகளிற் கூறுகின்றன. கடவுளும் உயிர்களும் பொன்னும் பணியும்போல் அபேதம் என்றும், இருளும் ஒளியும்போல் பேதம் என்றும், சொல்லும் பொருளும்போல் பேதாபேதம் என்றும் தத்துவ நூலறிஞர்கள் பற்பல வகைகளில் கூறுவர்.

ஆனல் நமது சைவசித்தாந்தமோ, கடவுள் உயிர்களுடன் ஒன்றுகவும், வேறுகவும், உடனுகவும் இயைந்து நிற்கின்றுன் எனக்கூறும். கடவுள் கலப்பினல் உடலின் உயிர்போல உயிர்களேயாய் ஒன்றுகவும், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல உயிர்களின் வேறுகவும், உயிர்க்கு உயிராதற் றன்மையாற் கண்ணொளியின் ஆன்மபோதம்போல உயிர்களோடு உடனுகவும் இயைந்து நின்று, அவற்றை இயக்கி வருகின்றுர் என்று நமது சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. உயிர்கள் நிலைப்பதற்கு இறைவன் ஒன்றுய் நிற்கின்றுன்; உயிர்கள் பொருள்களை அறியும்படி அறிவித்தற்கு இறைவன் அவற்றின் வேறுய் நிற்கின்றுன்; பொருள்களை அறியினும் அறிந்தவாறே அனுபவிக்கும் சுதந்திரம் உயிர்களுக்கு இல்லாமையால், பொருள்களை அனுபவிக்கும் வண்ணம் செலுத்துதற்கு இறைவன் உயிர்களோடு உடனுய் நிற்கின்றுன். இல்லையேல், உயிர்கள் தாமே நிலைத்தலும், பொருள்களை அறிதலும், அனுபவித்தலும் இல்லையாய் முடியும்.

இறைவன் உயிர்களுக்குச் செய்யும் உதவியினைக் காட்டும் உதவி என்றும், காணும் உதவியென்றும், இரண்டாகப் பெரியோர்கள் கூறுவர். உயிர்கள் ஒரு பொருளைத் தாமே அறியும் இயல்புடையன அல்ல. ஆதலின் இறைவனே உயிர்களுக்குப் பொருள்களைக் காட்டி அறிவிக்கின்றுன். இது காட்டும் உதவி எனப்படும். இங்ஙனம் காட்டும் உதவி மட்டுமேயன்றிக், காணும் உதவி என்பதனையும் உயிர்களுக்கு இறைவன் செய்யவேண்டியிருக்கின்றது.

கண் ஒரு பொருளைக்காண வேண்டுமாயின், அக்கண்ணினிடத்து இருக்கின்ற இருளை நீக்கி, விளக்கு அதற்கு ஒளியைத் தருதல் வேண்டும். அதுமட்டுமேயன்றிக் காண்பதற்குரிய பொருளை மறைத்துள்ள இருளையும், அவ்விளக்கொளி நீக்குதல் வேண்டும். கண் விளக்கொளியோடு

கூடினும், பொருள் இருளில் இருக்குமேயாயின் கண் அதனைக் காணுதல் இயலாது. விளக்கொளி கண்ணின் இருளை நீக்கிப் பொருள்களைக் காட்டுவதுபோல், இறைவன் உயிர்களின் அறியாமையை நீக்கிப் பொருள்களை அறியும் ஆற்றலை உயிர்களுக்குத் தருகின்றான். கண்ணுக்கு விளக்கொளியால காணும் தன்மை ஏற்படினும், பொருள் இருளில் இருப்பின், கண் அதனைக் காணுதல் இயலாமையின், கண்ணிற் கலந்த விளக்கொளியே, காண்பதற்குரிய பொருளிலும் சென்று படிந்து கலத்தல்வேண்டும். அதுபோல இறைவன் உயிர்களுக்கு அறியும் திறன் அளிப்பதுடன், அறியப்படும் பொருள்களிலும் சென்று ஒன்றிக் கலந்து நின்று, அவற்றினை உயிர்கள் அறியச் செய்வித்தலும் வேண்டும். உயிர்கள் பொருள்களை அறிய, இறைவனும் அவ்வுயிர்களோடு உடனிருந்து அப்பொருள்களைத் தானும் கண்டு அறிதல் இன்றியமையாதது. மாணவன் ஒரு நூலைப் படிப்பதற்கு உதவியாக, அவனோடு உடனிருந்து ஆசிரியரும் அந்நூலைப் படித்தல் போல்வது இது! இதனைக் காணும் உதவி என நூல்கள் கூறும்.

இங்ஙனம் இறைவன் உயிர்களுக்குக் காட்டும் உதவியும், காணும் உதவியுமாகிய இரண்டையும் செய்துவரும் திறனையே, அத்துவித சம்பந்தம் எனத் தத்துவ நூல்கள் கூறுகின்றன. அத்துவிதமாவது, பேதப்பொருள் இரண்டும். தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்த விசேடம், இதனையே "அறிவொளிபோற் பிறிவரும் அத்துவிதமாகும் சிறப்பு" என உமாபதி சிவம் குறிப்பிடுவர்.

சிவஞானபோதத்தில் காட்டும் உதவி ஐந்தாம் சூத்திரத்தினும், காணும் உதவி பதினோராம் சூத்திரத்தினும் விளக்கப்பெற்றுள்ளது. காணும் உதவி காட்டும் உதவியின் பின்னர்த் தாய் நிகழும் என்னும் உண்மையினை, இவ்வமைப்பு உணர்த்தி நிற்கின்றது. இறைவன் உடனாக நின்று, பொருள்களைத் தானும் சண்டாலன்றி, உயிர்கள் அவற்றைக் காணுதல் இயலாது.

உயிர் ஒன்றினை அறிதல், இறைவன் உடனின்று அறிதலை அன்றி, அறிவித்தல்மாத்திரையான் உயிர்களுக்கு அமையாது என்னும் உண்மையை விளக்குவதற்கு, நமது திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள், திருவிசைப்பாவில் திருமாளிகைத்தேவர் "தொண்டனேன் விளம்புமா விளம்பே" தொண்டனேன் நினையுமா நினையே" "விரும்புமா விரும்பே" "தொடருமா தொடரே" "நுகருமா நுகரே" என்று அப்பதிகத்தின் பாடல் ஒவ்வொன்றின் ஈற்றிலும் அருளிச் செய்துள்ள தொடர்களை எடுத்து, மேற்கோள் காட்டியிருத்தல் காணலாம்.



"ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே"

இங்ஙனம் சைவ சித்தாந்தத்திற்கே தனிப்பெரும் சிறப்பாக உரிய, இவ்வரிய பெரிய தத்துவ உண்மையினை விளக்குகின்ற பகுதியில், சைவத் திருமுறைகளுள் ஒன்பதாவதாகச் சிறந்து திகழும் திருவிசைப்பாப் பாடல்களினின்றே, சிவஞான சுவாமிகள் மேற்கோள் காட்டியிருத்தல் ஒன்றே, திருவிசைப்பாவின் தனிப்பெருஞ் சிறப்பினை மலையிலக்கென விளக்கப் போதிய தகுந்த சான்றாகும்.

## முடிவுரை :

இதுகாறும் கூறியவற்றால், திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்னும் ஒன்பதாம் திருமுறையினைச் சாத்திர நோக்குக்கொண்டு ஆராய்ந்து நோக்கினாற் புலனாகக்கூடிய ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்குக் கண்டோம். 'இது 'விரிப்பிற் பெருகும்: தொகுப்பின் எஞ்சும்'. எனவே 'சமுத்திரகலசநியாயம்' பற்றியும்; 'தாலிபுலாக நியாயம்' பற்றியும்; ஒரு சில கருத்துக்களை மட்டுமே இங்கு இயன்ற அளவு காண முடிந்தது. "கடல்கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார்?" "கரையற்ற தொன்றைக் கரை காணலாகுமோ?"

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வாழ்க!

திருமுறைகள் பரவுக!

வையகம் துயர்தீர்க!

—ஆசிரியர்.

# அனந்தாழ்வான்

மகா வித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

எம்பெருமானர் பகவத் விஷய காலக்ஷேபம் நடத்தி அருளுகையில் ''ஒழிவில் காலமெல்லா முடனுய் மன்னி''யென்கிற திருவாய்மொழி நடவா நிற்க, கோஷ்டியில் திருமுன்பேயிருந்த சிஷ்யர்களை நோக்கி, ஆழ்வார் 'திருவேங்கடத் தெழில்கொள் சோதியெந்தை தந்தை தந்தைக்கு ஒழிவில் காலமெல்லா முடனுய் மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டும் நாம்'' என்று பாரித்த குறைதீரத் திருவேங்கடமுடையான் பரிஸரத்திலே யிருந்து நித்ய கைங்கரியம் பண்ண விருப்பமுடையார் ஆரேனுமுளரோ? என்று வினவியருள, ''குளிரருவி வேங்கடம்'' ஆகையாலே எல்லாரும் குளிர்க்கு அஞ்சி விடை கூருதிருக்க, அனந்தாழ்வான் எழுந்து அடியேனுக்கு நியமித்தருள வேணும் என்றார். அது கேட்டு உகந்த எம்பெருமானர் ''நீரொருவரே ஆண்பிள்ளை'' என்று போரவும் கொண்டாடித் தழுவியருளி விடைகொடுத்தருளினர். அது முதலாக அனந்தாண்பிள்ளை என்று அவர்க்குப் பிரசித்தியாயிற்று. அன்றே அவர் திருமலைக்கு விடைகொண்டு திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது, திருநந்தவனஞ் செய்து, அதற்கு இராமாநுஜன் என்று திருநாமஞ் சாத்தி அனேகவிதமான கைங்கரியங்களை அற்புதமாக நடத்திக் கொண்டிருக்கையில், அதை நேரில் கண்டு மகிழவேணுமென்கிற திருவுள்ளம் எம்பெருமானர்க்கு உண்டாகி, பகவத் விஷய காலக்ஷேபத்தை விரைவாக நடத்திச் சாத்தியருளினர்.

பெருமாள்கோயில் திருமலை முதலான சில திருப்பதிகளைச் சேவித்துவரப் பெரிய பெருமாளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, சிஷ்ய வர்க்கங்களுடனே புறப்பட்ட எம்பெருமானர் வழியடைவே திருப்பதிகளை எல்லாம் தொழுது கொண்டு, திருமலையடிவாரத்தே திருப்பதியிற் சேர்ந்து, திருமலையை மிதித்தேறத் திருவுள்ளம் பற்ருமல் கீழேயிருந்துவிடுவதாகத் திருவுள்ளம் பற்றி இருக்கையில், அனந்தாழ்வான் முதலானோர் இதையறிந்து வந்து 'இப்படியும் திருவுள்ளம் பற்றலாமோ?' நாங்களும் இனித் திருமலையைவிட்டு இங்கேதான் படுகாடு கிடக்க வேண்டும்போலும் என்ன; அதையே திருமலையப்பனுடைய நியமனமாகக்கொண்டு, புறப்பட்டுத் திருமலை மேலெழுந்தருளிக் கோனேரியிலே நீராடி, அப்பனைக் கண்களாரளவும் நின்று சேவித்து, அனந்தாழ்வானுடைய திருப்பணிகளையும் கடாக்ஷித்து உள்ளம் பூரித்து ''வளர்த்ததனல் பயன்பெற்றேன்; வருக'' என்று அவரை மிகவுகந்து மூன்று நாள் அவ்விடத்தில் அமுதுசெய்யாமலே எழுந்தருளியிருந்தார். இங்கு அறியத்தக்க ஒரு விசேஷம்:-

பூதத்தாழ்வார் தமது திருவந்தாதியில் திருவேங்கடமலையை வருணித்து ஒரு பாசுரம் அருளிச் செய்துள்ளார் :—

"பெருகுமத வேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகணிள மூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடங் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை''. (75)

என்பதாம் அது. இதன் பொருள் யாதெனில்; ''மதநீர் பெருகப்பெற்ற யானையானது, தனது பேடைக்கு இனிய உணவுகொடுத்து அதனைத் திருப்தி செய்விக்க விரும்பி மூங்கில் குருத்தைப் பிடுங்கித் தேனிலே தோய்த்து அப்பேடையின் வாயிலே பிழிகின்றதாம்; இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு இடமான திருமலையானது நீலமேக நிறத்தனான எம்பெருமான் உவந்து எழுந்தருளி யிருக்குமிடம்'' என்பதாம். மலைகளில் பெரும் பாலும் இங்ஙனே நிகழ்வது இயல்பாதலால், இயற்கையான அந்நிகழ்ச்சியை ஆழ்வார் எடுத்துக் கூறினர் என்று கொள்ளலாம்.

ஸ்ரீபதரிகாச்ரமத்து வழியிடையின்கண் உள்ள ஒரு திவ்யதேசத்தை வருணிக்கிற திருமங்கையாழ்வாரும் ''வரைசெய்மாக்களிறு இளவெதிர் வளர் முளை யளை மிகு தேன் தோய்த்துப், பிரசவாரி தன் இளம்பிடிக்கருள் செயும் பிரிதி சென்றடை நெஞ்சே'' என்று இங்ஙனே அருளிச் செய்திருக்கின்றாராதலால், மலையை வருணிக்குமிடத்து இங்ஙனே வருணித்தல் கவிமரபு என்றுங்கொள்ளலாம்.

ஆழ்வார்களின் திருவாக்கானது சாமானியமாகக் கவிகளின் போக்கிலே நிர்வகிக்கத் தகுந்ததன்றே. ஏதேனும் விசேஷார்த்தத்தை உட்கொண்டே அருளிச் செய்வதன்றோ ஆழ்வார்களுடைய வழக்கம். மேலெடுத்துக் காட்டிய பூதத்தாழ்வார் பாசுரத்தில் உறையும் விசேஷார்த்தம் ரஹஸ்யமாக அனுசந்திக்கப் பட்டு வருவதொன்றும். குறிக்கொண்மின் :—

மேலே விவரித்தபடி எம்பெருமானார் திருவேங்கடமலைக்கு எழுந்தருளியிருக்கையில், அங்குள்ள முதலிகள் பலர் சுவாமியைத் திருவடி தொழுது, அஸ்மதாதிகளுக்கு இதமாக ஏதேனும் சில அர்த்த விசேஷங்கள் அருளிச் செய்ய வேணும் என்று (உபந்யாஸ மொன்று செய் தருளுமாறு) வேண்டிக்கொண்டார்கள். அப்போது அவர்களது பிரார்த்தனையை நிறைவேற்றத் திருவுள்ளங்கொண்ட எம்பெருமானார், த்வயம் என்கிற மந்திரரத்னத்தை ''அகலகில்லேனிறையும்'' என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தோடே சமந்வயப்படுத்தி அழகாக உபந்யசித்தருளுகையில், மூலமந்திரமாகிய திருவஷ்டாக்ஷர மகாமந்த்ரத்தின் பொருளையும், சர்வதர்மாந் இத்யாதி சரம சுலோகத்தின் பொருளையும் சேர்த்து உபந்யஸித்தருளிச் ச்ரோதாக்களைப் பரமானந்த பரவசராக்கினர். அப்போது அந்தப் பெருங்குழுவில் அனந்தாழ்வார் எழுந்து ''பூதத்தாழ்வார் இத்திருமலை விஷயமாக அருளிச் செய்திருந்த ஒரு பாசுரத்தின் உள்ளுறை பொருளை அடியோம் இன்றே அறியப்பெற்றோம்'' என்ற பீடிகையுடன் ''பெருகுமத வேழம்'' என்கிற இந்தப் பாசுரத்தையெடுத்து, எம்பெருமானாருடைய உபந்யாஸ பரமாக ஒருங்கவிட்டு உபந்யஸித் தாராம்.

அப்பாசுரத்தில் ''பெருகுமதவேழம்'' என்றது எம்பெருமானாரையேயாம். இராமாநுஜ நூற்றந்தாதியில் ''பண்டரு மாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட எங்களிராமாநுஜ முனிவேழம்'' என்று, அமுதனார் எம்பெருமானாரை ஒரு யானையாகவே ரூபித்து அருளிச் செய்திருப்பதனால் இது பொருந்தும். யானைக்கும் எம்பெருமானார்க்கும் பல படிகளாலே ஸாம்யம் நிர்வகிக்கலாம்; அது நிற்க.

### மாப்பிடிக்கு முன்னின்று :

யானைப் பேடைக்கு 'பிடி' என்று பெயர். யானைக்கு இஷ்ட விஷயமாயிருக்கும் யானைப் பேடை. அதுபோல் எம்பெருமானார்க்கு இஷ்டர்களாயும், ச்ரோதாக்களாயு மிருக்

கின்ற பக்தர்கள் இங்கு விவக்ஷிதர்கள்; அவர்களுடைய முன்னே நின்றுகொண்டு, (சந்நிதியில் பெருமாள் திருமுன்பே செய்தருளின உபந்யாஸமாகையாலே நின்றுகொண்டு சாதித்தபடி).

## இருகண் இளமூங்கில் வாங்கி ;

இரண்டு கண்களையுடைய மூங்கில் என்றது—இரண்டு கண்டங்களாய் இருக்கின்ற பூர்வ போக்யமான த்வயத்தை. ''ஷட்ப தோயம் த்விகண்ட:'' என்று பூர்வ வாக்ய மென்றும், உத்தரவாசய மென்றும் இரண்டு கூறுகளாக அன்றோ த்வயமிருப்பது. மூங்கிலானது இரத்தினங்கள் பிறக்குமிடமென்று சாஸ்த்ரம் சொல்லும். த்வயமும் மந்த்ர ரத்ன மென்று பிரசித்தி பெற்றது. ஆகவே ''இருகணிள மூங்கில் வாங்கி'' என்றது—த்வயத்தை உபந்யாஸ விஷயமாகப் பற்றிக்கொண்டு என்றபடி.

## அருகிருந்த தேன்கலந்து நீட்டும் ;

த்வயத்தின் இரண்டு பக்கத்திலும் இரண்டு தேன்கள் இருக்கின்றன. ''எனக்கென்றும் தேனும் பாலுமமுதுமாய திருமால் திருநாமம்... நமோ நாராயணமே'' என்கிறபடியே, திருமந்திரம் ஒரு தேனாகச் சொல்லப்பட்டது. ''கீதமுகுந்தமுகபங்கஜசீது துல்யா'' என்கிறபடியே கீதையின் உள்ளீடான சரம சுலோகம் கண்ண பிரானுடைய முகாரவிந்தத் தேனாகச் சொல்லப்பட்டது. ஆக இவ்விரண்டு தேன்களும் த்வயத்தின் இரண்டருகிலும் உள்ளனவாதலால், ''அருகிருந்த தேன் கலந்து'' என்றது திருமந்த்ரார்த்தத்தையும், சரம ச்லோகார்த்தத்தையும் கலந்துகொண்டு த்வயார்த்தம் உபந்யஸித்தமையைச் சொன்னபடி.

ஆக, இங்ஙனே தேவரீர் உபந்யஸித்தருளினபடியை மயர்வற மதிநலமருளப் பெற்றவரான பூதத்தாழ்வார், ஏற்கெனவே அகக்கண்ணினால் ஸாக்ஷாத்கரித்தே இப் பாசுரமருளிச் செய்தருளினார் என்பதில் ஐயமில்லை—என்று அனந்தாழ்வான் இவ்விசேஷார்த்தத்தை வெளியிட்டருளினதாக ரகஸ்ய சம்பிரதாயம்.

திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் அனந்தாழ்வானுடைய நிர்வாகங்களாகச் சில காண்பதுண்டு; பெருமாள் திருமொழியில் ''ஊனேறு செல்வப் பதிகத்தில்எம்பெருமான்'' பொன்மலைமேல் ஏதேனுமாவேனே என்றவிடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில்—(ஏதேனுமாவேனே) அனந்தாழ்வான் இவ்விடத்துக்கு 'திருவேங்கடமுடையான் தானாகவுமமையும்' என்னும். சேஷபூதர் திரளுக்குப் புறம்பான சேஷியாகிலும் அமையுமென்கை'' என்கிற ஸ்ரீஸூக்தி காண்கிறது.

குலசேகராழ்வார் ஏதேனுமொருபடி திருமலையில் வாசத்தையே தமக்குப் பரம உத்தேச்யமாகக்கொண்டு இத்திருமொழி பாடினராதலால், திருவேங்கடமுடையானாக இருக்கப் பெற்றாலும், திருமலையில் வாசத்திற்குக் குறையில்லாமையாலே, அனந்தாழ்வான் இப்படியருளிச் செய்தாரென்க. சேஷியான திருவேங்கட முடையானுக்கு அடிமை செய்து சொரூபம் நிறம் பெறக் கடவனான சேஷபூதவனுக்கு சேஷியாகவே இருக்கப்பெறுகை அநிஷ்டமேயாகும்; ஆகவே திருவேங்கடமுடையானாக இருக்கப்பெறுகை, ஆழ்வாருக்கு உத்தேசமன்று. ஆனாலும் திருமலையில் இருப்பையே உத்தேச்யமாகக்கொண்டு அருளிச் செய்யும் பாசுரமாதலாலும், ''மலைமேல் ஏதேனுமாவேனே'' என்கிற சொல்தொடைக்கு அஸங்கோசாத் செய்யக்கூடியபொருள் இதுவாதலானும், அனந்தாழ்வான் ரஸோக்தியாக அருளிச்செய்த'படி.

திருவாய்மொழியில் (6—8—1) ''பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ'' என்ற பாட்டில் ''நன்னலப் புள்ளினங்காள் வினையாட்டியேன் நானிரந்தேன்'' என்றவிடத்திற்கு—தூது போகவேணுமென்று இரக்கிறாளல்லள், உபய விபூதியையும் உங்களுக்கு நான் கொடுக்க நீங்கள் அவற்றை ஆளவேணுமென்று இரக்கிறாள் என்பது, ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றின பொருள். எம்பெருமானார் கோஷ்டியிலே சிஷ்யர்கள் ஒரு சர்ச்சை பண்ணினார்களாம்—இவள் உபயவிபூதியையும் கொடுத்து விட்டாளாகில் அவன் வந்தால் தானுமவனும் எங்கேயிருப்பது? என்று. அப்போது அனந்தாழ்வான் பணித்தாராம்—''இக்குருவிகாட்டினவிடத்தே'' என்று. ரஸிகஸார்வபௌமர்களின் சங்கையும் ஸமாதானமும் பரமபோக்யமாயிருக்கிறது.

# மகாபாரதம்

(முற்றொடர்ச்சி)

அருண்மொழியரசு திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

### ஜராசந்த யுத்தம் :

நகருக்கு வெளியே பீமனும், ஜராசந்தனும் இந்திரனும், விருத்திராசுரனும் மற்போர் புரிய லானார்கள். கார்த்திகை மாதம் முதல் தேதி யன்று போர் தொடங்கியது. உணவும் உறக்க மும் இன்றிப் பதினைந்து நாட்கள் பயங்கரமான போர் புரிந்தார்கள்.

''பூதலம் நடுங்க எழுகிரி நடுங்கப்
போதகத் தொடுதிசை நடுங்க,
மீதலம் நடுங்கக் கண்ட கண்டவர்தம்
மெய்களும் மெய்யுற நடுங்கப்
பாதலம் நடுங்க இருவர் மாமனமும்
பறையறைந் தயர்வுடன் நடுங்கச்
சாதலங் கொழிந்த இடரெலாம் உழந்து
தங்களில் தனித்தனி தளர்ந்தார்''

இரண்டு சிங்கங்கள் எதிர்த்ததுபோல் கடும் போர் புரிந்து பின் களைத்தனர். பீமன் தன் தந்தையாகிய வாயுதேவனை நினைத்து, ஜராசந் தனைப் பிடித்துத் தூக்கி நூறு முறை சுழற்றிக் கர்ச்சித்தான், அந்தக் கர்ச்சனையைக் கேட்ட கர்ப்பிணிகட்குக் கரு சிதைந்து வீழ்ந்தது. பின் ஜராசந்தனைக் கிழித்து எறிந்தான். அந்த உடம்பு மறுபடியும் ஒன்று சேர்ந்தது. பல முறை கிழித்தும் அவன் மறுபடியும் மறுபடியும் ஒன்றுபட்டு எழுந்து போர் செய் தான். கண்ணபிரான் ஒரு துரும்பைக் கீறி மாறி விடுத்தார். அக் குறிப்பை யுணர்ந்த பீமன் அவனைக் கிழித்து மாறி விட்டு எறிந் தான். அதனால் ஜராசந்தன் மாண்டான்.

ஜராசந்தனுடைய தேர், தேவேந்திரனும் திருமாலும் போரில் ஏறியுலாவிய அரிய தேர். அதில் கண்ணபிரான் ஏறிச் சிறையில் இருந்த அரசர்களை எல்லாம் விடுவித்தருளினர். அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியுற்றார்கள். தருமர் செய்யும் இராசசூயத்துக்குக் கப்பங் களுடன் வருமாறு கட்டளையிட்டார். ஜராசந் தன் மகன் சகதேவனுக்கு ஆசி கூறி, அவனுக்கு அருள் புரிந்தார். அவன் தந்த மலை போன்ற இரத்தினக் குவியல்களை எடுத்துக்கொண்டு மூவரும் தருமரிடம் சேர்ந்து வெற்றிச் செயலை விளம்பினர். தருமர் பெருமகிழ்ச்சியுற்றார். இந்திரனிடமிருந்து வசுவினிடத்திலும், வசுவினி டத்திலிருந்து பிருகத்ரதனிடத்திலும், அவனிட மிருந்து ஜராசந்தனிடத்திலும் வந்த அந்த மகத்தான தேரை, தருமர் கண்ணபிரானுக்கே யளித்தார். அதில் ஏறிப் பகவான் விடை பெற்றுக் கொண்டு துவாரகாபுரி சேர்ந்தார்.

### திக்கு விஜயம் :

உலக முழுவதும் வெல்லவேண்டும் என்று கருதித்தருமருடைய தம்பியர் நால்வரும் நான்கு திசைகளில் சேனைகள் சூழப்புறப்பட்டார்கள்,

அர்ச்சுனன் வடதிசையிற் சென்றான். கலிங்கம் சாலுவம் என்ற தேயங்களை வென்றான்: பிராக்ஜ்யோதிஷம் என்னும் நகரையாளும் பகதத்த மன்னனுடன்பெரும் போர் புரிந்தான். அவன் தோல்வியுற்றுக் கப்பங் கட்டினன். மோதாபுரம், வாமதேவம், சுதாமம், சுசங்குலம், உலூகம் என்ற தேயங்களை வென்றான். சுவேதமலையைத் தாண்டி மலைவாழ் மக்களையும் கந்தர்வர்களையும் யட்சகர்களையும் வென்றான்.

மேருமலை ஜம்பு (நாவல்) மரம், இவைகளைக் கண்டான். அரிவர்ஷம் என்ற கண்டத்தையும் அடைந்து அங்குள்ளவர்களுடன் அமராடி வென்றான். இன்னும் பலப்பல தேய மன்னர்களை வென்று அவர்கள் அனைவரும் தந்த பொன் மணி பட்டு முதலிய எண்ணில்லாத பொருள்களைக் கப்பமாகப்பெற்று, எங்கும் தனது கொடியை நாட்டி, வாகைமாலை சூடிக் கொண்டு திரும்பி இந்திரப்பிரஸ்தம் வந்து, தமையனாிடம் அந்த நிதிகளைத் தந்தான்.

### பீமன் :

பீமசேனன் கிழக்கு நோக்கிச்சேனைகளுடன் சென்றான். பாஞ்சாலம், விதேகம், சேதிநாடு, வங்கம், அங்கம், கலிங்கம் முதலிய அனேக தேயங்களை வென்று குன்றுபோல் நிதிகளைக் கப்பமாகப் பெற்றுத் திரும்பினான்.

### சகாதேவன் :

சகாதேவன் சேனைகள் சூழத் தென் திசை நோக்கிச் சென்றான். நிஷாதர்கள், புளிந்தர்கள் கிஷ்கிந்தை, மாகிஷ்மதியையாளும் நீலன் முதலிய அரசர்களையும் வென்றான். ஆந்திர நாட்டரசன், சோழன், பாண்டியன் சேரன் என்ற மன்னர்கள் அன்புடன் அவனைவரவேற்று தருமர் புரியும் வேள்விக்கு நிரம்ப நிதியளித்தார்கள். தென்கடலைக் கண்டு கடோத்கஜனை நினைத்தான். அவன் உடனே வந்து அடிபணிந்தான். "இலங்கை சென்று விபீஷணரிடம் கப்பம் வாங்கி வா" என்று கட்டளை யிட்டான். அழகிய இலங்கை சென்றான். கடோத்கஜன் விபீஷணரைப் பணிந்து, கண்ணபிரானுடைய மைத்துனர் யுதிஷ்டிரர் புரியும் இராஜசூய வேள்விக்குக் கப்பந்தரவேண்டும் என்று இனிமையாகக் கூறினான். கருவூலத்தைத் திறப்பித்து, எண்பத்தெண்ணாயிரம்அரக்கர்கள்மூலம் மலைபோன்ற நிதி, யாகசாலையில் வைக்கத்தக்க பதினான்கு தங்கப் பனைமரங்கள் முதலியவற்றை அனுப்பினார். இவற்றுடன் சகாதேவன் இந்திரப்பிரஸ்தம் சேர்ந்தான்.

### நகுலன் :

நகுலன் மேல்திசையை நோக்கிச்சென்றான் மத்ரம் முதலிய தேயங்களை வென்றான். யவனர், கிராதர் முதலிய பலரையும் வென்று பொன் மலையுடன் திரும்பி வந்தான். தருமருடைய கருவூலத்தில் பொன் வெள்ளி பட்டு ஆபரணங்கள் இவைகள் கண்கொள்ளாத அளவில் குவிந்திருந்தன. கண்ணபிரான் பலராமர் முதலிய யாதவர்களுடன் மிகுந்த நிதியுடன் வந்து சேர்ந்தார். பெரிய யாகசாலையை நிறுவினார்கள். வியாசர் முதலிய முனிவர்கள் வந்து கூடினார்கள். நகுலன் சென்று அழைக்க, திருதராஷ்டிரன் முதலிய அனைவரும் வந்து சேர்ந்தார்கள்.

தருமர் புள்ளிமான் தோலை உடுத்துக் கொண்டு, உடம்பில் வெண்ணெய் தடவிக் கொண்டு, யாக தீட்சை கொண்டார். சகல மன்னர்களும் அங்கு வேண்டிய பொன் மணி களுடன் வந்து குவிந்தார்கள். பலர் நுழைய முடியாது, தடைபட்டு நின்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

### இராஜசூயம் :

அந்தணர்களை அழைக்கும் பணியில் அசுவத்தாமாவைத் தருமர் நியமித்தார். மேல் பார்க்கும் பணியில் பீஷ்ம துரோணர்களை நியமித்தார். இவ்வாறு பலரைப் பல பணிகளில் நியமித்தார் தருமர். அங்கே "உண்ணுங்கள்" "பருகுங்கள்" "இருங்கள்" என்ற சொற்களே மிகுதியாகக் கேட்டன. ஆடல், பாடல், விகடம், வேத பாராயணம் முதலியன எங்கும் முழங்கின. தேவர்கட்கு அவிர்ப்பாகம்

அளிக்கப்பட்டது. நாரதாதி முனிவர்கள் அங்கு கானம் புரிந்தார்கள். தருமர், வசிஷ்டாதி முனிவர்கள் அனைவர்களையும் தட்சிணைகள்தந்து உபசரித்து வழிபட்டார்.

பிறகு ''இனி யாருக்கு முதல் வழிபாடு செய்வது''? என்று தருமர் கேட்டார். பீஷ்மர், 'தருமா! எல்லாவுலகங்களாலும், எல்லா வகையாலும் வழிபடத்தக்கவர் வாசுதேவர். அவர் எல்லோருக்கும் மேலானவர். அவருக்குச் செய்'' என்றார். சகதேவன் முறைப்படி கண்ண பிரானை வழிபட்டு முதல் மரியாதைசெய்தான். வடவைக்கனல் போல் கொதித்து எழுந்து சிசு பாலன் இதனை மறுத்தான்.

**சிசுபாலன் :**

''பூபால ரவையத்து முற்பூசை பெறுவார் புறங்கானில் வாழ்
கோபால ரோஎன் றுருத்தங் கதிர்த்துக் கொதித்தோதினான்
காபாலி முனியாத வெங்காமன் நிகரான கவினெய்தி ஏழ்
தீபாலடங்காத புகழ்வீர கயமன்ன சிசுபாலனே.

சூரன் குலத்தோர் குபேரன் குலத்தோர் சுடர்ப்பாவகப்
பேரன் குலத்தோர்கள் முதலோர் இருந்தார்கள் பெயர் பெற்ற பேர்
வீரங் கொலோ வாகு சாரங்கொலோ? செல்வ மிச்சங்கொலோ ?
பூரம்புராசிப் புவிக் கென்றும் முது வோர்கள் பொதுவோர் கொலோ ?''

''மன்னர்களே ! இது பெரும்பிழை. கேட்டவன்* குற்றமுள்ள கருவில் பிறந்தவன்! சொன்னவன் நதியின் மகன்; நதி எப்போதும் தாழ்ந்த நிலத்தையே நோக்கிச் செல்லும் இயல்புடையது. வழிபாட்டைப் பெற்றுக் கொண்டவன் இடையன்.

''பாண்டவர்களே! நீங்கள் சிறுவர்கள். உங்களுக்கு எது செய்யத்தக்கது என்று அறியும் அறிவில்லை. இந்த இடையன் அறிவிலே பெரியவனா? வீரத்தில் பெரியவனா? குலத்தில் பெரியவனா? ஒழுக்கத்தில் பெரியவனா? வயதில்பெரியவனா? இவன் எதில் பெரியவன்? ஏ தருமா! நீ ஏன் இவனைப் பூசித்தனை? இந்த மாப்பேரவையில், பீஷ்மனைப் பூசித்திருக்கலாம்; பீஷ்மன் வசுதேவர், இன்னும் எத்தனை எத்தனை மன்னர்கள் மலைபோல் அமர்ந்திருக்கின்றார்கள். அத்தனைப் பேரையும் அவமதித்து, வெண்ணெயும் பெண்ணையுந் திருடிய இக் கள்வனைப் பூசித்தது முறையா? யாகத்திற்குரிய அவியை நாய் தின்றது போல இவன் இந்தப் பூசையைப் பெற்றான். இதைக் கண்டு இந்த மன்னர்கள் சித்திரப் பதுமைகளைப்போல் இருக்கின்றார்கள். இதைப் போன்ற ஒரு இழிவு என்ன இருக்க முடியும்? கண்ணில்லாதவன் சித்திரங் காண்பதா?'' என்று பல இகழுரைகளைக்கூறி அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டான்.

தருமர் தனது சிறிய தாயின் மகனாகிய சிசுபாலனை ஓடித் தடுத்து, ''வேந்தனே! சீற்றங் கொள்ளாதே. காங்கேயர் மிகப் பெரியவர். அவரையும், மற்ற அரசர்களையும் அவமதிக்கலாகாது. கண்ணபிரான் அளவில்லாத பெருமையுடையவர்'' என்றார்,

பீஷ்மர், தருமனே! இந்த மூடனுடன் ஏன் பேசுகின்றாய்? மரணவாயிலில் உள்ளவனுக்கு மருந்துபிடிக்குமா? அறிவில்லாதவனே! சேதி மன்னனே! உனக்கும் அறிவுக்கும் வெகு தூரம். உருத்திரனும் பிரமதேவரும் இவரே. இப் பரம்பொருளின் பெருமையை நீயறிகிலாய். மனவாக்குக்கு எட்டாத பரப்பிரம்மம் மனித வுருவத்துடன் வந்திருக்கின்றது. வேதங்களுக்கு *முகம் அக்னிஹோத்ரம்: மந்திரங்களுக்கு முகம் காயத்திரி: மனிதர்களுக்கு முகம் அரசன் நதிகளுக்கு முகம் கடல்; நட்சத்திரங்கட்குமுகம் சந்திரன்: ஒளிகட்கு முகம் ஆதித்தன்; மலைகட்கு முகம் மகாமேரு; பறவைகட்கு முகம் கருடர்; எல்லாஉலகங்கட்கும் முகம் இந்தக் கிருஷ்ணர்'' என்றார்.

சகாதேவன் எழுந்து, ''கிருஷ்ணனை வழிபட்டது முறைதான். மறுப்பவருடைய தலையின் மீது என் காலை வைப்பேன்'' என்றான். சிசுபாலன்மேலும் கண்கள்சிவந்து கண்ணபிரானைப் பலவாறாக நிந்தனை செய்தான். தருமராஜர் பீஷ்மரைப் பார்த்து ''பிதாமகரே! பகவானுடைய அவதாரங்களைப்பற்றியும் பெருமையைப் பற்றியும் கூறியருளும்'' என்று கேட்டார்.

---

*பாண்டுவுக்குப் பிறவாதவன் என்ற கருத்தில் தருமரைக் குறிப்பிட்டான்.

முகம் - தலைமை.

# ஸ்ரீ பசவேசுவரரும், திருவள்ளுவரும்

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

### முன்னுரை :

ஸ்ரீபசவேசுவரர் இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னர், கன்னட நாட்டில் தோன்றியவர் இலிங்காயதம் அல்லது வீர சைவம் எனப்படும் நெறியினை வளர்த்துப் பரப்பியவர். திருவள்ளுவரோ, இற்றைக்கு ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்து, திருக்குறள் என்னும் ஒப்புயர்வற்றநீதி நூலை அருளிச்செய்தவர். எனினும் இவ்விருவரின் இயல்புகளுக்கும் கருத்துக்களுக்கும் இடையே, பலதிற இயைபு ஒப்புமைகள் காணப்படுகின்றன.

### ஒரேகுரலும் உள்ளமும் :

காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டு நிற்பினும், சான்றோர்கள் தமது சீலத்தாலும் ஞானத்தாலும், தம்முள் ஒருவரோடு ஒருவர் தொடர்புடையராய்த் திகழ்வர். ''சான்றோர் சான்றோர் பாலராவர்'' என்பது புறநானூறு. அவர்கள் வேறு வேறு காலங்களில் விளங்கினும், வெவ்வேறான மொழிகளைப் பேசினும், ஒரே குரலில், ஒத்த கருத்திலேயே, உயர்ந்த உண்மைகளை உலகுக்கு அறிவுறுத்துவர். விஞ்ஞானிகளின் கருத்துக்களும் ஆராய்ச்சிகளும் கொள்கைகளும், ஒன்றோடு ஒன்று அவ்வப்போது மாறுபட்டு முரணி நிற்கும். ஆனல் மெய்ஞ்ஞானிகளின் அனுபவங்களும் அறிவுரைகளும் எப்போதும் ஏது குறித்தும் மாறுபடாமல் பெரிதும் இயைந்து இணைந்து ஒன்றி நிற்கும். இதுவே மெய்ஞ்ஞானிகளாகிய அருளாளரின் இணையற்ற மேன்மைக்குக் காரணமாகும்.

### குறளும் வசனங்களும் :

திருவள்ளுவர் ஒரு பெரும் கவிஞர், சான்றோர், அருளாளர்; அதுபோலவே பசவேசுவரரும் ஒரு பெரும் கவிஞர், சான்றோர், அருளாளர்! இருவருமே உலகைத்திருத்தி உயிர்களை உய்விக்க வந்த உத்தமர்கள் என்பதில் ஐயமில்லை. திருவள்ளுவர் தமது திருக்குறளில் அறம்பொருள் இன்பம் என்பவற்றை 1330 குறள்களால் விளக்கியருளினர். பசவேசுவரர் பக்த ஸ்தலம், மாகேசுவர ஸ்தலம், பிரசாதிஸ் தலம், பிராணலிங்கிஸ்தலம், சரணஸ் தலம், ஐக்கியஸ்தலம் என்னும் ஆறு நிலைகளைப்பற்றித் தாம் அருளிச் செய்த 961 ''வசனங்கள்'' என்னும் மாட்சிமிக்க அருளுரைகளால் விளக்கியருளினர்.

### திருவள்ளுவரும், பசவரும் :

திருவள்ளுவர் ஒரு பெரும் புரட்சியாளராகவும், சமுதாயச் சீர்திருத்தக்காரராகவும், அதே சமயத்தில் பழைய நல்ல மரபுகளைப் பெரிதும் போற்றி வளர்ப்பவராகவும், விளங்கினர். அவ்வியல்புகள் அனைத்தும், பசவேசுவரரிடத்தில் பெரிதும் பொருந்திக் காணப்படுகின்றன.

திருவள்ளுவர் அரசியலை விளக்கியருளினர்; பசவேசுவரர் அரசியலில் அமைச்சராக இருந்து பெரிதும் பணியாற்றினர். திருவள்ளுவர் "உழவு'' என்னும் அதிகாரத்தில் உழைப்பின் மேன்மையை வலியுறுத்தினர்; பசவேசுவரரும் ''தொழிலே தொழுகை'' (காயகவே கைலாச) என்பதனை யாவருக்கும் அறிவுறுத்தினர். சமுதாயத்தின் குற்றங் குறைகளையும், பொய்ம் மைப் போலி ஒழுக்கங்களையும், அறவே வெறுத்துக் கடிந்தொழிக்கும் திறனில், இரு வருமே சரிநிகர் சமமாகக்காணப்படுகின்றனர். ''பெரியோர்கள் ஒரே வகையாகவே கருது கின்றனர்'' (Great minds think alike) என்பது இவ்விருவர் திறத்தினும் மிக்க பொருத்தமுற் றுக் காணப்படுகின்றது.

இவ்விருவரின் கருத்துக்களும் கொள்கை களும், உலகனைத்திற்கும் பொதுவாகவும் உரியனவாகவுமே அமைந்துள்ளன. தியானம் தவம் பணிவு இரக்கம் நம்பிக்கை தருமம் மனத்தூய்மை இன்சொல்லுடைமை வினைத் தூய்மை கடமை தொழிலின்மேன்மை ஒழுக்கத் தின்உயர்வு இறைவழிபாடு முதலியனகுறித்துப் பசவேசுவரர் அருளியுள்ள வசனங்களும், திரு வள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய குறள்களும், தம்முள் பெரிதும் ஒப்புமை உடையனவாகத் திகழ்கின்றன. அவற்றில் ஒருசில ஒப்புமைக் கருத்துக்களை மட்டும் நாம் இங்குக் கண்டு மகிழ் வோம்.

### ஒப்புமைக் கருத்துக்கள் :

(1) சிவபிரானின் அருள்நெறியை நீ உண ராத வரையில், உன்னுடைய கல்வி எவ்வளவு தான் மிகுதியாக இருப்பினும், அதனாற் பயன் யாது? (வசனம் 142). ''கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்''. (குறள், 2)

(2) கூடல சங்கமதேவரின் திருவடிகளில் அடைக்கலம் புகுகின்றவன்மட்டுமே காப்பாற் றப்படுவான். அங்ஙனம் அடைக்கலம் புகாதவர், உலகியலில் உழன்று வருந்தி, அதன்கண்ணேயே அழுந்துவர் (வசனம் 773). "பிறவிப் பெருங் கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேரா தார்''.(குறள், 10)

(3) பக்தர்கள் எனப்படுவோர் புறத்தே தூய்மையுடையவர்போல நடித்து, அகத்தே கோணலுடையவராக இருப்பின், அவர்களைக் கூடல சங்கமதேவர் விரும்புவதில்லை (வசனம் 96). ''புறத்துறப்பெல்லாம் எவன்செய்யும் யாக்கை, அகத்துறுப்பு அன்பிலவர்க்கு (குறள் 79).

(4) தயை இல்லாத தருமம் யாது பயனைத் தரும்? தயையேஎல்லாத் தருமங்களுக்கும் தாய கம் (வசனம் 247). ''இன்சொலால் ஈரம் அளை இப் படிறிலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் (91).

(5) சொற்கள் முத்துக்களால் இயன்ற மாலை போல, வயிரத்தின் ஒளியும், பளிங்கி.. தெளிவும் உடையனவாக, இருத்தல் வேண்டும் (வசனம் 802). ''பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணி; அல்ல மற்றுப் பிற'' (95).

(6) பிறன்மனைவியை விழைதலையும், பிறன் பொருளை விரும்புதலையும் குறித்து யான் மிகவும் அஞ்சி நடுங்குகின்றேன். இராவணனின் முடிவு என்னவாயிற்று என்பதனை நீ அறியாயா? (வசனம் 446). ''ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி (25)

(7) உன்பால் கோபப்படுபவர்கள்மீது, நீ ஏன் கோபம்கொள்கின்றாய். ஒருவனது வீட்டைப்பற்றிய தீ, முதலில் அவ்வீட்டை அழித்துவிட்டுத்தான், பிறகு அடுத்த வீட்டைப் பற்றி அழிக்கத் தொடங்கும் (வசனம் 248). ''அழுக்காறு உடையார்க்கு அதுசாலும்ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது (165).

(8) உள்ளுக்குள் தீய எண்ணங்களுடன், பயனில்லாத சொற்களைக்கூறும் ஒருவனைக் குறித்து, நீ விழிப்பாக இரு. குறி...வக்கப் படாத அம்பானது தனதுஇலக்கின்மீது சென்று படுவதில்லை (வசனம் 202). ''சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க சொல்லின் பயனிலாச் சொல் (200).

(9) எல்லா உயிர்களின் மாட்டும் இரக்கம் காட்டுக. இரக்கமே எல்லா அறங்களுக்கும் பிறப்பிடமாகும் (வச. 247). ''நல்லாற்ருன் நாடி அருளாள்க; பல்லாற்ருன் தேரினும் அ·.தே துணை(242).

(10) உள்ளத்தில் ஒருமைப்பாடும் உறுதியும் இல்லையாயின், வழிபாடு என்ன பயனைத் தரும்? கல்லானது தண்ணீரில் எத்துணைக்காலம் தான் அழுந்திக் கிடப்பினும், அது மென்மைத் தன்மை உடையதாக ஆக முடியுமோ? (வச. 299). ''மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி, மறைந்தொழுகும் மாந்தர்பலர்'' (278).

(11) எங்கே உண்மை உள்ளதோ, அங்கே மனநிறைவு இருக்கும். அதன் பின்னரும், செய்து முடிக்கஇயலாத செயல் என்பது ஒன்று உண்டோ? (வச. 913) ''யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும், வாய்மையின் நல்லபிற'' (குறள் 300).

(12) திருடாதே, பிற உயிர்களைக் கொல்லாதே, பொய்சொல்லாதே, கோபம் கொள்ளாதே; பிறரைவெறுக்காதே, உன்னையே நீ தற்புகழ்ச்சி செய்துகொள்ளாதே, பிறரைப் பகைத்துப் பழிக்காதே, இதுவே உள்ளும் புறம்பும் உனக்குத் தூய்மையை அளிக்கும் (வச. 235). ''மறத்தல் வெகுளியை யார் மாட்டும், தீய பிறத்தல் அதனுல் வரும்'' (கு.303). ''அறவினை ய..தெனின் கொல்லாமை, கோறல் பிறவினை எல்லாம் தரும் (371).

(13) நல்லவர்களின் நட்பு விரும்பத்தக்கது; தீயவர்களின் தொடர்பு வெறுக்கத்தக்கது. முதலாவதைத் தேடு. அடுத்ததை விடு (வச. 134). ''அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை, திறனறிந்து தேர்ந்து கொளல் (குறள் 441).

(14) ஒரு சிறு தானியம் அல்லது உணவைக் காணின், காக்கை தனது இனத்தைக் கூவி அழைக்கின்றது. ஒரு சிறு உணவுத் துணுக்கைக் காணின், ஒரு பெட்டைக்கோழி தனது குஞ்சுகளை உடனுண்ண அழைக்கின்றது. பக்தி உணர்ச்சியில்லாத சிவபக்தன் காகத்தையும், கோழியையும்விட மிகவும் கடைப்பட்டவன் ஆவான் (வச. 437). ''காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்ன நீரார்க்கே யுள'' (குறள் 527).

(15) நல்வினையோ தீவினையோ, உன்னுடைய செயலாலேயே ஏற்படுகின்றது. 'ஐயா' என்று பணிவுடன் நயமாகப் பேசுதலே சுவர்க்கம். 'நீ நாசமாய்ப் போக' என்று செருக்கிச் சினந்து கூறுதலே நரகம்ஆகும் (வச. 240). ''ஆக்கமும் கேடும்அதனுல் வருதலால், காத்தோம்பல் சொல்லின் கண் சோர்வு (குறள் 642).

(16) பாவிகள் குவித்துவைத்த பணம் பிராயச்சித்தத்திற்கே தக்கதாகும்.அதுநல்லவர்களுக்குத் தகாது. நாயின்பால் நாய்க்கு ஆகுமேயன்றி, பஞ்சாமிர்தம் செய்யப் பயன்படாது (வச. 223). ''அன்பொரீஇத் தற்செற்றுறம்நோக்கா தீட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர் (1009).

(17) ஏழைகள் வசிக்கும் குடிசையும், இறைவன் உறையும் கோயிலும், தரையாகிய ஒரே நிலத்தில்தான் அமைந்துள்ளது. தன்னை உணர்ந்தவன் எவனே அவன் எல்லா உயிர்களையும் சமமாகவே கருதுவான் (வச. 878) ''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பு ஒவ்வாசெய்தொழில் வேற்றுமையான்''(கு.927)

## முடிவுரை :

இதுகாறும் எடுத்துக்காட்டிய ஒரு சில ஒப்புமைப் பகுதிகளினுலேயே ஸ்ரீபசவேசுவரருக்கும், திருவள்ளுவர் பெருந்தகைக்கும் இடையே உள்ள கருத்து ஒற்றுமையையும், குறிக்கோள் ஒற்றுமையையும், நம்மனோர் அனைவரும் நன்கினிது உணர்ந்து தெளியலாம். உலகுக்கு வழிகாட்ட வந்த மாபெரும் உத்தமர்களாகிய இச்சான்ருேர்கள் இருவரையும், நாம் ஏற்றபெற்றி போற்றி ஒழுகி உய்யக் கடமைப் பட்டுள்ளோம்.

—ஆசிரியர்.

# திருவரங்கம் கோயில்*

(முற்றொடர்ச்சி)

(ந. ரா. முருகவேள், M. A., M. O. L., )

பண்டைக் காலத்தின் ஆட்சி நடைமுறைத் தன்மைக்கு இந்தக் கோயில் ஒரு முழு நிறைவான சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குகிறது, உடையவர் எனப்படும் ஸ்ரீ இராமானுஜர் ஆகிய பெரும் சீர்திருத்தக்காரருக்கு முற்பட்ட காலத்தில்,இக்கோயிலில் ஐந்துவகையான அலுவற்பதவிகள் மட்டுமே இருந்தன.இராமானுஜர் அவற்றைப் பத்தாக உயர்த்தினர். அவர்களின் வேலைகள் 'கோயில் ஒழுகு' என்னும் தல வரலாற்று நூலில் விரிவாகக் கூறப்படுகின்றது. மேலே சுருக்கமாகக்கூறிய செய்திகளைவிட, அது மேலும் பல செய்திகளைத்தெரிவிக்கின்றது. ஆதலின் அதுபற்றி இங்கு ஆராய்தல் நலம் பயக்கும்.

*(1)* கோயில் அலுவலர்களுள் திருப்பதியார் என்பவர்கள், முதல் வகையினராவர். இவர்கள் இராமானுஜரைத் தங்கள் ஆன்மிகக் குருவாகத் தேர்ந்துகொண்டவர்கள்; மூலத்தான ஊழியத்திற்கு இவர்கள் பொறுப்பு உடையவர் ஆவர். இவர்களின்தலைவர் தண்டு என்னும் முத்திரைக் கோல் ஏந்திச் செல்வர். கோயிலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளை, இவர் அவ்வப்போது உசாவி அறிந்து வைத்துக் கொள்வார். கோயிற் பணியாளர்கள் எல்லாரையும் போலவே, இவ் ஊழியர்களும் முறைப்படி நீராடிய பிறகு, வைகறைக் காலம் முதல் தமது கடமைகளைச் செய்யத் தொடங்குவர். கோயிலின் மூலத்தானக் கதவு திறந்த உடனேயே, இவர்கள் முகப்பு மண்டபத்தையும், பித்தளை பதித்த திருவாயிலையும், பிரதட்சிணப் பிராகாரத்தையும், திருவலகிட்டுத் தூய்மை செய்வர். வழிபாட்டில் பயன்படுத்தப்பெறும் திருவிளக்குகள் அனைத்தையும், எண்ணெய் வார்த்துத் திரியைத் துடைத்தும் அல்லது மாற்றியிட்டும், தம் உதவியாளர்களாகிய ஏகாங்கிகளால் அளிக்கப்படும் நெய்யை வார்த்தும், போற்றிப் பராமரிப்பர். வழிபாட்டுக் காலங்களில் இவர்கள் திருவிளக்குகளை ஏற்றி, பூசை புரியும் அர்ச்சகர்களிடம் அவற்றை முறை முறையே எடுத்துக் கொடுப்பர். அருச்சகர் ஓமம் புரியும் பொழுது, இவர்கள் விளக்குகள் ஏந்துவர். மற்றும் தூபங்கள் இடுவர். பக்தர்களுக்குச் சுண்டல் முதலிய பிரசாதங்கள் வழங்குவர். சுவாமிக்காகச் செய்யப்படும் பலவகையான பிரசாதங்கள் முதலியவற்றைப் பிறரிடமிருந்து பெறுவதும், பெற்று எடுத்துச் செல்வதும், இவர்தம் பணிகளில் ஒன்று.

முஸ்லிம்களின் படைப் பற்றுட்சிக்குப் பின்னர், இவர்களின் பணிகளில் ஏற்பட்ட மாறுதல்களைக் கோயிலொழுகு குறிப்பிடுகின்றது. பிற்காலத்தில், சிறப்புத் திருநாட்களில் வேதம் ஓதுதலும், பிரபந்தம் பாடுதலும்கூட, இவர்களின் கடமையாயிற்று. இவர்களில் சிலர் சிறப்புரிமைகள் பெற்று, எம்பெருமானுக்குரிய நிவேதனம் விளைபொருட் காணிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புடையவற்றில், காசாகவும் ஏராளமான செல்வம் தொகுத்தனர். மிகவும் சமீப காலத்தில் இவர்கள் சந்தனம் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றனர்.

---

*'திருவரங்கம் கோயிலைப் பற்றிய இக்கட்டுரை'யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆதரவில் Miss jeannine Auboyer என்னும் ஃபிரான்சு நாட்டு அம்மையார் அவர்கள் எழுதியுள்ள ஆங்கில நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு ஆகும்.

—ஆசிரியர்

(2) இரண்டாவது வகையினர் திருப்பணி செய்வார் எனப்படுவர். இவர்கள் திருமஞ்சனத் திற்குத் தண்ணீர் கொணருவர். வழிபாட்டுச் சடங்குகளில் தண்ணீர் மிகவும் முதன்மையாக மதிக்கப்பெற்றது. இவர்கள் ஆன்மிகத் தலைவர் களாக விளங்கித் துறவிகள் ஆகிய, ஞானசிரி யர்களின் வழி வழிச் சந்ததியினரிலிருந்து, பரம்பரை முறையில தேர்ந்தெடுக்கப்படுபவரா வர். இவர்கள் எண்ணிக்கையில் ஐந்துபேர் மட்டுமேயாவர். புனித இடங்களில் தண்ணீர் தெளிப்பதும், திருவிழாக்களிலும் ஊர்வலங் களிலும் இறைவனுக்குக் குடை பிடிக்கப்படும் பொழுது தண்ணீர் வார்ப்பதும், வாசனைப் பொருள்கள் இட்ட பரிமளத் தண்ணீரை இறைவனுக்கு நறுமணம் கமழும் பொருட்டு உயரச் சிதறுவிப்பதும், இவர்களின் பணி யாகும். சுவாமி புறப்பாட்டுக்கு முன்னர்த் திருவுலாச் செல்லும் திருவீதிகளில், தண்ணீர் தெளிக்கப்படுமாறு மேற்பார்த்துக் கொள் வதும், இவர்களின் கடமையாகும். வேதமும் பிரபந்தமும் ஓதுபவர்களுக்கு முன்னர்க் குடை பிடித்தலும், ஊர்வலத்தினை முன் நின்று நடத்து தலும், பக்தர்கள் கொணரும் வெற்றிலை தேங்காய் பழம் காணிக்கை முதலியவற்றைக் கோயிலின் சார்பில் பெறுதலும், அவற்றைப் பல்வேறு வகையான கோயில் அலுவலர்களுக்கு முறையே வழங்குதலும், இவர்களுக்குச் சிறப் புரிமையாகும். சமய சம்பிரதாய வரன் முறை களையும் அல்லது சோயில் தொடர்புடைய எந்தச் செய்தியையும் ஆராய்ந்துணர விரும்பும் பக்தர்களின் குழுவைக் கூட்டுவிப்பதும், அவர்கள் நிகழ்த்தும் ஆராய்ச்சி விவாதங்களை விசாரித்துத் தீர்ப்பளிப்பதும்கூட, இவர்களின் கடமையாகும்.

இராமானுஜரின் காலத்தில் இவர்களுக்கு வழங்கப்பெற்ற சிறப்புரிமைகளுள், வீதிகளை மேற்பார்வையிடக் கோயில் யானைகளின் மீது இவர்ந்து செல்லும் உரிமையை இவர்கள் தமக்கென அமைதது வைத்துக் கொண்டார் கள். ஆனுல் இந்தக் கடமைகள் மிகுதிப் பட்டபோதும், முஸலிம்களின் குடியிருப்பிற்குப் பிறகும், இவர்கள் தங்களுடைய உரிமைகளிற் சிலவற்றைப் பிராமணர்களுக்கு ஏதேனும் ஒன்றிற்குப் பதிலாகவோ அல்லது நன்கொடை யாகவோ விட்டுக்கொடுத்துவிட்டனர்.

(3) பட்டியலில் அடுத்திருப்பவர்கள், இராமானுஜரால் ஒரு தொகுதியாக மாற்றி அமைக்கப் பெற்ற பிராமணர்கள் அல்லது நம்பிகள் என்போர் ஆவர். இவர்கள் நேரடி யாக சுவாமி கைங்கரியத்திற்கும், அவரைப் பூசிப்பதற்கும், மூன்றும் பிராகாரத்திலுள்ள பற்பல சிறு சிறு சந்நிதிகளிலுள்ள சுவாமிகளைப் பூசிப்பதற்கும், நியமிக்கப்பெற்றனர். நாள் தோறும் கருவறையில் செய்யப்படும் பூசை யின்போது, இவர்கள் தூப தீபங்கள் ஏந்துவர். சுவாமியினது ஆடை அணிகலன் களைக் கழற்றியும், மாற்றியும் அணி செய்வர்: சுவாமிக்காகக் கொணரப்பெறும் வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் பால் பாயசம் முதலிய வழிபாட்டுப் பொருள்களை ஏற்பர். நாள் தோறும் நடைபெறுகின்ற திருமஞ்சனங்களி லும், விசேட காலங்களில் நிகழும் அபிஷேகங் களிலும், அருகேயிருந்து அவ்வச் சடங்கிற்குத் தேவைப்படும் பொருள்களை இவர்கள் எடுத் தளிப்பர். உதாரணமாக, சுவாமி தந்தசுத்தி செய்து கொண்டபிறகு, இவர்கள் கண்ணுடி எடுத்துக் கொடுப்பர். கொடிக்கம்பத்தில்கொடி யேற்றுவதும், கதாயுதம் சங்கு சக்கரம் விருதுக் கொடி என்பவற்றைப் பாதுகாத்து எடுத்து அளிப்பதும்கூட, இவர்களின் கடமையாகும்.

சுவாமி திருவுலாச் செல்லப் புறப்படுங்கால் அவரை வாகனங்களில் ஏற்றி அமர்த்துவதும், இவர்களின் கடமையாகும். இவர்கள் சுவாமிக் குப் புதியசிறந்த பூமாலைகள் சாத்துவர். சுவாமி யின் மீதிருந்து களைந்த பழைய பூமாலைகளைச் சுவாமியின் பிரசாதமாகக் கோயிலின் ஆட்சித் தலைவருக்கு அளிப்பர். சுவாமிக்கு மேலே குடைபிடிக்கும் உரிமையும் கூட, இவர்களுக்கு லழங்கப்பெற்றிருந்தது.

மாலைவேளைகளில், சுவாமி கருவறைக்குத் திரும்பும்போது, காவலர்கள் சென்றுவிட்ட பின்னர் இவர்கள் திருவரங்கத்திலேயே பிறந்த பக்தர்களாகிய உள்ளூரார்களுடன் சோந்து, பூட்டி முத்திரையிடப்பெற்ற பொற்கதவு வாயிலைக் காவலிருந்து பாதுகாப்பர். சுவாமிக்கு உரிய அணிகலப் பேழைகளைப் பத்திரமாக வாங்கி வைத்திருந்து, அவற்றின் பொறுப்பிற் குரிய அணிகல அலுவலர்களின்பால் திரும்ப ஒப்படைப்பர்.

சுவாமி விரும்பும்போது வேதங்களிலிருந்து சிலபகுதிகளை பாராயணம் செய்து ஓதுவதற்கும், சுவாமியின் வாகனத்தைப் பற்றிய புகழுரைகளாக உள்ள பாடல்களை ஓதுவதற்கும், இவர்கள் உரிமையுடையவர்களாவர். இவர்களில் வயது முதிர்ந்தவரும் அறிவு மிகுந்தவருமாக உள்ளவர்கள், பரமேஸ்வர சம்மிதையின் நுண்பொருள்களை மாணவர்களுக்குக் கற்பித்துப் பயிற்சி அளிப்பர்.

(4) அடுத்து வருபவர்கள், திருவரங்கத்திலேயே பிறந்த **உள்ளூரார்** எனப்படும் பிராமணர்கள் ஆவர். இவர்கள் இராமாநுஜரின் சிஷ்யர்கள். இவர்கள் மூலவருக்கும், புறவுலா வரும் உற்சவ மூர்த்திக்கும், கைங்கரியம் செய்ய அமைக்கப்பெற்றவர்களாவர். சுவாமி பூசைக்குரிய புனித பாத்திரங்கள், சுவாமியின் பட்டாடை பருத்தியாடைகள் விசிறி குடை அணிகலன்கள் தோரணங்கள், பஞ்சணைகள், உலாக் காலங்களில் உடனெடுத்துச் செல்லப் பெறும் வெற்றிலைப்பேழை, வளைந்த கூர்வாள் முதலிய பலவற்றைப் பாதுகாப்பதும், எடுத்துப் பயன்படுத்துவதும், இவர்களின் பொறுப்பாகும். நாள்தோறும் எல்லாச் சடங்குகளிலும் பயணங்களிலும் உலாக்களிலும், இவர்கள் சுவாமிக்குச் சந்தனம், சுவைமிக்க இனிய பலவகைப் பணியாரங்கள்முதலியன வழங்குவர் திருமஞ்சன நீரில் நறுமணம் கலப்பர். ஆலவட்டம் பணிமாறுவர். சுவாமியின் திருவடிகளில் நீர் சொரிந்து பூசிப்பர். சுவாமியின் நெற்றியில் வைஷ்ணவச் சின்னமாகிய புனித நாமம் தரிப்பதற்கு முன்னர்ச் சுவாமிக்குத் தாம்பூலம் வழங்குவர். திருமடைப் பள்ளியிலிருந்து பலவகை நிவேதனங்களைக் கொணர்ந்து சுவாமிக்குப் படைத்து உண்பிப்பர். புதிதாகத் தோய்த்த ஆடைகளும் துளசிமாலைகளும் சந்தனக் கலவையும் சமர்ப்பிப்பர். வேதமும் திவ்வியப்பிரபந்தமும் ஓதுபவர்களின் முன்பு, ஒரு புதிய பாத்திரத்தில் தேங்காய்ப்பால் வைப்பர். சுவாமிக்கு நிவேதனம் ஆனபிறகு, புனித விளக்குகளை மாற்றி அமைப்பர்.

உறையூரில் ஆண்டுக்கொருமுறை சுவாமியும், தாயாரும் சேரும்போதும், இருவரும் உடன் எழுந்தருளி வீற்றிருக்கும்போதும், அணிவகுத்துத் திரளாக நின்று வணக்கம் செலுத்தி, ஆலவட்டப் பணிபுரிவர். சில சிறப்பியல் நிகழ்ச்சிகளின்போது, கோயிலின் தலைமை ஆட்சியாளரைக் கௌரவிக்கும் கடமையும்கூட இவர்களுக்கு இருந்தது. அப்போது இவர்கள் வழிபாட்டிற்குரிய பொருள்களை வழங்கிக் கௌரவிப்பர். அவர் பொருட்டுச் சுவாமிக்கு அர்ச்சனை முதலிய செயல்களைப் புரிவர். சந்தனம் தாம்பூலம் முதலிய பிரசாதங்களை அளித்து வாழ்த்துவர்.

பிற்காலத்தில், மற்றைய பல கோயில் அதிகாரிகளைப் போல, உள்ளூரார் என்பவர்கள் தமக்குரிய பணிகளைத் தாமே செய்யாமல், ஏனைய ஊழியர்களிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் அவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பையும், தம்முடைய கௌரவப் பணிகளையும், தாமே வைத்துக்கொள்ளுவர்.

(5) இசைவாணர்களும் திருப்பதிகம் பாடுபவர்களும் ஐந்தாம் வகை ஊழியராக விளங்கினர். இவர்கள் **விண்ணப்பம் செய்வார்** எனப்படுவர். (வீணை (சிதார்) வாசித்தல், வேதம் ஓதுதல், பிரபந்த பாராயணம் செய்தல், இசை பாடுதல் ஆகியவற்றை, இறைவனின் முன்பு இவர்கள் எல்லாச் சமயங்களிலும் செய்வார்கள். பாடலும் இசையும் தெய்வ கைங்கரியத்தில் மிக முதன்மையான பங்கு பெற்றிருப்பதனால், இவர்களின் தொண்டு கோயிலில் மிகப்பெரிதும் நிகழ்ந்து வந்தது. இவர்கள் இசைக்கலையில் தேர்ச்சியும், சாத்திரங்களில் சிறந்த பயிற்சியும் பெற்றிருந்தனர். அதனால், கோயிற் கைங்கரியங்களில் மிகச் சிறப்பான உயர்விடத்தை இவர்கள் பெற்றிருந்தனர். சுவாமியின் திருமுன்னிலையில் விறலியர் நடனமாடும்போதும் இவர்கள் பாடுவது உண்டு. "விண்ணப்பம் செய்வார்" எனப்பெறும் இவர்கள், கோயிலில் தனி மரியாதைகள் பெற உரிமை உடையவர்களாவர்.

(6) **திருக்கரகக்கையார்** என்பவர்களும்சுவாமி பூசையில் நேரடியாகவும், நிலையாகவும்தொடர்புடையவர்களாக விளங்கினர். சரக்கறைக்குப் பக்கத்திலுள்ள சேம அறையிலிருந்து, வைகறையாகிய விடியற்காலையிலேயே தீர்த்த பாத்திரங்

களை எடுத்துக் கொண்டு சென்று, இரண்டு நாட்களுக்குத் தேவையான தீர்த்தங்களைக் காவிரி நதியிலிருந்து அவற்றில் முகந்து கொண்டு, யானையின் மீது வைத்துக் கோயிலுக்குக் கொணர்வது, இவர்களின் கடமையாகும். பின்னர், ஒருநாள் முழுவதும் செய்யப்படும் எல்லாப் பூசைகளிலும் பயன் படுத்தப்பெறும் ஐந்து பாத்திரங்களில், இவர்கள் நீர் நிரப்பி வைத்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும், விடியற்காலையில் சுவாமி முகங்கழுவித் தந்தசுத்தி செய்து கொள்ளும் சடங்கின் போதும், பிறகு அவருக்குத் தாம்பூலம்வழங்கும் போதும், பாதபூசை புரியும்போதும், தீர்த்த பாத்திரங்களை இவர்கள் ஏந்திநிற்பர். திருவிழாக்களுக்குப் பூமாலைகள் தொடுத்து அளிக்கும் பொறுப்புள்ள அலுவலரின் கைகளுக்குத் தண்ணீர் வார்ப்பதும், சுவாமிக்குப் பூமாலைகள் தொடுப்பதும், நறுமணம் ஊட்டப் பெற்ற விதைகளால் ஆரங்கள் புனைவதும், முற்காலத்தில் இவர்களின் கடமையாக இருந்தது. முஸ்லிம்களின் உட்குடியிருப்பு நேர்ந்ததற்குப் பின்னர், இப்பணிகள் பிராமணர் அல்லாத ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன.

(7) பணியாளர்களின் வரிசையில் **ஸ்தானத்தார்** என்பவர்கள் ஏழாம் வகையினராவர். சுவாமி பூசையோடு தொடர்புடைய எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வது, இவர்களின் கடமையாகும். சிறப்பாக, சுவாமி ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எழுந்தருளும் போது, அவரது பல்லக்கைச் சுமத்தலும், வாகனங்களைத் தாங்குதலும், திருவீதிவுலாக்களின்போது தீர்த்தக் கலசங்களுக்குக் குடை பிடித்தலும், சுவாமிஎழுந்தருளும் பல்லக்கிற்குப் பக்கத்தில் ஏதேனும் அசம்பாவிதங்கள் நேராதபடி உடன்செல்லுதலும், இவர்களுக்குக்கடமையாகும். சுவாமிக்குப் பால் தயிர் வழங்குதலும், உயர் அலுவலர்களுக்குச் சில பிரசாதங்களை அளித்தலும், கோயிலின் தலைமை ஆட்சியருக்குப் பூமாலைகள் சூட்டுதலும், சுவாமியின் விலை உயர்ந்த மணி பொன் வெள்ளி அணிகலங்கள் வைக்கும் பாதுகாப்பறைக்குக் கருட முத்திரை பொறித்தலும், இவர்களுக்குரிய சிறப்புரிமையாகும். முஸ்லிம்களின் உட்குடியிருப்பு நிகழ்ச்சிக்குப்பின்னர்த் திருவீதி உலாக்களை நடத்துதலுக்கும், சுவாமி பிரசாதங்களை விநியோகித்தலுக்கும் பொறுப்புள்ளவர்களாக, இவர்கள் தொடர்ந்து இருந்துவந்தனர். பிற்காலத்தில், குறிப்பாக நம்பிகளுக்கு, இவர்கள் தம்முடைய உரிமைகளில் சிலவற்றை விட்டுக் கொடுத்தனர். கருட முத்திரையைப் பொறிக்கும் உரிமை, நாச்சியார் சந்நிதியை நிர்வகித்து வந்த அலுவலரிடம் இறுதியாக மாறியது. ஆயினும், இதுபற்றி நெடுங்காலம் வழக்கீடுகள் இருந்து வந்ததனைக் 'கோயிலொழுகு' குறிப்பிடுகின்றது.

(8) அடுத்து வருபவர்கள் **பட்டர்கள்** எனப் படுபவராவர். இவர்கள் நாள்தோறும்பூசையின் போது கர்ப்பக்கிரகத்தில் இருந்து, வேத மந்திரங்கள் முதலியவற்றை ஓதும் கடமையும் பொறுப்புமுடைய ஒரு தனித் தொகுதியினராவர். இவர்கள் நித்தியப்படி பூசை, சிறப்பியல் நிகழ்ச்சிகள், ஆகிய எல்லாவற்றிலும் உடனிருந்து கலந்து கொள்வர். பரிவட்டம் சந்தனம் தனிமாலைகள் தாம்பூலம் முதலிய சுவாமி பிரசாதங்களைப் பெறுவர். ஸ்ரீ இராமாநுஜர் செய்த சீர்திருத்தங்களுக்குப் பின்னர், ஸ்ரீரங்கம் கோயிலின் தலைமை அருச்சகராகிய நம்பிகள் ஒருவரே, இதற்குமுன் செய்துவந்த பலபணிகள், இவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாகப் பிரித்தளித்து ஒப்படைக்கப் பட்டது.

(9) இப்பணியாளர் திரளில் இறுதியாகக் குறிப்பிடத்தக்கவர், **ஆரியபட்டர்கள்** என்னும் பிராமணர்கள்ஆவர். இவர்களுடைய முதன்மையான வேலை, கோயிலையும் சுவாமியையும் கண்ணும் கருத்துமாக இருந்து பாதுகாப்பதாகும். இவர்கள் மூன்றும் பிராகாரத்தில் வடக்கு வாயில், தெற்குவாயில் முகப்புக்களிற் காவலாக நியமிக்கப்பெற்றிருப்பவர். முதல் இரண்டு பிராகாரங்களிலிருந்து உள்ளே வருதல், வெளியே செல்லுதல் ஆகிய எல்லாச் செயல்களையும், இவர்கள் இரவிலும் பகலிலும் கூர்ந்து கவனித்துக் கண்காணிப்பர். சுவாமி வெளியே திருவுலா எழுந்தருளும் போதும், உள்ளே மீண்டும் திரும்பும்போதும், பல்லக்கின் பின்புறத்தண்டுகளை இவர்கள் சுமப்பர். இரவு நேரங்களில் கோயில் வாயில்களுக்கு அருகி

லுள்ள தாழ்வாரங்களில் உறங்குவர். வைகறை விடியலில், சுவாமியை வழிபடவரும் திருப்பதி யாருக்கும் யாத்திரிகர்களுக்கும் கோயிற் கதவு களைத் திறந்து விடுவர். அரசமுத்திரை இவர் களின் பொறுப்பிலேயே இருக்கும். அதன் நோக்கம் யாதுஎனில், இவர்கள் தங்கள் பணி களைச் செய்யும்போது இவர்களுக்குப் பாது காப்பு அளிப்பதாகும்.

(10) கோயிற்பணிகளின் இறுதிவகையின ராக இருப்போர், **தசநம்பிகள்** எனப்படும் குழு வினர்களாவர். இவர்கள் முற்காலத்தில் கோயிலுக்குப்பூமாலைகள் முதலியன தொடுத்து வழங்கிவந்தவரின் வழிவந்தவர்களாவர். இவர் கள் சுவாமிக்காகத் திருநந்தவனங்கள் அமைப் பர்; கர்ப்பக்கிரகத்தின் உள்ளேயும்வெளியே யும், சுவாமியின் திருமுன்னிலையில் ஒளிவிளக்கு கள் ஏந்துவர்கோயிலின் ஏழு பிராகாரங்களிலும் சுவாமி திருவுலா எழுந்தருளும் சிவிகையைப் பூமாலைகளால் அழகுபடுத்திப் பணிபுரிவர்; மற்றும் பற்பல திருவுலா நிகழ்ச்சிகளுக்குரிய, எல்லாவகையான பூமாலைகளையும் இவர்கள் தொடுத்து அளிப்பர். இவர்கள் ஆழ்வார்களின் சந்நிதிகள், ஸ்ரீஇராமாநுஜரின் சந்நிதி முதலிய வற்றிலும் கூடப்பணிபுரிவர்; அதற்காக பெரும் மரியாதைகளையும் பெறுவர்.

இப்பத்துவகையான கோயிற் பணியாளர் கள் ஆகிய அந்தணர் குழுவினருடன் ஸ்ரீஇரமா நுஜர் **ஏகாங்கிகள்** என்னும் மற்றும் நான்கு உதவியாளர்களையும் சேர்த்தருளினர். இவர்கள் சந்நிதியின் வாயிற்படியிலிருந்தும், விசேட காலங்களில் பக்தர்கள் காணுதபடி மறைக்கும் திரைச் சீலையின் அருகில் இருந்தும், கர்ப்பக் கிரகத்தைப் பாதுகாக்க நியமிக்கப்பெற்றனர். அனுமதிபெருத மனிதர்களைச் சந்நிதியின் உட் புகாதபடி தடுத்து நிறுத்துவது, இரவிலும் பகலிலும் இவர்களின் கடமையாகும். நித்திய நைமித்திக பூசைகளுக்குரிய நிவேதனப் பொருள்கள் நறுமணப்பொருள்கள் முதலிய எல்லாவகையான பொருள்களையும் பாது காப்பதும்கூட, இவர்களின் கடமையாகும்.

இவர்களைமட்டுமேயன்றிமற்றும், '**சாத்தாத முதலிகள்**' எனப்படும் எட்டு வைஷ்ணவத் துறவிகளையும்கூட ஸ்ரீஇராமாநுஜர் நியமித்தார், இவர்கள் சுவாமிக்குக் கொடிபிடித்தல், பொன் வெள்ளி விளக்குகள் ஏந்துதல், இராமாநுஜரின் வாட்படையைத் தாங்குதல், அருச்சகர்களுக்கு மெய்காவல் புரிதல், என்பனவற்றிற்குப் பொறுப்புடையவர்களாவர்.

148685

அடுத்து வருபவர்கள் **வேத்திரபாணிகள்** எனப்படுபவர். இவர்கள் கோயிலுக்கு வெளியே இருந்து எடுத்துச் சேர்க்கப்பெற்றவராவர். சுவாமி கர்ப்பக்கிரகத்திலிருந்து புறப்பட்டுத் திருவுலா எழுந்தருளும்போது, ஒழுங்கும் அமை தியும் நிலவும்படி பார்த்துக்கொள்வது, இவர் களின் கடமையாகும். திருவிழாக்காலங்களில் சுவாமி திருவீதியுலா புறப்படுவதற்கு முன்னர், இவர்கள் வாழ்த்தியற் பாராட்டு ஒலிகள் எழுப்புவர்; வேதபாராயணம் முதலியன நிகழும்போது அமைதியை நிலைநாட்டுவர். சுவாமியின் பூசைக்காக நியமிக்கப்பெற்றுள்ள திருப்பதியம் ஓதுபவர்களுக்கு, மக்கள் திரளில் வழி ஒதுக்கி விடுவர்.

(1) அந்தணர்களாகிய இவ் எல்லாக் குழு வினர்களுக்கும் கூடுதலாக, ஸ்ரீஇராமாநுஜர் உழுதொழில் புரியும் வேளாளர்களையும் நியமித் தார். கோயிலின் நித்தியப்படித் தேவைக் குரியன ஆகிய தானியங்கள் அளப்பவர், இவர் களுள் முதலாமவர் ஆவர். அடுத்து நிற்பவர் முதற் பிராகாரத்தின் காவலர்களும், கோயில் கணக்கர்களும்ஆவர். இவர்களுக்குரிய சிறப்புரி மைகள் இன்னின்ன என்பது குறித்து, மிகுதி யான சர்ச்சைகள் இருந்து வந்தனவாகத் தெரி கின்றது. கருவூலத்தின் தலைமை அலுவலர் ஒரு வேளாளரால் வகிக்கப் பெறுதல் வேண்டும் என்று, நெடுங்காலமாக ஒப்புக்கொள்ளப் பெற்றது. ஆனுல் தலவரலாறு கூறுகின்றபடி, பிற்காலத்தில் ஸ்ரீஇராமானுஜர் வேறு ஒரு பதவியையும் தோற்றுவித்து, அதனை ஒரு பிரா மணருக்கு அளித்தார். அதன் விளைவாகப் பதவி யாளர்களுக்குள் அடிக்கடி பூசல்கள் நிகழ்ந்தன. அதனுல் மீண்டும் அப்பதவி பார்ப்பனரல்லாத ஒரு கருவூலராலேயே வகிக்கப் பெறுவதாயிற்று எனத் தலவரலாறு கூறுகின்றது.

(2) மற்றும்பல சிறு சிறு பதவிகளும், பார்ப்பனரல்லாதவர்கள்பால் ஒப்படைக்கப் பெற்றன. இரண்டாவது பகுதியாக அமைந்த

இவர்களுடைய கடமைகள், வழிபாட்டுக்குரிய பொருள்களை எல்லாம் தொகுத்துச் சேமித்து வைப்பதும், அவ்வப்போது எடுத்துக் கொடுப்பதும், உப்புமிளகுமசாலை முதலிய பொடிவகைகளையும் கோயிற்கதவுகளில் முத்திரையிடுவதற்குரிய களிமண் அரக்கு முதலியனவற்றைத் தயாரிப்பதுமாகும்.

(3) மூன்றுவது தொகுதியினர், தெய்விக நடனமாடும் **தேவதாசிகள்** என்பவர்களாவர். இவ்வகையினர் தஞ்சாவூரில் 11-ஆம் நூற்ருண்டில் இருந்து வந்ததாகத் தெரிகின்றது. 11-ஆம் நூற்ருண்டிலிருந்து முதன்மையாக வளர்ந்து பரவி வந்த இத்தொகுதியினர், 19ஆம் நூற்ருண்டின்இறுதியில் அறவேஒழித்து நீக்கப்பெற்றனர். இவர்களின் கடமைகள் சுவாமியுடன் தொடர்புடையனவும், கோயிற் சடங்குகளில் மிக்க புனிதமுடையனவுமாகும். கோயிலொழுகு என்னும் இத்தலவரலாற்று நூலில், தேவதாசிகள் என்போர் மிகமதிப்பான சிறப்பிடம் அளிக்கப்பெற்று உள்ளனர். கி.பி. 1323-ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் திருவரங்கம் கோயிலைக் கைப்பற்றி உட்புகுந்தபோது, தேவதாசிகளுள் ஒருத்தி, கோயிலைப் பாதுகாத்து அளித்து, ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்கிய செய்தியினை, அந்நூல் குறிப்பிட்டுப் புகழ்ந்து கூறியுள்ளது.


(4,5) இவற்றிற்கு அடுத்த இருவகைப் பணியாளர்கள்கோயிலையும்அவற்றிற்குபுறம்பே அமைந்துள்ளகட்டிடங்களையும், பாதுகாப்பவர் ஆவர். தெய்வ வடிவங்களைச் செதுக்குகின்ற சிற்பிகள், கொடிகள் முதலியவற்றிற்கு வண்ணம் தீட்டுகின்ற கம்மியர்கள்; சுவாமிக்கு உரிய புதிய நகைகளைச் செய்பவர்களும், பழையனவற்றைப் புதுப்பித்து மெருகேற்றுப வர்களுமாகிய பொற்கொல்லர்கள்; வழிபாட்டிற்குப் பயன்படும் பித்தளைப் பாத்திரங்களைச் செய்பவர்கள் அல்லது பழுதுபார்ப்பவர்களாகிய கன்னர்கள், கோயில் மணிகள், சேமக் கலங்கள் நிலைவிளக்குகள் படிகள் பீடங்கள் ஆகியவற்றிற்குத் தகடுகள் முதலியவற்றைச் செய்கின்ற உலோக வேலைக்காரர்கள். ஆகியோர்; இப்பணியாளர் தொகுதியைச்சேர்ந்தவராவர்.

(6) ஆருவது தொகுதியாக விளங்கும் பணியாளர்கள், தையற்காரர் தச்சர் நெசவாளர் முதலியோராவர். இவர்கள் கோயிற் றூண்களிலும் பந்தர்க் கூரைகளிலும் தொங்க விடப்படும் விதானங்கள். மடிப்புத் தொங்கல்கள் முதலியவற்றைத் தைத்துச் சரிகை முதலியனவற்ருற் பின்னிச் சித்திர வேலை செய்து அழகுபடுத்துவர். சுவாமிக்குரிய பலவகை ஆடைகளையும், தோரணம் கொடி முதலியவற்றையும் தயாரிப்பர். மிகப் பெரிய குடைகள் பெரிய ஆலவட்டங்கள் விருதுச் சின்னங்கள், பல்லக்கின் மேற்புறத் துகில்கள் முதலியவற்றைத் தச்சர்கள் செய்து வந்தனர். பூமாலைகள் தொடுத்தற்குரியபட்டுச் சரிகைகள், சாமரைகள், ஒட்டடை நீக்கிகள், தொங்கற் குஞ்சங்கள் என்பவற்றை நெசவாளர்கள் தயாரித்தனர்.


(7) ஏழாவது தொகுதியாக விளங்கும் பணியாளர்கள், சலவையாளர் ஆவர். இவர்கள் சுவாமிக்குச் சாத்தப்படும் பரிவட்டம் முதலிய ஆடைகளைத் துவைத்து உலர்த்துவர். பூசையின்போது பயன்படுத்தப்படும் தட்டுகள் முதலியவற்றை மூடும் துணிவகைகளை வெளுத்துச் சுத்தம் செய்வர்.


மண்டபங்களின் கூரைகளை அழகுபடுத்தும் துணிகளை வண்ண ஒவியம் தீட்டுவர். கோயிலொழுகு நூலில் இச்சலவையாளர்களுக்குச் சிறப்பான மதிப்பிடம் அளிக்கப்பெற்றிருக்





ஈரோடு ஸ்ரீ பெரியமாரியம்மன் ஸ்ரீ சின்ன மாரியம்மன் திருக்கோயிலுக்கு,
நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம். கண்ணப்பன்
அவர்கள் வருகை தருதல் (11-4-71)





குளித்தலை வைகநல்லூர் ஸ்ரீ பேராள குந்தாளம்மன் கோயிலில், சுற்று மதிற்சுவர்—
உற்சவ மண்டபம் ஆகியவற்றை, நமது அறநிலைய அமைச்சர்
மாண்புமிகு திரு. எம். கண்ணப்பன் அவர்கள் திறந்து
வைத்துச் சிறப்பித்தல். (4-4-71)

கிறது. கி. பி. 1371 - ஆம் ஆண்டில், டெல் லிச் சுல்தான் ஒருவனின் ஏவலராகிய சில முஸ்லிம்கள் கவர்ந்து எடுத்துச் சென்றுவிட்ட அழகிய மணவாளப் பெருமாளின் மூலத் திருப் படிமத்தை, அடையாளம் தெரிந்துஅறிவித்துக் கண்டுபிடித்து, மீளவும் அதனைத் திருவரங்கத் திற் கொணர்ந்து விஜயநகர அரசர்கள் பிர திட்டை செய்வதற்கு உதவி புரிந்தவர், கண் தெரியாத ஒரு சலவையாளரே என்று, கோயி லொழுகு மிகத் தெளிவாக விவரித்துக் கூறுகின்றது.

(8) அடுத்துவரும் எட்டாம் தொகுதி யினர் குயவர்கள் ஆவர். இவர்கள் கோயில் திருமடைப்பள்ளியில் நாள்தோறும் பயன் படுத்தப்பட்டு, பின்னர் உடைத்தெறியப்படும் மட்பாண்டங்களைத் தினமும் புதியனவாகச் செய்து கொடுப்போர் ஆவர்.

(9) ஒன்பதாம் தொகுதியினர் படகோட் டிகள் ஆவர். இவர்கள் காவிரியின் அக்கரையிலி ருந்து கோயில் திருமடைப்பள்ளிக்குப் பால் தயிர் முதலியன போன்ற உணவுப்பொருள் களைக் கோயிலுக்காகக் கொணர்ந்து தருவர்.

(10) இசைவாணர்களும், நடன ஆசிரி யர்களும் பத்தாம் தொகுதியினராவர். இவர்கள் எல்லாரும் முதன்மையான விழாக் களிலும் விசேட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்பர்.



திருவாடானை ஸ்ரீ ஆதிரத்தினேசுவரர் கோயிலில் நிகழ்ந்த பாவைவிழாவில் ஸ்ரீ ஆண்டாள் சரித நாடகத்திற் கலந்துகொண்டு நடித்த குழந்தைகள்.

திரு. 4.

# திருவையாற்றில் திருக்குடமுழுக்கு விழா

## (விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி)

திரு. கே எஸ். நரசிம்மன், B. A., B. L., I. A. S.
*ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34.*

''ஐயாறே, ஐயாறே என்பீர் ஆகில்
அல்லல்தீர்ந்து அமருலகம் ஆள லாமே''

நமது தமிழ் நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்கள் பலவற்றுள், மிகவும் தலைசிறந்ததொன்றாகத் திகழ்வது திருவையாறு. இதனைத் ''தென்கயிலாயம்'' எனப் பெரியோர்கள் புகழ்ந்து போற்றுவர். இத்தலத்தில்தான், திருநாவுக்கரசர் பெருமான் சிவபிரான் திருவருளால் திருக்கயிலாயக் காட்சி கிடைக்கப்பெற்றார். சுவாமி பாதகங்கை, தேவிகங்கை, இடபகங்கை, காவிரிநதி, நந்திதேவரின் உவகை நதி என்னும் ஐந்து ஆறுகள் பெருக்கெடுத்த தலமாதலின், இதற்குத் திருவையாறு என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு ஐயாறப்பர், செம்பொற் சோதி, ஜெபேசுவரர், கயிலாயநாதர், பிரணதார்த்திஹரர் முதலிய பெயர்கள் உண்டு. அம்பிகைக்கு அறம்வளர்த்த செல்வி என்றும், தர்மசம்வர்த்தனி என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

இத்தலத்தில்தான் சிலாத முனிவர் என்பவர் அருந்தவம் புரிந்து, திருநந்தி தேவரைப் புதல்வராக அடையும் பேறு பெற்றார். சிவபெருமான் நந்திதேவர்க்கு ஆசாரிய அபிஷேகம் செய்வித்து, அவரைக் கணநாதராக ஆக்கியருளியதும், திருநந்தி தேவர் சுயம்பிரகாசை என்னும் தேவியைத் திருமணம் செய்து கொண்டதும், இத் தலமே யாகும். இத்தலத்திலேயே, சிவபெருமான் தானே ஆதிசைவர் வடிவத்தில் தோன்றித் தன்னைத்தானே பூசித்து, பூசை புரியும் நெறிமுறைகளை உலக மக்களுக்குக் காட்டி உணர்த்தியருளினர். இதுபற்றியே மணிவாசகர் ''ஐயாறு அதனில் சைவன் ஆகியும்'' என்று அருளிச் செய்தார்.

திருவையாறு, சைவ சமய குரவர்கள் ஆகிய அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்க வாசகர் என்னும் நால்வராலும் புகழ்ந்து பாடிப் போற்றப்பெற்ற சிறப்புடையது. ஐயடிகள் காடவர்கோன், தமது க்ஷேத்திர வெண்பாவில் இத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார். இத்தலத்தில் பஞ்சாக்கர செபம் புரிதல், பிற தலங்களிற் செய்வதிலும் மிக்க பெரும் பயனை விளைவிக்கும்; இங்கு ஜெபசித்தி மிக விரைவில் எளிதில் கிடைக்கும். இங்கேயுள்ள ''ஹரிகுருசிவயோக தட்சிணாமூர்த்தி'' தனிப்பெரும் சிறப்புள்ள மூர்த்தியாவர்.

தம்மைத் திருவைந்தெழுத்து ஓதி வழிபட்ட சுசரிதன் என்னும் அந்தணச் சிறு வனுக்குக் கூற்றுவனல் தீங்கு நேராமல், இங்குச் சிவபெருமான் காத்து ஆட்கொண்ட ருளினர். ஐயாறப்பரது அருளாணையின் வண்ணம்போந்து இயமனை அழித்துச்சுசரிதனைக்

காப்பாற்றி அருள்புரிந்த துவாரபாலகர், தெற்குக்கோபுர வாயிலில், 'ஆட்கொண்டார்' என்னும் பெயருடன் விளங்கி வருகின்றார். அவர் இங்குத் தனிச் சிறப்புடைய மூர்த்தி யாக வழிபடப் பெறுகின்றார். இவரது சந்நிதியில் உள்ள குண்டத்தில், குங்கிலிய தூபம் எப்போதும் அணையாமல் எரிந்துகொண்டேயிருக்கும். அதன்கண் குங்கிலிய தூபம் இடுவோர், மரண பயமும் வேதனையும் எய்தார் என்று பெரியோர்கள் கூறுவர்.

வடலூர் இராமலிங்க சுவாமிகள், சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவராகிய ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், கோடகநல்லூர்ச் சுந்தரசுவாமிகள் போன்ற சான்றோர்கள் பலர், இங்கு ஐயாறப்பரை வழிபட்டுச் சிறந்த அருள் பெற்றனர்.

திருவையாறு திருப்பழனம் திருச்சோற்றுத்துறை திருவேதிகுடி திருக்கண்டியூர் திருப்பூந்துருத்தி திருநெய்த்தானம் என்னும் ஏழு தலங்களும், சப்தஸ்தானம் என்று போற்றப் பெறுகின்றன. சித்திரை மாதப் பூரணையை ஒட்டி இந்த ஏழு தலங்களிலும் நடைபெறும் சப்தஸ்தானத் திருவிழா என்பது, மிகவும் பிரசித்திபெற்ற ஒரு பெரும் திருவிழாவாகும்.

இத்தகைய பல பெருஞ் சிறப்புக்களையுடைய திருவையாற்றுக் கோயில், தருமை யாதீனத்தின் அருளாட்சியில் கண்ணும் கருத்துமாகப் பெரிதும் போற்றப்பெற்று வரு கின்றது. தருமையாதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அவர்கள், கோயில்களுக்குத் திருப்பணிகள் செய் வதிலும், மகாகும்பாபிஷேக விழாக்கள் நடத்துவதிலும், தனிப் பெரும் புகழும் சிறப்பும் பெற்று விளங்கி வருகின்றார்கள். அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம், பற்பல அரிய பெரிய திருப்பணிகள் செய்யப்பெற்று, திருவையாற்றுக் கோயிலில் மகாகும்பா பிஷேக விழா, 31-3-71 அன்று மிக்க பெருஞ் சிறப்புடன் நடைபெற இருப்பது, நம் அன்பர்கள் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியளிக்கும் நிகழ்ச்சியாகும்.

மகா கும்பாபிஷேக விழா மிகவும் சிறப்புற நன்கினிது நிகழ, ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி சமேத ஸ்ரீ ஐயாறப்பர் திருவடிகளைச் சிந்தித்து வந்திப்பதுடன், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களுக்கும், என் பணிவார்ந்த வணக்கங்களையும், நன்றியையும், பாராட்டுதல்களையும், பெரிதும் அன்புடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

— (ஒப்பம்) கே. எஸ். நரசிம்மன்

# ஆதிச் செல்வன்

திரு. K. M. வேங்கடராமையா, M. A,. B. O. L. திருப்பனந்தாள்

## திருவானைக்கா தேவாரத்தில் :

திருநாவுக்கரசர் திருவானைக்கா — திருக் குறுந்தொகையில், ''ஆதியாயிடும் ஆனைக்கா அண்ணலே'' என்றும், திருத்தாண்டகத்தில், ''திருவானைக்காவுடைய செல்வா'' என்றும் பாடியுள்ளார். சுந்தரர், ''திருவானைக்கா வுடைய ஆதி'' என்பர். திருநாவுக்கரசர் இறைவனை ஆதி என்றும், செல்வன் என்றும் கூறியுள்ளமையை நோக்கின், திருவானைக்கா இறைவனைப் பிற்காலத்தார் ஆதிச்செல்வன் என்று வழங்குவராயினர் எனக் கொள்ளலாம். இறைவனே அந்தமும் ஆதியுமாக இருத்தலினாலும், சென்றடையாத திருவுடையனாதலினாலும், இறைவனை ஆதிச் செல்வன் என்றல் சாலப் பொருந்தும்.

## திருவானைக்கா உலாவில் :

திருவானைக்காவுலா, காளமேகப் புலவராற் பாடப்பெற்றது; 461 கண்ணிகளையுடையது, திருவானைக்கா தொடர்புடைய சம்பு முனிவர் வரலாறு, அம்பிகை பூசித்த வரலாறு, யானை வழிபட்டமை, கோச்செங்கட் சோழர் வரலாறு ஆகியவையும் பிறவும் இவ்வுலாவில் இடம் பெற்றுள்ளன. இவ்வுலாவில் திருவானைக்கா இறைவன் ஆதிப் பெருஞ்செல்வன் என்று 70, 241, 270, 286, 342, 402, 451 ஆகிய கண்ணிகளில் குறிக்கப்படுகிறார்.

## திருவானைக்காப் புராணம் :

இது கச்சியப்ப சுவாமிகள் எழுதிய நூல்களுள் ஒன்று. இப்புராணத்தில் கோச் செங்கணார் வழிபடுபடலம் என்று ஒருபடலம் இருக்கிறது. அதில் செய்யுள் 196 முதல் 222 வரையுள்ள பாடல்களில் திருவானைக்கா இறைவன், ஆதிப் பெருஞ்செல்வர் என்னும் திருப்பெயர் பெற்ற வரலாறு கூறப்பெற்றுள்ளது.

## ஆதிப்பெருஞ் செல்வரான வரலாறு :

கோச்செங்கட் சோழன் அரசு புரியுங்கால், தவம் முன் செய்த பெற்றிமையால், அளவிலாத திருப்பணிகள் புரிவதற்கு மனம் வைத்தார்; ஆகவே பல அரசர்களையும் வென்று கொண்டே வந்து, நாவல் வனத்தினை முற்றுகையிட்டார்; நாவல் மரத்தின் நிழலில் எழுந்தருளியுள்ள திருவுருவைச் சார்ந்து வணங்கினார்; எம்பெருமானுக்குத் திருக்கோயில் அமைக்க வேண்டும் என்று கருதித் தக்க வினைஞரைக் கொணருமாறு ஆட்களைப் போக்கினார். பின்னர் அந்நாளிரவில் துயில் கொள்ளலானார்.

இறைவன் அரசரின் கனவில் தோன்றி, ''அரசனே! பொன்னாலும் மணியாலும் ஆக்கும் திருக்கோயில் பணியை நிறுத்துவாயாக! தேவர் தச்சன் முன்னமேயே எமக்கு ஆலயம் இயற்ற எண்ணி, விமானம் அமைத்துக் கெண்டகை

நதியில் இட்டு, அதன் வழி இத்தலத்தில் சேர்ப்பிக்க முயன்றுன்; யாமும் 'அதனை இவ்வாற்றில் இட்டுச் செல்க' என்றனம்; அவனும் அவ் விமானத்தை அவ்வாற்றிலிட்டு இத்தலம் எய்தித் தவமியற்றி வீடுற்றனன்; ஆதலின் அவ் விமானத்தை நீ இங்குக் கொணர்க'' என்று கூறி மறைந்தருளினுர். அரசன் அப்பணி தலைமேற் கொண்டவனுய், வடதிசை நோக்கிச் சென்று, கெண்டகை நதிதீரத்தில் அவ் விமானம் இருக்கக் கண்டனன். இறைவன் "அவ் விமானத்தைக் கெண்டகை நதியில் விடுக'' என்று ஆணையிட, அரசனும் அவ்வண்ணமே செய்து திருவானைக்காவுக்கு வந்து காவிரி நதியைச் சார்ந்து நின்றனன். திருநாவுக்கரசர் வடதிசைக்கண் ஒரு தடாகத்தில் மூழ்கித் தென் திசைக்கண் திருவையாற்றில் எழுந்ததுபோல, அவ்விமானமும் காவிரி நதியில் எழுந்தது.

''திரைதவழ் பொன்னி சார்ந்து
செங்கணுர் நிற்ப வாக்குக்
கரையர்முன் வடாது திக்கின்
அமரொரு தடத்தின் மூழ்கி
விரையவை யாற்றுப் பொய்கை
மீமிசை எழுந்தா லென்ன
விரைபுனல் பொன்னி நாப்பண்
எழுந்தது விமானம் அம்மா!'
(செ. 216)

அரசனும் அவ்விமானத்தைக் கரையேற்றினுன்; நாவல் நிழல் நம்பர்க்கு இனிது சாத்தினுன் ஒன்பான் சாளரம் மேல்பால் வைத்தான்; புனைமணிவாயில் தென்பால் ஆக்கினுன்; தெற்கு வாயிலுக்கு நேரே முப்பது சாலேகத்தோடு விண்அளாவும் கோயில் அமைத்தான்; மண்டபங்கள் பிராகாரங்கள், கோபுரங்கள் முதலியன கட்டுவித்தான்; பின்னர் அதற்கு நேரே மண்டபத்துக்கு மேற்பால் ஒரு கோயில் அமைத்தான்; அக்கோயிலுள் சிவலிங்கம் ஒன்று தாபித்துத் தன் நிதிக் குவைகளையெல்லாம் கொணர்ந்துவைத்து, ''இவை உமக்கேயுரிய; இவற்றைக் கொள்க'' என்று வேண்டினுன். அதனுல் அன்றுமுதல் அவ்விறைவனுக்கு ஆதிப்பெருஞ் செல்வர் என்ற திருநாமம் விளங்குவதாயிற்று.

''சித்திரக் கோயி லுள்ளே
சிவலிங்க மொன்று தாபித்(து)
உத்தம நிதிக ளெல்லாம்
உமதருள் வசமா ஈங்கு
வைத்தனன் கைக்கொள் என்று
வணங்கினுர் அதனுல் அந்தப்
பித்தருக்(கு) உளதால் ஆதிப்
பெருஞ்செல்வர் என்னும் நாமம்''
(செ. 222)

## கல்லெழுத்துக்களில்;

வீரராமநாதன் என்பான் போசள அரசர்களுள் ஒருவன். அவன் 1251 முதல் 1271 வரை ஆண்ட எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர் காலத்தில், சுந்தரபாண்டியனுக்குக் கப்பம் செலுத்திக்கொண்டு சோணுட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தவன். இவ்வீரராமநாதனுடைய ஏழாவது ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டொன்று திருவானைக்காவில் உள்ளது. இது இராமநாததேவர் அரசியார் அரிய பிள்ளை மகளார் கமலாதேவியார் தங்கையார் சிக்கச்சோமல தேவியார்க்கு எழுதிக்கொடுத்த நிலவிலைப் பிரமாண இசைவுத் தீட்டு ஆகும், நான்குவேலி நிலம் நாற்பதினுயிரம் காசுக்கு விற்கப்பட்டது. இந்நிலத்தினின்று பெறக் கூடிய வருமானம் கோயில் பண்டாரத்தே கொடுக்கப்படவேண்டும். அப்பண்டாரத்தின் பெயர் (அப்பொருள் நிலையத்தின் பெயர்), ''ஆதிச்செல்வன்பண்டாரம்'' என்று இக்கல் வெட்டில் சொல்லப்பட்டுள்ளது.

மேலே கண்ட சுந்தரபாண்டியனுடைய மகன் குலசேகரபாண்டியன் எனப் பெற்றுன். இவன் கி. பி. 1208 முதல் 1211 வரை ஆட்சி புரிந்தவன். "தேர்போல்'' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியுடைய இவனது பத்தாவது ஆட்சியாண்டுக்குரியகல்வெட்டு(தென்னிந்தியச் சாஸனங்கள், பகுதி IV, எண் 426) திருவானைக் காவில் உள்ளது. இதுவும் ஒரு நிலவிலைப்பிரமாண இசைவுத் தீட்டு. இவனது பிறந்த நாள் ஆன பரணி நாளில் உச்சி சந்தியில் இறைவன் அமுது செய்தருளத் தரப் பெற்றது இந்த நிபந்தம். இதில் ஆதிச்செல்வன் போனகப் பழநெல் பண்டாரம் என்று அமுதுபடிக்காக நெல் சேக

ரித்து வைக்கப்பெறும் இடம் ஆதிச்செல்வன் என்ற பெயரால் அமைந்திருப்பது குறிக்கப் பெற்றுள்ளது. இந்தக் கல்லெழுத்தில் கையெழுத்து இட்டவர்களுள் ஒருவர் கோயில் நாயகம் ஆதிச்செல்வன் வயிரமாராயர் என்ற பெயருடையவர்; இன்னெருவர் ஆதிச்செல்வ வேளான் எனப்பெற்ருர். இவர் மெய்காவல் ஆதல் கூடும்.

**தொகுப்புரை ;**

இதுகாறும் கூறியவாற்ருன் திருநாவுக்கரசர் திருவானைக்காத் தேவாரத்தில் இறைவனை ஆதி என்றும் செல்வனென்றும் குறித்தார் எனவும், இறைவனுக்கு ஆதிப் பெருஞ்செல்வன் என்பது திருநாமங்களுள் ஒன்று என்பது திருவானைக்காவுலாவில் கண்டது ஆகும் எனவும், ஆதிப்பெருஞ் செல்வரான வரலாறு கூறின்னது எனவும், திருவானைக்காக் கல்லெழுத்துக்களில் கோயிற் பொருள் நிலையத்துக்கு ''ஆதிப் பெருஞ்செல்வன் பண்டாரம்'' என்ற பெயர் இருந்தது எனவும் அறியலாயிற்று.



இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஸ்ரீ ஆதிரத்தினேசுவரர் கோயிலில் நிகழ்ந்த பாவை விழாவில், கலந்து சிறப்பித்த பெருமக்கள் (24—1—71)

# இராம காவியம்

ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

இராம காவியம் ஆகிய இராமாயணம், மிகச் சிறந்த பெருங் கவிஞரும் ஞானியுமாகிய வால்மீகி முனிவரால் இயற்றப்பட்டது, திரேதா யுகத்தில், இட்சுவாகு வம்சத்தில், தசரதனுக்கு மைந்தராகத் தோன்றிய ஸ்ரீ இராமச்சந்திரரின் வரலாற்றை, அந்நூல் விவரித்து அழகுமிகக் கூறுகின்றது. இராமபிரான் பிறப்பதற்கு முன்னரே, வால்மீகி முனிவர் இராமாயணத்தை இயற்றிவிட்டதாக, ஒரு கருத்து உண்டு. ஆயினும், அது கி. மு. நான்காம் நூற்றுண்டில் இயற்றப் பெற்றிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

வால்மீகி முனிவர் தமது ஆதி காவியத்தை இயற்றுவதற்கு, இறையருளின் தூண்டுதல் பெற்றுர். அதனுடைய அழகும் இனிமையும் சிறப்பும் தெய்விகத் தன்மையும் அளவிடற்கரியன. அது ஏழு காண்டங்களும், 660 சருக்கங்களும், 24092 சுலோகங்களும் கொண்டது. கவிதைச் சிறப்பும், கற்பனை நயமும் பெரிதும் கொண்டது. உவமை உருவகம் உள்ளுறை மிகுத்துரை முதலிய பற்பல சுவைமிக்க அணிகள், அதனை அழகும் சிறப்புமுடையதாக ஆக்குகின்றன. உலகின் தலைசிறந்த இலக்கியங்களில் ஒன்றுக, இராமாயணம் ஈடும் எடுப்புமற்று இலங்குகின்றது.

இராமபிரான் ஒரு சிறந்த புதல்வராகவும், ஒப்பற்ற சகோதரராகவும், உண்மை நண்பராகவும், உயர்ந்த வீரராகவும், அன்புமிக்க கணவராகவும், இணையற்ற அரசராகவும், உத்தமக் குடும்பத் தலைவராகவும், சிறந்து விளங்குகின்றுர். அவருடைய வாழ்க்கை மனித குலம் முழுவதற்கும், ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குகின்றது. ஒழுக்கத்தின் உயர்வும், தியாகத்தின் சிறப்பும், தவத்தின் பெருமையும் பிறவும், இராமாயணம் என்னும் இதிகாசத்தால், உலக மக்களுக்குத் தெளிவுற உணர்த்தப்பட்டுள்ளன. கங்கையாறு தான் பாயும் நாட்டின் பகுதி அனைத்தையும் தொன்று தொட்டு வளப்படுத்தி வருதல்போல, இவ் இதிகாசமும் எத்தனையோ பன்னெடுங்காலமாகத் தன்னை ஓதி வரும் பல கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களைப் பண்படுத்திப் புனிதமாக்கி வருகின்றது. இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, கடல் கடந்த பல அயல்நாடுகளிலும் அது பெரிதும் போற்றிப் பாராட்டப்பெற்று விளங்கி வருகிறது. உலக இலக்கியங்களில் இத்துணைச் சிறப்பும், மக்களிடையே செல்வாக்கும் பெற்ற இலக்கியம், வேறு எதுவும் இல்லை என்று, அறிஞர்கள் அனைவரும் இதனை ஒருமுகமாகப் புகழ்ந்து மகிழ்ந்து இன்புறுகின்றனர்.

இராமாயணம் என்னும் இவ்வொரு நூலே, எத்தனையோ பல நூல்களை, எத்தனையோ பல கவிஞர்களும் அறிஞர்களும் இயற்றுவதற்கு, அடிப்படையாக அமைந்துள்ளது. காளிதாசரின் ரகுவம்சம்; பவபூதியின் மகா வீரசரிதம், உத்தரராம சரிதம்; வசிஷ்ட தேவரின் யோக வாசிஷ்ட இராமாயணம்; வேத வியாசரின் அத்யாத்ம இராமாயணம்; முதலியன மிகவும் புகழ்பெற்ற இராமாயண நூல்களாகும். தமிழில் கம்பரும், இந்தியில் துளசிதாசரும், வங்காளத்

தில் கீர்த்திவாசரும், மலையாளத்தில் எழுத்தச்சரும், புகழ்மிக்க இராமாயண நூல்கள் இயற்றியுள்ளனர். பௌத்த மதத்தின் தசரத சாதகமும், சைனர்களின் பஸ்மசரிதமும் பிறவும் இராமாயணக் கதையைக் கூறுவனவேயாகும். 2000 ஆண்டுகட்கு முற்பட்ட நமது சங்ககால இலக்கியங்களிலும், சைவத்திருமுறைகளிலும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலிய நூல்களிலும், இராமாயணத்தைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாக உள்ளன.

இங்ஙனம் வெவ்வேறு மொழிகளின் இலக்கியங்களில் மட்டுமேயன்றி, மற்றும் பிற துறைகளிலும் இராமாயணம் பரவியுள்ளது. ஜான்சியிலுள்ள தசாவதாரக் கோயிலிலும் (கி. பி. 6 நூற்.), பட்டடக்கல் என்னுமிடத்திலுள்ள விரூபாட்சர் கோயிலிலும் (கி. பி. 7 நூற்), எல்லோராவிலுள்ள கயிலாயக் குகையிலும் உள்ள சிற்பங்களில், இராமாயணம் சிறப்பிடம் பெற்றுள்ளது. கங்ரா இராஜஸ்தான் கொச்சி முதலிய பகுதிகளிலும், அழகிய வண்ண ஓவியங்களாக, இராமாயணக் கதைகள் தீட்டப்பெற்றிருக்கின்றன.

இந்தியாவில் மட்டுமேயன்றி, இலங்கை, பர்மா, மலேயா, சயாம், தாய்லந்து, இந்தோனேஷியா, (ஜாவா, பாலி), கம்போடியா அன்னம் திபேத் சைன முதலிய பிற நாடுகளிலும், இராமாயண வரலாறுகள், இலக்கியங்களிலும் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் நாடகங்களிலும் பலவகை விழாக்களிலும் பரவி விரவிப் படர்ந்து வளர்ந்துள்ளன. சயாம் தாய்லந்து ஆகிய நாடுகளின் அரசர்கள் சிலரின் பெயர் ஈறுகள், இராமர் என்று உள்ளது. ஜாவாத் தீவின் தலைநகரப் பெயராகிய ஜகார்த்தா என்பது, அயோத்தியா என்பதன் திரிபேயாகும்.

ஜாவாத் தீவிலுள்ள பெரம்பானன் தொகுதிக் கோயில்களில், இராமாயண வரலாறு முழுவதும், கண்கவரும் வனப்புமிக்க சிறந்த புடைப்புச் சிற்பங்களாக, ஏராளமாக மிகப் பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. அவைகள் ''கல்லும் சொல்லாதோ கவி'' என்பதற்கு ஏற்பக் கல்லில் அமைந்த அழகிய பெருங் காவியங்களாக விளங்குகின்றன. விஜய நகரத்துப் பேரரசர்கள் அமைத்த ஹசரா இராமசாமி கோயிற் சிற்பங்களும், இவற்றிற்கு ஒரு சிறிதும் ஈடாக மாட்டா என்று அறிஞர்கள் கூறுகின்றனர்*. இராமபிரான் ஜாவாத் தீவின் தேசியத் தலைவராக மதிக்கப்படுகின்றார். சயாமிலுள்ள லோப்பரி என்னும் தலைநகரின் பெயர் லவபுரி என்பதன் சிதைவேயாகும். ஜாவாவின் நடுவில் ஓடும் ஓர் ஆற்றுக்குச் செரயா எனப்பெயர் வழங்குகின்றது, அது கோசல நாட்டில் ஓடிய சரயு என்னும் நதியினது பெயரைத் தழுவியதே யாகும். பாங்காக் என்னுமிடத்திலுள்ள ஒரு கோயிலில் இராமாயண வரலாறு முழுவதும் வெள்ளித் தகடுகளில் செதுக்கப்பெற்றுப் பதிக்கப்பெற்றுள்ளது. கம்போடிய அரசர்கள் தம்மைச் சூரிய வம்சத்தில், இட்சுவாகு குலத்தில் உதித்த, இராமபிரானின் வழி வந்தவர்களாகக் கூறிக்கொள்ளுகின்றனர்.

அங்கோர்தாம் என்னும் தலைநகரில் ஆண்டு வந்த யசோவர்மன் என்னும் அரசன் (கி.பி.890-910), இராமபிரானைப் போன்றவன் என்று புகழப்படுகின்றான். பபுவா எனத் தற்போது வழங்கும் ஏமசிருங்ககிரி எனும் நகரில் உள்ள கோயிலில், இராமாயணச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. கம்போடியாவில் அங்கோர்வாட் என்னும் இடத்திலுள்ள விஷ்ணு கோயிலிலும், இராமாயணச் சிற்பங்கள் பற்பல காணப்படுகின்றன.

---

* ''The Rama reliefs which are found on the Hazara Ramaswami temple of Vijayanagar have been described as 'beautifully executed and Carved with great life and spirit'. But how childish and insipid are those sculptures compared with the rendering of the same subject by the Javanese artists. Whereas the Borobudur sculptures are supreme in rendering the Buddhist ideal of mental repose, those of Perambanan picture the heroic deeds of the divine Rama with great vigour and perfect lucidity''.

—Dr. J. P. H. Vogel,
The Art of India and Java

சம்பா என வழங்கும் தெற்கு அன்னம் நாட்டிலும், இராமாயணக் கதை பெருக வழங்கி வருகின்றது. அந்நாட்டு மக்கள், தங்களை இராமபிரானின் வானர சேனைகளினது சந்ததியில் வந்தவர்கள் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளுகின்றனர். இங்ஙனமே திபெத்து மக்களும் தங்களைக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர். சீனவில், லங்காவதார சூத்திரம், தசரத ஜாதகம் என்னும் புத்த நூல்களால் இராமாயணம் பெரிதும் பரவியது.

இங்ஙனம் கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டுமின்றி, மேலே ஐரோப்பிய நாடுகளிலும்கூட, இராமாயணம் பெரிதும் பரவி வருகின்றது. மாக்ஸ்முல்லர் கீத் மாக்டனல் விண்டர்னிட்ஸ் ஆப்கின்ஸ் ஜேக்கோபி முதலிய அறிஞர்கள் பற்பலர், இராமாயணத்தினை ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்த்து இயற்றியுள்ளனர். அண்மையில் ரஷிய நாட்டிலும் இராமாயணம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எகிப்து நாட்டிலும், மெக்சிகோ பெரு முதலிய அமெரிக்க நாட்டின் பகுதிகளிலும், இராமாயணம் மிகப் பழங் காலத்திலேயே பரவியிருந்ததற்குச் சரித்திரச் சான்றுகள் காணப்படுகின்றன என்று, ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவைகளை எல்லாம் கருதின், இராமாயணம் என்னும் இதிகாசத்தின் இணையற்ற பெருமை யாவர்க்கும் புலனாகும்.

அனைத்துலக இராமாயணத் திருவிழா, 1971 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியிலும் செப்டம்பர் மாதத் தொடக்கத்திலும், யுனெஸ்கோவின் முழு ஆதரவுடன், இந்தோனேஷியா அரசினரால், இந்தோனேஷியாவில் கொண்டாடப் பெறவுள்ளது. கிழக்கு ஜாவாவில் உள்ள பண்டான் என்னும் நகரத்தில், சுமார் 20,000 பேர் இருப்பதற்கு வசதியுடைய திறந்த வெளியரங்கம் ஒன்றில், இவ்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கின்றது. இவ்விழாவைப் பாலித் தீவிலுள்ள டென்பசார் பெரம்பானன் ஜாகர்த்தா ஆகிய நகரங்களிலும் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பெற்றுவருகின்றன. ''இராமாயண பாரம் பரியம்'' உடைய் இந்தியா, இலங்கை நேபாளம் பர்மா தாய்லந்து கம்போடியா, லாவோஸ் மலேசியா முதலிய நாடுகளும், இவ்விழாவிற் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கப் பெற்றுள்ளன. இவ்விழாவின் சார்பாகத் தென்கிழக்கு ஆசியாவின் பாரம்பரியக் கலை நாகரிகப் பண்பாடுகளைப் பரப்புவதற்குரிய வழிவகைகளை ஆராய்வதன் பொருட்டுக் கருத்தரங்கம் ஒன்றும் நடத்தத் திட்டமிடப்பெற்றுள்ளது.

—ஆசிரியர்



தேவகோட்டை ஸ்ரீ திண்ணப்ப செட்டியார் ஊாணி ஸ்ரீ கைலாச விநாயகர் ஆலயத் துய்மைப் பரிசளிப்பு விழா 23—1—71


# ஸ்ரீ வைஷ்ணவம்

திரு. கே பட்சிராஜன், B. A., B. L. திருநெல்வேலி.

உலகிலே மூதறிஞர்கள் தங்களைப்பற்றியும் தம்மைச் சூழ்ந்துள்ளவற்றையும் ஆராய்ந்து தம்மையும் பிற உயிர்களையும், பொருள்களையும் யாவையும்தாங்கும் உலகங்களையும் தோற்று வித்து ஆட்டும் பரம்பொருள் ஒன்று உண்டு என்ற உண்மையை உணர்த்திச் சென்றுள்ள னர். அப்பரம்பொருளுக்கும் தமக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதையும் அப்பரம் பொருளைக் கிட்டும் வழிகளையும் பலவிதமாக அறிஞர்கள் கூறிச்சென்றனர். அப்படிக் காட்டப்பெற்ற வழிகளில் விஷ்ணுவே பரம் பொருள் என்றும், இராமாநுசரும் அவருக்கு முன்புள்ள பெரியார்களும் காட்டிய வழியே அப்பரம்பொருளைக் கிட்டுவதற்குரிய சிறந்த வழி என்றும் கொண்டு, தம் ஆன்ம வாழ்வை அமைத்துக் கொண்டது தான் வைணவ சமயம்.

நாராயணன் விஷ்ணு என்பன ஒருவரையே குறிப்பன என்பது வைதிகர்கள் அறிந்ததே. அந்த நாராயண பதம் முக்குண அடிப்படையில் பலபெயர் படைத்து எங்கும் இறை நிலைகளில் விஷ்ணுவைத்தான் குறிக்கும் என்பது மீமாம் சகர் அறுதியிட்டது. ஆன்மாக்களுக்கெல்லாம் முடிவில் இருப்பிடமானவன் என்றும், ஆன் மாக்களைத் தன் வாழிடமாகக் கொண்டவன் என்றும், இருபொருள்படுவது நாராயண பதம். அது பிற தெய்வங்களைக் குறியாது, விஷ்ணு வையே குறிக்கும். நாராயணனிடத்தேஒடுங்கிய உலகும், உயிர்களும் மீண்டும் அவன் நாபியி னின்று வெளிவந்தன வாதலில் அவனே பரம் பொருள். அவனை முதலாகவுடைய மதம், அவன் மறு பெயரான விஷ்ணுவையிட்டு ''வைஷ்ணவம்'' என்று வழங்கப்பெற்றது.

விஷ்ணுவே பல்வேறு உருவில்பல தெய்வங் களைப் படைத்துப் பல்வகைப் பலனளிக்குமாறு பணித்து, தான் அவற்றுள் அந்தர்யாமியா



தேவக்கோட்டை ஸ்ரீ திண்ணப்ப செட்டியார் ஊரணி ஸ்ரீ கைலாச விநாயகர் ஆலயத்தூய்மைப் பரி சளிப்பு விழாவில், மதுரைத் துணை யாணையர் திரு. எம். சூரியராஜ், B.A., B.L. அவர்களும், இராமநாத புரம் உதவியாணையர் திரு. எ. ஸ்ரீநிவாசன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல் (23—1—71).

யுள்ளான் என்பதும், அத்தெய்வங்கள் எல்லாம் அவனதுபலமூர்த்தங்களே என்பதும் வைணவர் துணிவு.

''இறுக்கும் இறை இறுத்துண்ணும்
எவ்வுலகுக்கும் தன்மூர்த்தி
நிறுத்தினன் தெய்வங்களாக
அத்தெய்வ நாயகன் தானே''

என்ற நம்மாழ்வார் பாசுரம் இதனை வலியுறுத்தும். அதன் காரணமாகவே அவர் ''வண்புகழ் நாரணன் திண்கழல் சேர'' என்று தாமும் கொண்டு பிறர்க்கும் உபதேசித்தவராயினும், அவர் பாசுரங்களிலே "என்திரு மார்பன்தன்னை, என்மலைமகள் கூறன்தன்னை'' என்றும் "என் நாமகளை அகம்பால்கொண்ட நான்முகனை நின்ற சசிபதியை (இந்திரனை)" என்றும், "ஒளி மணிவண்ணன் என்கோ ஒருவன் என்று ஏத்த நின்ற நளிர் மதிச்சடையன் என்கோ நான்முகக் கடவுள் என்கோ'' என்றும், ''முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்றும் அவர் அழைப்பதைக் காண்கின்றோம். அப்படிப் பல பெயர் பூண்டு எப்பெயரைக் கொண்டு அழைப்பது என்று நம்மை மயங்க வைக்கும் பரம்பொருள் "கோமலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ" என்பதால் திருமகள்கேள்வனே என அவர் அறுதியிடுகிறார்.

''உன்னை நான் கண்டுகொண்டேன் உன் மாயத்தால் என்னை விலக்கிவிடாதே'' ', மாயம் செய்யேல் என்னை உன் திருமார்வத்து மாலை நங்கை வாசம் செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை கண்டாய்'' என்று ஆணையிடுகிறார்.

பரம்பொருளைப் பார்த்தோம். அதனால் படைக்கப்பட்டு இயங்கும் உலகும், உயிர்களும் நாமும் எத்தன்மையோம்என்பது இயல்பாகவே விளைத்தானே. இதில் தான் சித்தாந்தம் தோன்றுகிறது. நம்நாட்டில் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்று மூன்று பிரிவுகள் உள்ளன. மூன்றையும் மூன்று மதம் என்பர்.

இவற்றுள் த்வைதம் இறைவன் வேறு படைப்புக்கள் வேறு என்று கொள்வது, அத்வைதம் ஒரு பரம்பொருளே மாயையுட்பட்டு ஒன்றான தன்னைப் பலவாகப் பிரமித்துக் கொண்டது. பல்வேறு பொருளும் உயிரும் மாயையே. பரம்பொருள் (பிரும்மம்) ஒன்றே உண்மை. ஆன்மா பலவல்ல ஒன்றே. மாயையினின்றும் ஞானம் மூலம்தெளிவுபெறும்போது அது தன்னையே பிரம்மம் என்று உணரும் என்பது விசிஷ்டாத்வைதம். த்வைதம், அத்வைதம் இரண்டையும் இணைப்பது போன்று ஆன்மாக்கள் பல. அவை மாயையல்ல. சத்யம், அநாதி. இதுபோலவே பிரகிருதியையும் ஆன்மாவையும்தனக்குச்சரீரமாகக் கொண்டுள்ளது பிரம்மம். பிரம்மத்தோடு வேறுபட்டது போன்று ஞானத்தோடுவாழும் ஆன்மா உண்மையில் பிரம்மத்தின் சரீரமே. பரப்பிரும்மமும், ஜீவாத்மா பிரகிருதி இவற்றைச் சரீரமாகக் கொண்ட பிரம்மமும் வேறல்ல ஒன்றே (அத்வைதமே).

ஆனால் அத்வைதிகள் கூறும் அத்வைதம் வேறு. இது வேறு. அவர்கள் ஜீவப்ரும்ம ஐக்யம் கூறினர். விசிஷ்டாத்வைதிகள் சித்தையும் அசித்தையும் சரீரமாகக் கொண்டுள்ள பிரம்மத்துக்கும் பரப்ரம்மத்துக்கும் ஐக்யம் கூறினர். அவர்கள் கொள்கைப்படி ப்ரம்மம் வேறு, ஜீவன் பிரக்ருதி வேறு. ஆனால் ப்ரம்மம், சித் (ஆன்மா) அசித் (பிரக்ருதி) இரண்டையும் தனக்கு சரீரமாகக் கொண்டிருக்கிறது. இப்படி இச்சரீர விசிஷ்டமாக (விசேஷணம்) உள்ள பரப்ரம்மமும் ஒன்றே, என்பதால் இது விசிஷ்டாத் வைதமாயிற்று. இவ்விசிஷ்டாத் வைத தத்துவத்தின் அடிப்படையில்தான் வைணவம் நிலை நிறுத்தப்பெற்றுள்ளது. இதனைத்தான் தமிழ்ப்பதமானகடவுள்என்ற பெயர் விளக்கும். ஆன்மாவைக் கடந்து நிற்கும் பரப்ரம்மமும், ஆன்மாவுக்குள் அதனைச் சரீரமாகக்கொண்டு (விசிஷ்டமாகக்கொண்டு) வியாபித்த பிரம்மமும் ஒன்றே என்பதைக்காட்டக் கடவுள் என்ற ஒரே பதத்தால் பரம்பொருளைத் தமிழர் குறித்துள்ளது வியந்து போற்றற்குரியதன்றோ, 'உள்' என்ற பதத்தால் உலகுயிர்கள் அவனுக்கு உறையுள் சரீரம் என்பதும் குறிக்கப்பெற்றது.

விசிஷ்டாத்வைதம் வேதங்களினால் எவ்வாறு காட்டப்படுகிறது என்பதை ஒரு சிறிது காண்போம். வேத வாக்கியங்கள் அனைத்துமே பிரமாணமாக ஏற்றுக் கொள்ளத்தக்கவை. அவற்றுள் எதையும் விலக்கி ஒரு மதத்தை நாட்ட முயல்வது அவைதிகம். வேதங்களில் பல்வேறு பொருள்படும் வாக்கியங்கள் உள்ளன. அவை அனைத்தையும் ஒருமைப்படுத்திப் பொருள் காண்பதுதான் ஏற்புடைத்து என்பதை அறிஞர் அனைவரும் ஒப்புவர். வேதங்களில் பேதச்ருதி (வேறுபடுத்திக் காட்டும் வாக்கியங்கள்), அபேத ச்ருதி (வேறின்றி ஒன்றாகக் காட்டும் வாக்கியங்கள்), கடகச்ருதி (இரண்டையும் பொருத்திக் கூறும் வாக்கியங்கள்) ஆகியவை மலிந்து காண்கின்றன. பேதச்ருதிகளையே பிரமாணமாகக்கொண்டு ஒரு சாரார் பொருள் கண்டனர். அபேதச்ருதிகளையே பிரமாணமாகக்கொண்டு பொருள் கண்டனர் மற்றொரு சாரார். எல்லாச்ருதிகளையும் இணைத்துப் பொருள் கண்டது விசிஷ்டாத்வைத ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தம். இதனைத் தெளிவாக நிலை நாட்டியவர் இராமாநுசர்.

'பதிம் விச்வஸ்ய' என்பது ஒரு வேத வசனம். பரம்பொருள் உலகங்களை உடையது என்பது பொருள். 'உலகு' சேதனங்கள் அசேதனங்கள் இரண்டையும் குறிக்கும். நாமும் பிற உயிர்களும் பொருள்களும் இறைவனுக்கு உடைமைப் பொருள் என்பது இதனினின்று போதரும். உடைமை உடையவன் என்று வேறுபடுத்திக் காட்டும் இவ்வாக்கியம்.

'தத் த்வம் அஸி' என்பது வேறு ஒரு வாக்கியம். அது (பிரம்மம்) நீ ஆகிறாய் என்ற பொருள் உள்ளது. பிரம்மத்துக்கும் ஜீவாத்மாவுக்கும் பேதமில்லை. இரண்டும் ஒன்றே என்ற பொருள்படும் இவ்வாக்கியம். இவ்விரண்டு வாக்கியங்களும் ஒன்றோடொன்று முரணானது என்று முதல் பார்வையிலே தோன்றும், இவ்விரண்டுமே வேதவசனங்கள் ஆகையால் ஒன்றையும் விலக்க ஒண்ணாது.

'தத் த்வம் அஸி' என்பதில் உள்ள 'தத்' என்னும் பதம் பரமாத்மாவைக் குறிக்கும். த்வம் என்னும் பதம் எவனை நோக்கி அவ்வாக்கியம் சொல்லப்பட்டதோ அந்த சுவேத கேது என்ற ஜீவாத்மாவைச் சரீரமாகக்கொண்ட பரமாத்வாவைக் குறிக்கும். இதனை இப்படிக் கொள்ளாமல் 'த்வம்' என்பது ஜீவாத்மாவையே குறிக்கும் என்று கொண்டும் ஜீவனுக்கும் பரப்ரும்மத்துக்கும் வேற்றுமையில்லை. இரண்டும் ஒன்றே என்றும் பொருள்கொண்டு இடர்ப்பட்டனர் சிலர்.

இனி 'த்வம்' என்பது முன்னிலையான ஜீவாத்மாவைத்தான் குறிக்குமே யன்றிப் பரமாத்மாவை எவ்வாறு குறிக்கும் என்ற கேள்வி எழல் இயல்பே. அபர்யாயவசன விருத்தி என்று ஒருவகைப் பொருள்கோள் உண்டு. அதாவது ஒரு சாதியை உணர்த்தும் சொல், அச்சாதியை மட்டும் உணர்த்துவதோடு நில்லாமல் ஜாதிக்கு இருப்பிடமான வடிவத்தையும் உணர்த்தும். குடம் என்ற சொல் குடத்தன்மையையயன்றி அக்குடத்தன்மை வடிவான குடத்தையும் குறிக்கும். அதுபோல் 'த்வம்' என்ற சொல் சுவேதகேது என்ற ஜீவாத்மாவோடு நில்லாமல் அதனைச் சரீரமாகக்கொண்ட பரமாத்மாவரை செல்லும். ஜீவாத்மா பரனுக்குச் சரீரமா என்றால் 'ஆம்' என்று ''யஸ்ய ஆத்மா சரீரம் யஸ்யப்ருதிவீ சரீரம்'' (எவனுக்கு ஆத்மா சரீரமோ எவனுக்கு உலகம் சரீரமோ) என்ற இதுபோன்ற வேதத்தில் வரும் வாக்கியங்கள் விடையிறுக்கும், இவையே கடகச்ருதிகள் எனப்படும். இந்த கடகச்ருதிகளை விலக்கினால் மேற்கூறிய இரு வாக்கியங்களுக்கும் இணைந்த பொருள் காண முடியாது. ஒவ்வொரு சாராரும் தம்மின் மாறுபட்ட மற்றச்ருதி வாக்கியங்களைப் பிரமாணமில்லை என்று கூறவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாக நேரிடும்.

விசிஷ்டாத்வைத ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தில் தத்வம் மூன்று. சித், அசித், ஈச்வரன். மூன்றும் வேறுபட்டவை. மூன்றும் அநாதி ஸத்யம், இவற்றுள் 'சித்' என்பது ஆத்மா, அது தான் தேக, இந்திரிய, மன, ப்ராண, புத்தி விலக்ஷணமாய (இவற்றின் வேறாய்), அசடமாய், ஆனந்தரூபமாய், நித்தியமாய், அணுவாய், அவ்யக்தமாய், அசிந்த்யமாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், ஞானச்ரயமாய், ஈச்வரனுக்கு நியாம்யமாய், (அடங்கியதாய்) தார்யமாய்,

சேஷமாய், இருக்கும். 'அசித்' ஞான சூன்ய மாய், விகாராஸ்பதமாய் இருக்கும். 'ஈச்வரன்' எல்லா இழி குணங்களுக்கும் எதிர்த்தட்டான ஞானனந்த சொருபனுய், முடிவில்லாதவனுய், கல்யாண குணகண பூஷிதனுய், உலகம் யாவையும் ஆக்கியளித்து நீக்கும் கர்த்தாவாய், அறம் பொருளின்பம் வீடு என்னும் பேறுகளை அளிப்பவனுய், திவ்யமங்கள விக்கிரகத்தை உடையவனுய், திருமகள் மண்மகள் ஆயர்மடமகள் இவர்க்கு நாயகனுய் இருக்கும். இவற்றைத் தத்வத்ரயம் என்பர் ஸ்ரீ வைஷ்ணவர்.

எப்போது ஆன்மா இறைவனின் சரீரம் உடைமை ஆயிற்ருே அது இறைவனுக்கு அடிமையாகின்றது. அதுவே அதன் தன்மையாகின்றது. அதனை உணர்த்துவதுதான் ''ஓம் நமோ நாராயணுய'' என்ற திருவெட்டெழுத்து. இதனை அஷ்டாக்ஷரம் என்பது சம்பிரதாயம்.

எப்போது அவனுடைமை என்ற முறையில் அவனுக்கடிமையாகின்றதோ அது பிறனுடைமையாகவோ பிறனுக்கு அடிமையாகவோ இருக்கவொண்ணுது. அப்படி அது எண்ணுமாயின் அது அதன் இயல்பான தன்மைக்கு (சொருபத்துக்கு) முரண்பட்டதாகும். அதனுலேயே வைஷ்ணவனுக்குத் தாரக மந்திரமாகிய எட்டெழுத்தின் பொருள் கூறும்போது 'நாராயணனுக்கே' என்று ஒரு தேற்ற ஏகாரத்தைக் கூட்டிப் பொருள் கொள்வர். இதனைத் திருமந்த்ரம் என்பர்.

அஷ்டாக்ஷரத்தையும்விட வைணவர் நித்தமும் அனுசந்திக்கும் மந்திரம் 'த்வயம்' எனக் கூறப்படும். ''ஓம் நமோ நாராயணுய ஸ்ரீமத் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே'' என்பது. இதில் திருமகளோடு கூடிய நாராயணன் பாதங்களே எனக்குச் சரணம் என்று திருமகளையும் கூட்டிக் கூறுவது. இது பிராட்டியின் புருஷகாரம் (சிபார்சு), ஒரு சேதனனுக்கு மிக அவசியம். அது இறையருள் கிட்டுவதை எளிதாக்கவல்லது என்ற அடிப்படையில் வந்தது. இதனை மந்திரரத்னம் என்பர்.

அடுத்து வைணவனுக்குப் பற்றுக்கோடு 'ஸர்வதர்மாந் பரித்யஜ்யமாம், ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா சர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:'' என்ற கீதை வாக்யம். அருச்சுன! எல்லா தருமங்களையும் உனக்கு உபாயமாகப் பற்றுவதை விட்டு என்னை ஒருவனையே சரணமாகப்பற்று. நான் உன்னுடைய எல்லாப் பாவங்களினின்றும் உன்னை விடுவித்து உனக்கு வீடுபேறருளுவேன். கவலைப்படாதே. இதனை 'சரமச்லோகம்' என்பர் பெரியோர்,

இறைவன் தான் படைத்த உயிர்கள் தான் கொடுத்த வேதங்களை உள்ளபடிஅறிந்து தன்னை அடைய முயல்கின்றனவா என்று பார்த்து விளையாடுகிருன். அப்படி விளையாட்டுக் காணுமிடமாகையாலே இவ்வுலகு அவனது லீலா விபூதி என்பர். அவர்களுக்கு உண்மைஉணர்த்த இறைவன் பலஅவதாரங்கள் செய்கிருன்என்பர். இப்படி அவன் அவதாரம் செய்வதால் அவன் நம்மைப்போல் பிறப்பவன் என்று மயங்கினுர் பலர். ஆனுல் இவ்விதம் பிறப்பதனுலேயே அவன் ஏற்றம் அடைகின்ருன் என்பதை ''ஸ உச்ரேயான் பவதி ஜாயமான:'' என்ற சுருதி கூறிற்று. ''நிலைவரம் பில பல பிறப்பாம் ஒளிவரு முழு நலம்'' ''உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப்பிறந்தாய் இமையோர் தலைவா'' என்ருர் நம்மாழ்வாரும். மேலே சொன்ன சுருதிக்கு மாறிப் பொருள் கண்டவரும் உண்டு. செத்துச் செத்துப் பிறக்கும் தெய்வம் நாராயணன், என்று வேதத்தின் உண்மைப்பொருள் அறிய மாட்டாது கூறினுரும் உண்டு. இறைவன் பிறப்புக்கள் அவன் இச்சையாலே எடுக்கப்படுவன. ஆதியஞ்சோதி உருவை அங்குவைத்து இங்குப் பிறக்கும் ஆற்றல் அவனுக்கு உண்டு. பூர்ணமான அவன் பூர்ணத்தினினிறும் வெளியாய் வந்து பிறந்து பூர்ணமாகவே இலங்கவல்லவன். இவ்வல்லமை அறியகில்லாது பலர் அவன் பிறப்பை நம் கருமவினையடிப் பிறப்புப்போல எண்ணித் தாமும் இடர்ப்பட்டுப் பிறரையும் இடருக்குட்படுத்தினர். நம்மைப்போல் இறைவனும் ஒரு ஆன்மாவே. தவத்தால் அந்தஇறை நிலையை நாமும் நம் முயற்சியலே பெறலாம் என்று இரணியன், ராவணன் போன்று நினைப்பாரும் உபதேசிப்பாரும் இல்லாமலில்லை. அவர் அவ்விதம் எண்ணுவது இறைவனுடைய மாயையைஉணராத காரணத்தாலன்றி வேறல்ல.

''ஆயப்பெறு நன்னெறி தம் அறிவு என்று
ஏயப்பெறும் ஈசர்கள் எண்ணில ரால்!
நீ அப்புறம் நிற்க நினைக்கிலர்! நின்
மாயப் பொறி புக்கு மயங்கு வரால்.''

என்று அவ்விதம் எண்ணி மயங்கும் தெய்வங்களையும் வைதிகர்களையும் நோக்கிக் கம்பர் இரங்குகிறார்.

முன் ''வேதவேத்யே ப்ரேபும்ஸி'' என்ற ஸ்காந்தபுராண வசனத்தைப் பார்த்தோம். வேதமுதல்வன் தாமாகஉயிர்கள் வேதவாழ்வின் படி ஒழுகித் தன்னை யுணரும் என்ற நம்பிக்கை பலியாது போகவே தான் அவர்களைத் திருத்த அவதாரம் (கீழ் இறங்குகை) செய்தான். வேதமும் தன்னை உள்ளபடி அறிவதில் உயிர்கள் கண்ட இடர்ப்பாடுகண்டு உண்மையை விளக்க ராமாயணமாக அவதரித்தது என்று அப் புராணம் கூறிற்று. அதனாலும் பலன் கிட்டாமை யாலே தன் பரத்வத்தை வெளிப்படையாகக் காட்டும் கிருஷ்ணாவதாரமாக இறைவன் தோன்றினான்.

வேதங்களுக்கு 'அறிஞர்' கண்ட அபார்த்தங்களை (தவறான பொருள்களை) விலக்கி வேதங்களின் உண்மைப்பொருள் இது என்று காட்டக் கீதையை அருளினான். அதனினும் பலன்காணாது தன்னை அர்ச்சா மூர்த்தியாகப் பல விடங்களில் தோற்றுவித்துக் கொண்டான். வேதப்பொருள்களை இன்னும் தெளிவாக ஆழ்வார்களின் பிரபந்தங்கள் மூலம் வெளியிட்டான். தம் அறிவாலேயன்றி அவன் கொடுத்த ''மயர்வறு மதி நலத்தாலே'' பாடப்பெற்றமையின் அவ்வாழ்வார்களின் பிரபந்தங்கள் ''அருளிச் செயல்கள்'' எனப்பட்டன என்பர் வைணவர். இறைவன் பரத்வம், வியூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்ற ஐந்து நிலைகளை உடையவன். இவ்வைந்து நிலைகளைப் பரக்கப்பேசுவனவே வேதங்களும், பாஞ்சராத்ரமும் இதிகாச புராணங்களும், ஸ்மிருதிகளும், அருளிச் செயல்களும் என்பர் ஆன்றோர்.

இவ்வருளிச் செயல்கள் வேதங்களின் தெளிந்த பொருள் கூறுவன என்பது வைணவர் துணிவு. அத்தெளிவு மிகுதியும் நம்மாழ்வாரிடத்தேதான் காணலாம். அதனால் அவரே ப்ரபன்னர்களுக்குத் தலைவர். ''ப்ரபன்னஜன கூடஸ்தர்'' என்று போற்றுகின்றார்கள். நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களும் நான்கு வேதங்களின் ஸாரங்கள் என்று அவர்கள் கண்டார்கள். அவ்வுண்மையை ஆதாரங்களோடு விளக்கியும் உள்ளார்கள். வேதங்களிலே தெளிவில்லாத இடங்களுக்கு இவ் வருளிச் செயல்களினின்றே விளக்கம் கண்டேன் என்று வேதாந்திகளில் தலைவராய் அதனாலேயே வேதாந்த தேசிகர் என்று புகழ் பெற்ற மஹான் கூறினார். இவ்வாழ்வார்களின்,

'தெள்ளிய நன் மாலைகள் நாம்தெளியஓதித்
தெளியாதமறைநிலங்கள்தெளிகின்றோமே'

என்பது அத்தலையாய அறிஞரின் அனுபவ உண்மை வாக்கு.

'சாதிக்குமோ பரதத்துவத்தை? சமயத் திருக்கைச்
சேதிக்குமோ? ஒன்று சிந்திக்குமோ? அதனைத் தெளியப்
போதிக்குமோ? எங்கும் ஒன்றாய் நின்ற மெய்யைப் பொய்யைச்
சோதிக்குமோ உங்கள் வேதம்? எங்கோன் தமிழ்ச் சொல்லெனவே'

என்றார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். இதுஅருளிச் செயல்களை, அதிலும் நம்மாழ்வார் பாசுரங்களை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழை வைணவர் எம்முறையில் உயர்த்திப் போற்றிப் பேணினர், என்பதைக் காட்டும். இதனாலேயே ஒரு வைஷ்ணவனுக்குப் பல்வகையான இடர்ப்பாடுகளை உடைய வேதங்களைக் கற்காவிடினும் அருளிச் செயல்களில் அறிவில்லாமை கொடிது என்பது அவர் கோட்பாடு, வேதங்கள் ஒரு சாரார் மட்டும் ஓதற்குரியதாய் உண்மைப் பொருளைத் தெள்ளத்தெளிய விளக்காது பலர் பலவிதமாக மயங்கும்படி யிருத்தல் போலன்றி இவ்வருளிச் செயல்கள் அனைவர்க்கும் ஓதற்குரியதாய், உளங்கனிந்த இச்சையின்றி வேறு நியமம் ஒன்றும் வேண்டப்படாததாய் பரதத்துவத்தை தெள்ளத்தெளிய விளக்குவதாய் அமைந்தது. ''ம்ருத்கடம் போலன்றே பொற்குடம்'' என்

றனர் பெரியோர். மண்குடம் பிறர் தீண்டினல் பயனற்றதாய்ப்போகும், பொற்குடம் எவர் கைப்படினும் அதற்குஒரு தோடமில்லையன்றே? வேதங்களை மட்குடமாக்கினர் அருளிச் செயல் களைப் பொற்குடமாக்கினர் ஆன்றோர்.

நாராயணனே பரதெய்வம் என்றால் அவன் மூர்த்தங்களே பல்வேறு தெய்வங்களும் என்றால் ஏன் எல்லாத் தெய்வங்களையும் வணங்கல் கூடாது என்பது இயல்பாக எழும் வினவே. முக்குணங்கலந்து வாழும் உயிர்கள் மற்றைய இரு குணங்களை மெல்ல மெல்ல விட்டு சுத்த சத்வத்திலே நிலைநிற்க முயலவேண்டியதே அவ்வான்மாக்களின் குறிக்கோள். "த்ரை குண்ய விஷயாவேதா'' ''நிஸ்த்ரைகுண்யோ பவ அர்ச்சன. நிர்மோஹோ நிர் அகங்காரா; நித்யஸ்த்வஸ்த'' என்று கீதை பேசிற்று. அந்தக் குறிக்கோளைப் பயிலும் முறையிலே ராஜஸ தாமஸ அடிப்படையில் எழுந்த பரமன் தோற் றங்களை விடுத்து முதலிலே இருந்த சத்துவத் தோடு இயங்கும் தெய்வமான விஷ்ணுவைப் பற்றி வைஷ்ணவம் வாழ்கின்றது. இப்படி முக்குணச் சேர்ப்பைவிடுத்து சத்வம் ஒன்றையே பற்றுக் கோடாகப்பற்றும் பேறு எத்தனையோ பிறப்புக்களில் பெற்ற ஞானத்தின்பலன் என்று ''பஹூனும் ஜன்மனும் அக்தே ஞானவான் மாம்ப்ரபத்யதே'' என்ற வாக்கின்மூலம் கீதை கூறிற்று. அப்படி பலகோடி ஜன்ம புண்ய வசத்தால் வந்த இப்பேறு எங்கே நாம் பிற தெய்வங்களைப் போற்றுவதன் மூலம் போய் விடுமோ என்ற அச்சத்தாலேயே (அச்சம் வெறும் மயக்கம் என்று கொண்டாலும்) பிற தெய்வங்களை வேண்டிப் பெறும் பொருளில்லை என்று கொண்டனர் வைணவர். தவிர எத் தெய்வம் எப்பலன் கொடுத்தாலும் அது அத் தெய்வங்களுக்குள்ளும் அந்தர்யாமியாயுள்ள நாராயணன் அருள் என்பது அவர் கோட்பாடா தலின் அவனையே சத்துவப் பொருளாகவே உபாசித்தே எல்லாப் பலன்களையும் பெறலாம் என்பதும் அவர் நம்பிக்கை.

''எங்கு சென்றுறுகோ என்னையாள் வானே
ஏழுலகங்களும் நீயே
அங்கவர்க்கமைத்த தெய்வமும் நீயே''
அவற்றவை கருமமும் நீயே''

என்ற நம்மாழ்வார் பாசுரம் இவ்வுண்மையை விளக்கும். படைக்கப் பட்டவை எல்லா வற்றிலும் அவன் பரந்துள்ளான் என்பதை ''அந்தர்ப்பஹிஸ்ச் சதத்ஸர்வம்வ்யாப்ய நாராயண ஸ்தித்'' என்ற வாக்கால் பறை சாற்றியது வேதம். முதலில் ''ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரம்மா நஈசான'' என்றும் அதுவே நிலை நாட்டிற்று. எனவே நாராயண னைய் முதலில் தோற்றுவிக்கப்பட்ட பிரமன் மூலமாக அவனிடத்தினின்று தோன்றிய பிற தெய்வங்களும் உலகுகளும் உயிர்களும் அவனது உடைமைகளே. அவனுக்குச்சேஷப் பொருள் களே என்பது வெளிப்படை, உடையவனைப் பற்றி வாழ்வதே உடைமைப் பொருளின் தன்மையாதலின் மற்றொரு உடைமைப் பொருளைப் பற்றுவதால் தலையாய பயன் கிட்டாது என்பது வைணவர் கோட்பாடு. இதனல் பிற தெய்வங்களை உதாஸீனம் செய் வதாகக் கொள்வது தவறு. உதாஸீனம் செய் வதும் கூடாது. தம் சடங்குகளில் பிற பிற தெய்வ வணக்கம் செய்யாதவரில்லை வைணவர். வேதங்களில் கூறியபடி அந்தந்தப் பலனுக்காக அவ்வத்தெய்வங்களைப்போற்றியே அவர்களும் பலன் பெறுகின்றனர். வேத முறைப்படி செய்யும் கர்மாக்களில் வேதம் சொல்லிய முறை யிலேயே அவ்வத் தெய்வங்களைப் போற்ற வேண்டும் என்பது இறைவன் கட்டளையும் ஆகும். ஆன்ம வாழ்க்கையின் தலையாய பேறு (புருஷார்த்தம்) மோக்ஷம் (வீடு) ஆதலின், அந்த மோக்ஷம் என்பது மற்றைய இரு குணங் கள் நீங்கி சத்துவமாய்ச் சத்துவப்பரம்பொருளை அடைவதே ஆதலின் சத்துவப்பொருளையே எல்லாவற்றுக்கும் பற்றுக்கோடாகப் பற்றுவர் வைணவர்.

உலகில் தெய்வம் என்றுள்ளவை அனைத்தும் நாராயணன் மூர்த்தங்கள்; அவை அவரவர் குணங்களுக்கேற்ப அவர்கள் அறிவிற்கேற்ப வணங்கும்படி படைக்கப்பெற்றுள்ளவை. அவற் றுள்ளும் நாராயணனே வியாபித்து அப்பலன் களை அளிக்கிறான் என்பதே வைணவர் கோட் பாடு. எனவே உலகில்தெய்வம் உண்டு என்று கூறுவார் அனைவரும் ஒருமுறையில் நாராயண உபாஸகர்களே என்ற பரந்த நோக்குடையது வைணவம். இன்றில்லாவிடினும் கடவுள் நம் பிக்கையிருக்கையில் என்றேனும் அவர்களும் சத்துவப் பொருளைப்பற்றி வீடு பேறடைவர் என்பதே அவர் நம்பிக்கை, அடையவேண்டும் என்பதே அவர்கள் பிரார்த்தனை.

# இராமாயண நுண்பொருள்

ந. ரா. முருகவேள், M.A, M.O.L,

இந்து மதத்தைச் சார்ந்தவர்களாகிய நமக்கு உரிய, சிறப்பு மிக்க இதிகாசங்களுள் இராமாயணம் என்பது ஒன்று. அதன் அருமை பெருமைகள் அளப்பரியன. இராமாயண கதையை அறியாத எவரும், நமது இந்திய நாட்டில் இரார். எத்தனையோ பல நூற்றுண்டுகளாக எத்தனையோ பல கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களை, இராமாயணக்கதை கொள்ளை கொண்டு இன்புறுத்தி வருகின்றது. இத்தகைய எல்லையற்ற சிறப்புடைய இராமாயண கதையினின்று, நாம் எண்ணற்ற பலதிற உண்மைகளை, பலகோணங்களில் இருந்து அறிதல் கூடும். தத்துவ நோக்குக்கொண்டு ஆராயும் அறிஞர்கள், இராமாயணத்தின் நுண்பொருளைப் பலவகைகளில் விளக்குகின்றனர்.

ஆன்மாவானது இன்பமயமாகிய விண்ணுலகினின்று, ஆவலும் காமமும் நிறைந்த இம் மண்ணுலகிற்கு இறங்கி வருகின்றது. நான் என்னும் அகந்தையினிடமிருந்து மனச்சான்று என்னும் தூதுவன் வருகின்றுன். தீமைக்கும் ஆன்மாவிற்கும் இடையே, பெரும்போர் நிகழ்கின்றது. இறுதியில் தீமை தோல்வியுற்றுத் திருந்துகின்றது. அதன் பின்னர் ஆன்மா, தன் தந்தையின் இல்லமாகியசுவர்க்கத்திற்குத்திரும்பிச் செல்லத் தொடங்குகிறது. அப்பயணத்தின் முடிவில், அது மீண்டும் இன்ப உலகத்திற் சென்று சேருகின்றது. இத்தத்துவ உண்மையினையே இராமாயணக்கதை குறிப்பிடுகின்றது எனலாம்.

இராமன்தான், ஆன்மா. அதனுல்தான் அவருடைய தோற்றம் இயற்கைக்கு அப்பாற்பட்டதாய் நிகழ்கின்றது. சீதைதான், உயிருக்குரிய உடம்பு. அதுபற்றியே அவள் நம்மைப் போல ஒரு பெண்ணினிடமிருந்து தோன்றவில்லை. ஜனக முனிவர் வேள்வியின் பொருட்டு நிலத்தை உழுவதற்கு முற்பட்டபோது அவள் தோன்றியருளினுள்.

இராமனும் சீதையும் அயோத்தி நகரத்திலிருந்து காட்டிற்கு அனுப்பப் பெற்றனர். அயோத்தி விண்ணுலகத்தைக் குறிக்கின்றது. இராமனும் சீதையும் முறையே உயிரையும் உடலையும் குறிக்கின்றனர். இருவரும் தண்டகாரண்யத்தை அடைகின்றனர். தண்டகாரண்யம் என்பது இம் மண்ணுலகம். சீதை அங்கு இராவணனுல் கவர்ந்து செல்லப்படுகின்றுள். அது ஆன்மா காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் முதலிய தீமைகளின் வயப்பட்டுத் துன்புறுதலை உணர்த்துகின்றது.

சீதை இலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றுள். ஆன்மா உலகியல் மாயச்சேற்றில் அழுந்தி வருந்துதலை இஃது உணர்த்துகின்றது. இராமன் சீதையைத்தேடிவர அனுமனை அனுப்புகின்றுன். சீதையைத் தேட அனுமான்பெரிதும் முயன்று வருந்துகின்றுன் இஃது ஆன்மாவினது மனச்சான்று, உலகியல் ஆகிய மாயச் சேற்றினின்று தன்னை விடுவித்துக் கொள்ளச் செய்யும் முயற்சியினைச் சுட்டுகின்றது. இராமபிரானுக்கும் இராவணனுக்கும் போர் ஏற்படுகின்றது. தீமையை அடக்கி வெற்றி கொள்ள ஆன்மா போராடுதலை, இப்போர் நிகழ்ச்சி இனிது உணர்த்துகின்றது.

இராவணன் கும்பகர்ணனின் உதவியைப் பெறுகின்றுன். ஆன்மா தீமையை எதிர்த்துப்

போரிடும்போது, தூக்கம் சோம்பல் முதலிய தீய குணங்கள் இடை இடையே வந்துதொல்லை விளைத்தலை இது குறிப்பிடுகின்றது. கும்ப கர்ணன் கொல்லப்பட்ட பிறகு, இந்திரசித்து தொடர்ந்து சண்டை புரிகின்ருன் அவனுடைய அம்புகள் பாம்புகளாக மாறுகின்றன. சில சமயங்களில் நன்மையிலும் தீமையே வலிமை பெற்று நிற்றலை இதனுல் அறிகின்ருேம்.

அந்நிலையில் அனுமான் கயிலாய மலையிலிருந்து சஞ்சீவி மூலிகையைக்கொண்டு வருகின்ருன். இந்திரசித்தின் நாகாஸ்திரத்தினுல் ஏற்பட்ட தீங்குகள் நீங்குகின்றன. தீய சக்திகள் ஆன்மாவுக்குக் கேடு சூழ முற்படும்போது, பூசை தியானம் செபம் தவம் முதலியன, அத்தகைய சக்திகளை அழித்து, ஆன்மாவுக்கு நன்மை புரிகின்றது என்னும் உண்மையை, இஃது அறிவிக்கின்றது.

பின்னர் இராமனுக்கும் இராவணனுக்கும் இறுதிப் போர் நடைபெறுகின்றது. இராவணன் பத்துத் தலைகளும், இருபது தோள்களும் கொண்டவன். இராமபிரான் அவனது தலை ஒவ்வொன்றையும் அறுக்கின்ருர். ஆயினும் அவைகள் திரும்பத் திரும்ப முளைக்கின்றன. இஃது ஒரு நல்ல ஆன்மா, தான் ஈடேறுவதற்கு எண்ணற்ற பல தீய சக்திகளை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொள்ளவேண்டியிருக்கின்றது என்பதனைப் புலப்படுத்துகின்றது. ஒரு தீயகுணத்தை நாம் அரை குறையாக ஒழித்தால் போதாது; அது மீண்டும் மீண்டும் பெருகி வளர்ந்து வருமாதலின், தீய பழக்க வழக்கங்களை, நாம் அறவே முற்ருக வெறுத்து விலக்கி அழித்துவிடுதல் வேண்டும் என்பதனை இதனுல் அறியலாம்.

இராமபிரான் பிரம்மாஸ்திரம் கொண்டு, இராவணனை வென்று கொன்றழிக்கின்ருர், ஒரு ஆன்மா தனது துன்பங்களைக் கடந்து வெல்லுவதற்கு இறைவனின் திருவருளைத் துணையாகக்கொள்ளுதல் வேண்டும் என்பது இதன் கருத்து.

இராமபிரான் சீதைக்கு ஏற்பட்ட பழி குறித்து வருந்துகின்ருர். சீதை தான் ஒரு குற்றமும் அற்றவள் என்பதனை, உலகறியத் தீப்புகுந்து எழுந்து மெய்ப்பிக்கின்ருள். இறையருட்பேறு விரும்பும் ஒரு தூய ஆன்மா, பொல்லாப் புலாற் குரம்பையாகிய உடம்பின் புன்மையினை உணர்ந்து வெறுத்து, அதனை நீக்கிக்கொள்ள விரும்பி முயல்கின்றது. அப் புன்புலால் யாக்கையே இறையருளாற் பின்னர் பொன்னெடுங் கோயிலாக மாறுகின்றது என்பதனை இஃது உணர்த்துகின்றது.

தீப்புகுந்து எழுந்து தூயவளாய் நின்ற சீதையும், இராமபிரானும் பின்னர் ஒன்று சேர்ந்து மகிழ்கின்றனர். அயோத்திக்குச் சென்று இன்பமுற்று வாழ்கின்றனர். இஃது ஆன்மா பரமான்மாவுடன் கூடி, வீடுபேற்று நிலையில் ஒன்றி நின்று இன்புற்று நிற்றலைத் தெளிவுறுத்துகின்றது.

இங்ஙனம் மிகச் சிறந்த இதிகாசமாகிய இராமாயணக் கதையினை ஊன்றி நோக்கி உணர்ந்தால், நாம் எத்தனையோ பல தத்துவ நுண்பொருள்களை அறிந்து பயன் பெறலாம். இத்தகைய நுண்ணுணர்வு கொண்டு ஆராயுந்தொறும், நமது உள்ளம் தூய்மையடைந்து, பக்தி உணர்வு பொங்க, மிகச் சிறந்த புனித நலன்களையும், தெய்விக உணர்வுகளையும் நாம் எய்தலாம். இனைய பெருஞ் சிறப்பியல்புடைமை பற்றியே, நமது முன்ஞேர்கள் ''இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம்'' என்று, இதனைப் பெரிதும் பாராட்டிவருகின்றனர்.

—ஆசிரியர்

# எட்டுநாண் மலர்

பண்டித வித்வான் திரு. இராம. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள், திருவையாறு.

''எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லர்இடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்னகெ டிலவீ
ரட்ட ஞர்அடி சேருமவருக்கே?'.

இப்பாட்டு ஐந்தாந் திருமுறையாகிய திருக் குறுந் தொகையிற் காணப்பெறுவது. அடங்கன்முறை எண்ணுயிரத்திரு நூற்றைம்பதில், ஐயாயிரத்தெழுறூற்றெழுபதாவது செய்யுளாகக் காணப்பெறுவது. எட்டு வீரட்டானத் தலத்துள், திருவதிகை வீரட்டானம் பற்றியது. இதனைப் பாடியருளியவர் திருவாமூரில் திருவவதாரம் புரிந்தருளிய திருநாவுக்கரசு சுவாமிகளாவர். இப்பெருமான் 'ஒப்பிலப்பர்' எனத் திருஞானசம்பந்தராற் பெரிதுங் கொண்டாடப்பெறுபவர். இத்திருநாவுக்கரசரே ''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்'' என்பர்.

''பூமன் சிரங்கண்டி; அந்தகன்
கோவல்; புரமதிகை;
மாமன் பறியல்; சலந்தரன்
விற்குடி; மாப்பழுவூர்:
காமன் குறுக்கை; யமன்கட
வூர்; இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ்
சூடிதன் சேவகமே''

என்னும் பாடல், எட்டு வீரட்டானம் இவையெனலைத் தெளிவிக்கும். இவ்வெட்டனுள் திருவதிகையும் (திரிபுரமெரித்த தலம்), அத்தியினுரிதனை அழகுறப் போர்த்த வழுவூரும், பூர்வதிசையாகிய கிழக்குத் திருவாயிலை உடையன. ஏனைய திருக்கண்டியூர், திருப்பறியலூர், திருக்கடவூர், திருவிற்குடி, திருக்குறுக்கை, திருக்கோவலூர் ஆகிய ஆறும், குடதிசையாகிய மேற்குத் திருவாயிலை யுடைன.

நம்முடைய நாட்டில் திருமுறையாற் றெளிவிக்கப்பட்டவை 275 திருத்தலங்களாகும். நடிடுநாட்டில் உள்ளது திருவதிகையாகும். இத்தலம், மருணீக்கியாராகிய நம் அப்பர் பெருமானுக்குச் சூலை நோய் தவிர்த்தருளித் திருவதிகை வீரட்டானப் பெருமானுல் திருநாவுக்கரசு எனத் திருப்பெயர் சூட்டப் பெற்றதாகும். மக்கட் சட்டகம் தாங்கியவர், சைவராதல் அரிதினும் அரிதாகும். சைவ நன் மக்களாயவர், சமயம[illegible] தீக்கைகள் பெற்றுச் சிவபூசனையாற்றி, யோகம் நிட்டை முதலியன புரிந்து அரனடியயடைதலே முத்தியாகக் கோடல் வேண்டும்.

''பண்டைநற் ற[illegible]த்தாற் றேன்றிப்
பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியினிற் றெருகுப்பன்''

என்பது சிவஞானசித்தியார் பாடல்.

சிவத்தினை விட்டாற் பவத்தினையறுக்கவொண்ணுதெனும் துணிவு பிறக்கவேண்டும். 'பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்தால் நல்லறிவு சற்றே நகும்.' ஆகலான் சிவபரம் பொருளைச் சிந்திக்கும் நெறியினைச் சாத்திரமும் தோத்திரமும் தக்கவாறு கூறியிருந்தலை ஆய்வது, அறிஞர் கடப்பாடாகும். 'நான் பெற்ற இன்பம் பெறுக விவ்வையகம்' எனத் தோத்திரங் கண்ட தொன்மை இருபான் எழுவரும் இயம்பியருளியுள்ளனர். பதினொராம் திருமுறையாசிரியர் பன்னிருவருள் ஒருவராகிய பட்டினத்தடிகளார்,

''போதும் பெறுவிடிற் பச்சிலை
யுண்டு புனலுண்டு எங்கும்
ஏதும் பெறுவிடில்
என்னெஞ்சுண்டென்பர்'',

ஆகவே, பூக் கைக்கொண்டரன் பொன்னடி போற்றும் பரிசினைப்பற்றி யொரு சிறிது திரு முறைகளைக்கொண்டு நாடுவோம்:

''பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு
ஆர்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்டனாரே,''

முதலிய பாடல்கள், தொடுத்த மலரொடு தூபஞ்சாந்து கொண்டரனடி யர்ச்சித்தலை வற் புறுத்தா நிற்கும். ''பூவெனப்படுவது பொறி வாழ் பூவே'' என்பர். ''பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை'' என்பது அதனைத் துணி வுறுத்தும். பூ, போது, மலர், அலர், அரும்பு, புட்பம் என்பன, ஒவ்வொரு காரணத்தைக் குறித்து நிற்கும். பூப்பது பூவாகும். அரும்பி னின்று அலர்வதற்கு முன்னுள்ளது போது ஆகும். விரிந்து நிற்பது மலராகும். ஆகவே, பூவும் மலரும்போதும் நறுமணம் கமழும் பரு வத்தினவாம் என்பதனைக் குறிக்கும். இங்கு அப் பர் திருவதிகைப்பிரானைப் பற்றிய பாடல்களில் பெரும்பாலும் எட்டுப் பூவினைப்பற்றி மிக மிக வியந்து சிறப்பித்திருப்பதனை நோக்கல் வேண்டும்.

பூக்கள் நான்கு வகைப்படும்: கோட்டுப் பூ, கொடிப் பூ, புதர்ப் பூ, நீர்ப் பூ என்பனவாம். இவற்றினை முறையே எடுத்து அருச்சித்துப் பேறு பெற்றவருள் தலையாயவர் புலிக்கால் முனிவரேயாவர். இவர் பூசித்த தலங்களே திருப்பாதிரிப்புலியூர், பெரும்பற்றப்புலியூர், பெரும்புலியூர், ஓமாம்புலியூர், திருவெருக்கத் தம்புலியூர் முதலியனவாம். எட்டுப் பூக்க ளாவன, பாதிரிப் பூ, புன்னைப் பூ, சண்பகப் பூ, வலம்புரிப் பூ (நந்தியாவர்த்தம்), அலரிப் பூ, எருக்கம் பூ (வெள்ளை), தாமரைப் பூ, செங்கழு நீர்ப் பூ என்பனவாம்.

''கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்,
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே''

என்பது புட்பாஞ்சலி செய்தலை வற்புறுத்து கின்றது. பரார்த்த பூசனையிலோ ஆன்மார்த்த பூசனையிலோ புட்பாஞ்சலி செய்தே தீரல்வேண் டும். இஃது மனவொருமைப்பாட்டிற்கு இன்றி யமையாதது. திருக்கரவீரம், திருப்பாதிரிப்புலி யூர், திருஎருக்கத்தம்புலியூர், புன்னையங்கானல் (திருமயிலை) முதலியன, அப்பூவினையுடைய மரத் தாற் பெயர் பெற்றனவாம். *(1)* ''நீளமா நினைந்து எண்மலர் இட்டவர், கோள வல்வினை யும் குறைவிப்பரால்'' (2) ''கள்ளின் நாண்மலர் ஓரிருநான்கு கொண்டு, உள்குவார் அவர் வல் வினை ஓட்டுவார்'' *(3)* ''பூங்கொத்தாயின மூன் றொடு ஒரைந்திட்டு, வாங்கி நின்றவர் வல்வினை ஓட்டுவார்'' *(4)* ''தேனப்போதுகள் மூன்றொ டோரைந்துடன், தானப் போதிடுவார் வினை தீர்ப்பவர்'' (5) ''உரைசெய் நூல்வழி ஒண் மலர் இட்டிடத் திரைகள் போல்வரு வல்வினை தீர்ப்பரால்'' *(6)* ''ஒலி வண்டறை ஒண்மலர் எட்டினால் காலை ஏத்த வினையைக் கழிப்பரால்'' *(7)* ''தாரித்து உள்ளித் தடமலர் எட்டினால், பாரித்து ஏத்த வல்லார் வினைபாற்றுவார்'' எனத் திருநாவுக்கரசர் திருவதிகைத் திருவீரட் டானத் திருப்பதிகப் பாடல் ஒவ்வொன்றிலும், ''எட்டு நாண்மலர்'' குறிப்பிட்டருளியிருப்ப துடன்,

அட்ட புட்பம் அவைகொளும் ஆறுகொண்டு
அட்ட மூர்த்தி அனாதிதன் பால்அணைந்து
அட்டு மாறுசெய் கிற்பர் அதிகைவீ
ரட்ட னார்அடி சேரு மவர்களே

என்றும், அத்திருப்பதிகத்தின் இறுதிப் பாட லில் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார். இதனால் அட்டபுட்பங்கள் ஆகிய எட்டு மலர்களாலும், இறைவனைப் பூசிக்கப் பெறுவோர் பெறும் பெரும் பேற்றினை அப்பர் பெருமான் அறிவித் தருளுகின்றார். பஞ்ச மகாவில்வங்கள் எனப் பெறும் கூவிளம் (வில்வம்), விளா, மாவிலிங் கம், கிளுவை, நொச்சி ஆகியவை, பத்திரங் களுட் சிறந்து நிற்பனபோல, எட்டுநாண் மலர் களும் சிறந்தவை எனப் போதருகின்றது.

நாறும் பூவுந் தேவர்க்காம், நாறாப் பூவும் தேவர்க்காம் என்பது, ஒரு பெற்றியாகவிருப்பி னும், எல்லாம்வல்ல இறைவனை, உருவும் அரு வும் அருவுருவும்கொண்டு ஆன்மாக்களின் மல வலிகெடுத்து நலமுறுமுத்திப் பேறருளுமுறை யிது வெனலைக் குறிப்பிடல் போற்றற்பாலது. எட்டு நாண் மலர்கொண்டு என்பது நாமறியக் கிடப்பதாம்.

சில பூக்களை அன்றே அப்பொழுதே நேசித்து விசுவாசித்துப் பூசித்தல் வேண்டும். சில பூக்கள் மூன்று நாள், ஏழு நாள், சில திங்களும் வைத்துப் பூசிக்கலாம் எனப் புட்ப விதியிற் காணப்பெறுவது. இதழியாகிய கொன்றையும் கூவிளமும், வன்னியும் மத்தமும் செங்காவி, கருங்காவியும் மிகமிகச் சிறப்புற்றன. கோங்கலரும் அப்பெற்றியதே.

பகைவரையும் (அகப்பகை, புறப்பகை) புறங்கொடுத்து ஓடச்செய்ய வேண்டுமெனும் மனப்பான்மையார், வெள்ளெருக்கம் பூவினையெடுத்துப் பாலினிற் றோய்த்துச் சீலமொடு சிவபூசனை புரிவோர் ஆதல்வேண்டும். பாதிரிப் பூவினை யெடுத்துப் பூசிக்கும் பெற்றியர் தாமும் பாச நீக்கமுற்று சிவநேச வாசமுற்றுத் தம்மைச் சார்ந்தவரையும் அப்பெற்றியராக்குவர். சண்பகப்பூ, வண்டு படாமலர். அதிலுள்ள தேனினையருந்த வண்டுகள் மொய்க்கப் பெறா. சண்பகாரணியம், சண்பகக்காடு, சண்பிகாடவியென்று தலம் அழைக்கப்பெறும். இப்பூவினால், அருவுருவத் திருமேனிகொண்ட சிவலிங்கப் பெருமானை, பஞ்சபூதங்களும் இருசுடரும் இயமானனும் ஆகிய அட்டமூர்த்தியை, அருச்சிக்கப் பெறுபவர், புறச்சமயங்களிற் புக்கு நரக வேதனைக் குள்ளாகாதே சிவபரம் பொருளைச் சார்ந்து சிவமாந்தன்மை யெய்தப் பெறுவர்.

புன்னைப்பூ : இது நெய்தனிலக் கருப்பொருள்களுள் ஒன்று. நெய்தல் என்பது கடற்கரையை யடுத்தவூர்களாம், இதன் வித்தினையாட்டி எண்ணெய் எடுத்துத் தீபமிடுதல் சில நாட்டு வழககம். இருப்பை வித்தினெய் ஏற்றமுடைத்தாதல்போல இதுவும் ஏற்றமுடைத்தென இயம்புவர். கலைமகள் நோக்கமும் (கடாட்சமும்), திருமகள் நோக்கமும் வேண்டுமவர், புன்னைப் பூக்கள்கொண்டு பூசனை புரிதல் வேண்டும். அலரியாகிய கரவீரப் பூவினால் போற்றிப் பூசிப்பவர் சிவவொளி பெற்றுத் திகழ்வர். இவ்வலரிப் பூவினை மூன்று நாள்வரை வைத்துப் பூசிக்கலாம். அலரி என்று சூரியனுக்கொரு பெயர். இதனைக் கண்டலர்வது இவ்வலரியும், கமலமாகிய தாமரையும் ஆம். அடுக்கு அலரி துர்க்கை, காளி, சூரியன் முதலிய மூர்த்திகளுக்கு ஆகும் என்பர். இவ்வலரிப் பூ ஐவகை நிறமுடையதாகக் கானலாம். இது சிவபூசனைக்கு மிகச் சிறந்ததெனற்குப் பல காரணங்களுண்டு. அவற்றினைப் பற்றிய குறிப்பு வரையவில்லை.

இனி நந்தியாவர்த்தமாகிய வலம்புரிப் பூவினைப் பற்றிய குறிப்பினைக் கூறுவாம். இப்பூ, அடுக்காகவும், ஓரிதழாகவும், சிறிய அடுக்குடையதாகவும் காணப்பெறும். நல்ல மணமுண்டு. வெள்ளியாகிய இரசதச் சத்துண்டெனபர். இதனைக்கொண்டு அட்ட மூர்த்தியாகிய அரனை யருச்சித்தால் அகக்கண்ணொளியும், புறக்கண்ணாகிய ஊனக்கண்ணொளியும் பெற்று வாழ்வர். மக்களுக்குக் கண்ணிற் சிறந்த வுறுப்புண்டோ ? இல்லையல்லவா? ஆகவே, நந்தியாவர்த்தம் பூசனைக்குப் போற்றற்பாலதாயிற்று.

நீர்ப் பூக்களாகிய காவியும், கமலமும் பற்றிய குறிப்பினைக் குறிப்பாம். கமலக்கண்ணன் எனும் பெயர்பெறும் கரிய திருமாலும், சலந்தரனைச் சங்கரித்த சக்கரம் பெறுவான் வேண்டித் திருவீழிமிழலை யெனும் திருத்தலத்தைச் சார்ந்து நாளொன்றுக்கு ஆயிரம் அரவிந்தப் பூக்கொடு அருச்சித்தனர் என்றும், ஆயிரத்திலொன்று குறைய நிறைய வில்லையெனத் தம் கமலக்கண்ணினைப் பறித்துப் பூசித்துச் சக்கரம் பெற்றனர் என்றும் வரலாறு கூறும். திருமகள் தலைவரே தாமரைப்பூவின் ஏற்றங் குறித்துப் பூசித்தனர். எனின், நாம் எங்ஙனம் அதன் சிறப்பினைச் செப்பப்பெறுவோம்? சிவபூசனை செய்பவர் தாமரையை ஏழுநாள் வரை வைத்துப் பூசிக்கலாம். ஆதலின், இன்றியமையாதனவெனக் கொள்ளல்வேண்டும் தாமரைப் பூவினை யென்பதற்குப் போதிய சான்று கிட்டியது.

திரு—திருமகள்; ஊர்—தலம். திருவாரூர்த் தலப்பெயர் கமலாலயம் என்பது ஆயற்பாலது. இவ்வூரில் எழுந்தருளிய பராசக்தி நீலோற்பலாம்பிகையாவள். பராசக்தியின் திருவருள் பெற்றாலன்றிச் சிவப்பேறுற முடியாதென்பது பலர் கண்ட முடிவு; ஆதலின், அப்பெற்றியுள்ள நீலோற்பல மலரே தியாகராசப்பெருமானாகிய இருந்தாடும் பெருமானுக்கு உரித்து. இன்றும் அப்பூக்கள்கொண்டு பூசித்து வருகின்றனர். செங்கழுநீர் என்னும் பெயர் உண்டு. இப்பூவும் பலநாள் வைத்துப் பூசித்தல் தகும். சோழநாட்டில் மத்தியார்ச்சுனம் எனப்பெறும் திருவிடைமருதூர்ப் பெருமானைப் பற்றிய தேவாரப் பாடலுள் ஒன்று.

''பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசன்எம் பெருமான்இடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே.''

# பதிமுது நிலை

திரு. த. ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள், திருவாவடுதுறை ஆதீனம்.

தோடுடையசெவி யன்விடை
யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென்
னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்
தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுர மேவிய
பெம்மானிவ னன்றே.

—சம்பந்தர்

புறச் சந்தான குரவர்களில் நாலாம் ஆசாரியராகிய ஸ்ரீ உமாபதி தேவநாயனுர், தாம் அருளிச் செய்த 'திருவருட் பயன்' என்னும் சாத்திர நூலுக்கு இயையத் தேவார முதலிகள் மூவர் அருளிச் செய்த திருமுறைகளிலிருந்து, தொண்ணூற்றென்பது பாடல்களைத் திரட்டி, அதற்கு 'அருண்முறைத் திரட்டு' என்னும் பெயரும் அருளிச் செய்தனர். அது 'பதிமுது நிலை' முதலாக 'அணைந்தோர் தன்மை' ஈறுகப் பத்துப் பிரிவுகளை உடையது.

அவற்றுள் பதிமுதுநிலை என்பது, மேலாகிய இறைவனது இயல்பு எனப்பொருள்படும். பதிப்பொருள் சிவமே. 'சிவத்துக்குமேல் தெய்வமில்லை, சித்திக்கு மேல் நூலில்லை' என்பது பழமொழி. பதியின் சொரூபநிலை: முதல் நடு இறுதி இல்லாதது, தூலசூக்கும சூனிய வடிவமில்லாதது, குணங்குறி இல்லாதது. அஃது ஒன்றுய் அகளமாய் அகண்டாகார சச்சிதானந்த பரிபூரணசோதியாய், பஞ்சகிருத்தியத்திற்கு அதீதப்பட்டு நின்மல வடிவாய் விளங்குவது. தடத்த நிலை சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களைப் பண்ணுவதாம் என்க,

இதனுல் எவ்விடத்தும் வியாபகமாகிய சிவம், கருவி கரணங்களால் அறியப்படாத தாய், எல்லாவற்ருலும் அறியப்படாதது அன்ருய். சிவஞானம் ஒன்ருலேயே அறியப்படும் சித்துச் சத்தாய் நிற்பது என்பது பெறப்படும்.

'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் பாடல் திருஞான சம்பந்தப் பிள்ளையாரைச் சிவபாத இருதயர் 'இப் பால் அமுது தந்தார் யாவர்?' என வினவியபொழுது அருளப் பெற்றது. அவர் இறைவன் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று சுட்டிக்காட்டினர். சத்தியும் சத்தனும், மரமும் வைரமும் போலக் குணகுணி பாவமாக நிலைத்தவர்; ஒளியின்றிச் சூரியனும், சூடின்றி அக்கினியும் விளங்காத வாறு போலச் சத்தியை யின்றிச் சத்தன் விளங்கான்.

''தரும்வடி வெல்லாஞ் சத்தி;
சத்திதான் மரமும் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச்
சிவத்தினே டியைந்து நிற்கும்''

என்பது சிவஞானசித்தியார்.

சிவபெருமான் ஞானசொரூபி, ஆதலால், ஞானமுடையவன் சிவபெருமான் என்றும்; உமாதேவியார் அருட் சொரூபி ஆதலால், அருளுடையவள் உமாதேவியார் என்றும் சிவஞானம் அருளொடு கலந்தால் சிவத்தை அறியமுடியும் என்றும்; அருளொடு கலவாதாயின் சிவத்தை அறிய முடியாதென்றும் விளக்குதற்காகவே ஞான வடிவினராகிய சிவபெருமான் சிவஞானத்தை அருளொடு கலந்து பிள்ளையாருக்குக் கொடுத்து, அதனை அவர்வழியால் யாவர்க்கும் வழங்கத் திருவுளங் கொண்டான் என அறிக.

சிவபெருமான் தனது அருட்சத்தியையே தனக்கு உடம்பாகக்கொண்டு ஒரு கூற்றுனே சிவன் எனவும், மற்றெரு கூற்றுனே சத்தியெனவும் நிற்பன். அவ்வாறு இரண்டு உருவாய் நிற்பினும், அவ்விரண்டு உருவிற்கும் தனித்தனி வேறு செயல்கள் உள என்பதின்றி, ஒரு செயலே உளது என அறிக. எனவே சத்தி உடம்பளவாய் நிற்பதேயன்றிச், செயலை மேற்கொண்டு நிற்பவன் சத்தியைடைய சத்தனே ஆவான் என்றும் அறிக. இறைவன்

எவ்வுயிர்களுக்கும் நிமித்தகாரணனாய் முன்னிற்பவன் என்றும், தூய உடம்பாக இருக்கும் அச்சத்தியைத் தன் வயத்ததாகவே வைத்திருப்பவன் என்றும் கொள்க.

சிவபெருமான், காழிப்பிள்ளையாருக்கு உண்பித்தற்குக் கறந்த பாலில் குழைத்த சிவஞானம், பாசஞான பசுஞானச் சார்புகளால் குன்றவரும் பொய் கலந்தார்க்கு உணர்த்தத் தகும் ஞானம் அன்று. மெய்கலந்த அன்பர்க்கு ஊட்டத்தகும் சிவஞானம் என்றும், களிம்பில்லாத பொற்கலம் போன்று வேண்டப்படுவன எல்லாம் வேண்டாது மறந்து மிக்க அன்பே வேண்டும் மெய்கலந்த அன்பராகிய இப்பிள்ளையாரே இந்தச் சிவஞானத்துக்குரியார் என்றும்; இச் சிவஞானப் பாலமுதம் உண்ணப்பெற்ற பிள்ளையார், 'உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகி, உடம்பெல்லாம் கண்ணாய் ஆனந்த வெள்ளம் பாய்ந்து' அவ்வன்பே சிவமாய் அமர்ந்திருந்தார் என்றும் உணரக் கிடந்தது காண்க.

'யாவருக்குந் தந்தை தாய் எனுமவர்' இப்பிள்ளையாருக்கு இப்படித் தந்தை தாயாக வந்து, பால் கொடுத்தமையால் சிவஞான சம்பந்தராயினர். சம்பந்தப் பிள்ளையார் தீவிரதர அன்புடையவர். பிள்ளைப் பருவத்திலேயே அவ்வன்பு மேலிட்டெழுந்தது. அதற்குக் காரணம் முன்னைப்பிறவிகளிற்செய்த மேலாகிய உண்மைச் சரியை கிரியா யோகங்களேயாம். அவைகளே நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டுவன. நன்நெறியாகிய ஞானம் என்றது, வீடுபேற்றுக்கு ஏதுவாகிய ஞானமாம். நன்மை எனப்படுவன எல்லாவற்றினும் சிறந்த நன்மை யாவது வீடுபேறு என்பது. நன்னெறி, சன்மார்க்கம் என்பன ஒரு பொருட் சொற்கள். சத்-ஞானம் அது பெருநெறி, படிமுறையானன்றி இவ்வொரு பிறவியிற் செய்த தவந்தானே அமையா தாகலின் முற்பிறவிகளிற் செய்த தவமாம் என்க. இதனை, ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் தாம் அருளிச் செய்த சிவஞான போதச் சிற்றுரையில், ''ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத்தான் ஞானம் நிகழும் என்றது'' என்னும் மேற்கோளின் ஏதுவாகிய ''மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்நெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாவாகலான்'' என்பதற்குரிய உரையில், ''ஆளுடைய பிள்ளையார் முதலாயினர்க்குத் தவமின்றியும் ஞானம் நிகழ்ந்தவாறென்னை என்னும் கடாவை விடுத்தற்கு, ''மேற்செய்துழி என ஈண்டும் வலியுறுத்தார்'' எனக் கூறியமை காண்க.

ஸ்ரீ சிவஞான யோகிகள் இவ்வாறு உரைவரைதற்குக் காரணம், ''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்'' என்னும் செய்யுளில், சேக்கிழார் நாயனர் 'தவமுதல்வர் சம்பந்தர்' என்று அருளிச் செய்தலின், அதனையே அனுவதித்து 'முற்செய் தவத்தான்' என்று இவரும் அருளினர். சேக்கிழார் நாயனர் 'தவமுதல்வர் சம்பந்தர்' என்றதற்கும் காரணம் வேண்டுமே! அது இத்தேவாரத் திருப்பாடலில் 'ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த பெம்மான்' எனக் குறித்த அகச்சான்றே காரணம் என்க. 'முனைநாள்' என்றது முன்னைப்பல பிறவிகளில் எனக் குறிப்பித்தபடி. இனி, கண்ணப்ப நாயனர் புராணத்திலும், ''முன்பு செய்த வத்தின்ஈட்டம் முடிவிலாஇன்பமான, அன்பினையெடுத்துக் காட்ட'' என்று அருளிச் செய்தமையும் இதனை வலியுறுத்தும்.

எனக்கு 'அருள் செய்த பெம்மான் இவன்,' 'பிரமாபுரம் மேவிய பெம்மான்,' 'பீடுடைய பெம்மான் இவன்' என்றார். பிரமதேவரால் வழிபடப் பெற்று, அதனல் பிரமாபுரம்என்னும் பெயரையடைந்த இத்தலத்து வீற்றிருக்கும் பெம்மான். அவன் பீடுடையனாயிருந்து தன்னையடைந்த ஆன்மாக்களையும் பீடுடையராகச் செய்பவன்; பீடு-பெருமை: பெருமையாவது பிறந்திறவாத தன்மை. அது மங்கலம். மங்கலமாவது சிவம். சிவமல்லாததெல்லாம் அமங்கலமாம்.

சாதல் பிறத்தல்கள் அமங்கலம் எனவே, சாதல் பிறத்தலின்மை மங்கலம் என்பதாயிற்று. அதுவே சிவப்பொருள். தான் சிவமாயிருந்து தன்னையடைந்தாருக்குச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வு அளிப்பவன் அப்பீடுடைய பெம்மான் ஆவன். அவனே இச் 'சிவஞானப் பாலமுது' அளித்தவன்; பிறர் அல்லர்.

'செவியன்' என்று அடையாளங் கூறுவாராய்த் தோடுடைய செவியன் என்று ''அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக, அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்'' என அப்பெருமானின் தடத்தலக்கணம் கூறினர். ''தோடுடைய செவி' அம்மையாரின் கூறு: அம்மை முகமாகவே தமக்குச் சிவஞானப் பாலமுதை இறைவன் அளித்தான். ''பல்லுயிருங்களிகூரத் தம்பாடல் பரமர்பால், செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து'' என்று சேக்கிழார் நாயனர் அருளினர். இவ்வாற்றல், இறைவனது இயல்பு ஆகிய ''பதிமுதுநிலை'' என்பது, இப்பாடலின்கண் இனிது விளக்கப் பெற்றிருத்தல் காணலாம்.


# இன்னும்பன் நூற்றாண்டு "டிரும்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

[ ஜகதாசார்ய சிம்மாசனாதிபதி, மகாவித்வான் 'பத்ம விபூஷண்'
'பிரதிவாதி பயங்கரம்' ஸ்ரீமத் உ. வே. அண்ணங்கராசார்ய
சுவாமிகள் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு
விழாப் பாராட்டியல் வாழ்த்துப் பாக்கள்.]

நாலாயிரத்திவ வியப்பனுவல், நலஞ்சேர் உரைகள், பண்டிருந்த
நல்லா சிரியர் பனுவல்களின் நயஞ்சார் உரைகள், துதிநூல்கள்,
மேலாம் ஆழ்வார் ஆசார்யர் மேன்மை யுணர்த்தும் வியன் நூல்கள்,
மிக்க ரகசி யார்த்தங்கள் விளக்கும் நூல்கள், வேதாந்த
நூலாம் அரிய பல நூல்கள், நுட்பம் மிகுகண் டனநூல்கள்,
நுனித்த மரபு வழிநூல்கள், நுவலும் பலவாம் மொழிநூல்கள்,
கோல கலமாய் வைணவநற் கொள்கை பரப்ப வெளியிடும்சீர்க்
குணக்குன் றண்ணங் கராசார்யர் குலவும் தொண்டிற் கிணையுண்டோ?

---



இந்தியப் பேரரசு வழங்கிய ''பத்மவிபூஷண்'' விருதினைத் தமக்கு அளித்தபோது, ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு. நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன், M.A., அவர்களிடம் கலந்து உரையாடி மகிழ்தல் (21-6-68).

திருக்கேயில்

(விருத்தம்)

1. மாஇருங் கலைமகள் கற்றோன்! மகாவித்வான்! மறைகள் தேர்ந்தோன்!
கனியிரும் பொழில்கள் சூழ்ந்த கச்சியம் பதியில் வாழ்வோன் :
தாவரும் சீர்நம் பிள்ளை சந்நிதி அமைத்த சான்றோன் ;
ஆயிரம் பிறைகள் கண்ட அண்ணங்க ரார்யர் வாழ்க!

2. வாக்குவளமை மணவாள மாமு னிகள்போல் வாய்த்துடையோர் !
ஆக்கும் உரையால் அப்பெரிய வாச்சான் பிள்ளை போன்றொளிர்வார் !
தேக்கு சமய வளர்ப்புழைப்பில் சீர்இ ராமா நுசர்நிகர்ப்பார் !
யார்க்கும் அண்ணங் கராசார்யர் அருமை பெருமை அளப்பரிதால் !

3. மாத இதழ்கள் பலபதிப்பார் ! மாண்பார் பலநூல் வெளியிடுவார் !
வேதப் பள்ளி, கோஷ்டிகள்தாம் விளங்க நிறுவி நடத்துகிற்பார் !
ஓதி உய்நூல் பலதொகுப்பார் ! உயர்ந்த அறங்கள் பலபுரிவார் !
நீதி வழுவா அண்ணங்கர் நிகரில் பெருமைக் கெல்லையுண்டோ ?

4. நூற்றுக் கணக்கில் சிறந்தநல்ல நூல்கள் பலதாம் வெளியிட்டோர் !
மாற்றுப் பொய்ம்மைக் கொள்கைகளை மறுக்கும் திறனில் நிகரில்லார் !
வேற்றுப் புலத்தார் தாமும்மிக வியக்கும் சிறந்த வித்தகத்தார் !
ஆற்றல் மிக்கார் அண்ணங்கர் ! அவர்தாம் வாழ்க பல்லாண்டே !

5. புலவ ராகப் பலர்இருப்பர் ! புரவ லராகச் சிலர்இருப்பர் !
புலவர் தாமே புரவலராய்ப் புவியில் இருத்தல் மிக—அருமை !
அலகில் சீர்த்தி அண்ணங்கர் ஆசார் யர்தாம், புலவர்களுள்
தலைவர் ! மற்றும் புரவலராம் சான்றோர் ! வாழி நெடிதூழி !

6. இன்சொற் செல்வ ! வைணவநல் இயல்ப னைத்தும் எய்திநிற்போய் !
நன்சொற் புலவ ! நாவலவ ! நல்ல பலநூல் ஆசிரிய !
தென்சொற் கடந்து வடசொற்கடற் கெல்லை தேர்ந்த சிறப்புடையோய் !
என்சொற் கொண்டு நுமைப்புகழ்கேன் ? இனிது வாழ்க பல்லாண்டே !


7. நாற்ப தின்மேல் ஆண்டுகளாய்ச் சென்னை நகரில் திருப்பாவை
போற்றி, உரையும் சொற்பொழிவும் புதிய புதிய பொருள்நலங்கள்
தோற்றி, விளக்கம் செய்துவரும் தூயோய்; இராமா நுசநன்முனிவர்போல்
ஏற்று, நுமையும் திருப்பாவை ஜீயர் என்ற யாம்தொழுவேம் !

8. சீலம் மிகுப்ரதி வாதி பயங்கரப் பேர்சிறந்தீர் !
சாலநன் றெண்பதாம் ஆண்டு நிறைவு தகஅடைந்தீர் !
ஞாலம் வியக்கும் நலஞ்சார் பணிகள் நனிபுரிந்தீர் !
மேலும்பல் லாண்டுகள் வாழ்க ! நீர் இன்பம் மிக நிறைந்தே !

(வேறு)

9. நாலா யிரத்திவ் வியப்பனுவல்,
நலஞ்சேர் உரைகள், பண்டிருந்த
நல்லா சிரியர் பனுவல்களின்
நயஞ்சார் உரைகள், துதிநூல்கள்
மேலாம் ஆழ்வார் ஆசார்யர்
மேன்மை யுணர்த்தும் வியன்நூல்கள்,
மிக்க ரகசி யார்த்தங்கள்
விளக்கும் நூல்கள், வேதாந்த
நூலாம் அரிய பல நூல்கள்.
நுட்பம் மிகுகண் டனநூல்கள்,
நுனித்த மரபு வழிநூல்கள்,
நுவலும் பலவாம் மொழிநூல்கள்,
கோல கலமாய் வைணவநற்
கொள்கை பரப்ப வெளியிடும் சீர்க்
குணக்குன் றண்ணங் கராசார்யர்
குலவும் தொண்டிற் கிணையுண்டோ ?


10. எண்பதாண் டான இளைஞரே ! வைணவநற்
பண்புகள்தாம் ஒன்றிநிற்கும் பாங்குடையோய்-தொண்டுகள்தாம்
மன்னும் படிசெய்யும் மாண்பார்அண் ணங்கர்ஐய ;
இன்னும்பன் னூற்றாண் டிரும்;





கோடம்பாக்கம், புலியூர் ஸ்ரீவேங்கீசுவரர் கோயிலுக்கு, நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம். கண்ணப்பன் அவர்களும், சென்னை நகரத்தந்தை மேதகு திரு. சா. கணேசன், B.A. அவர்களும் வருகை தருதல்.



கோடம்பாக்கம், புலியூர் ஸ்ரீவேங்கீசுவரர் கோயிலில் நிகழ்ந்த பங்குனி உத்திர விழாக் காட்சி (9—4—71).



சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிற் பங்குனி யுத்தரவிழாவில்,
அறுபத்துமூவர் திருவீதியுலா விழாக்காட்சி.



சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலுக்கு, நமது அறநிலைய அமைச்சர்
மாண்புமிகு. திரு. எம். கண்ணப்பன் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தல்.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34
Printed at General Printers, 14-Poonamallee High Road, Madras-3. Editor: N.R.MURUGAVELL, M.A., M.O.L